# அமுது

தமிழுக்கும் அமுதென்று பேர்

AMUDHU

ஊற்று 2
துளி 3
JANUARY 2000



இலங்கையின் மாதாந்த குடும்ப சஞ்சிகை - ஜனவரி 2000 -30/-

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஷெல் கற்றுத்தந்த சுற்றாடல் பாடம் விலைமதிப்பற்றது.



ஷெல் எங்கள் பாடசாலையில் நடத்திய மீள்பாவனை பற்றிய விளக்கத் திட்டத்தின் பயனாக நானும் எனது நண்பர்களும் சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருக்கக் கற்றுக்கொண்டோம்.

குப்பைகூழங்கள் மற்றும் கழித்தொதுக்கும் பொருள்களைக் குறைத்தல், மீளப் பயன்படுத்தல், புதுப்பித்துப் பயன்படுத்தல் என்பன பற்றி ஷெல் எமக்கு விரிவாகச் சொல்லித் தந்தது. பாடசாலையிலும் வீட்டிலும் நாம் வீசியெறியும்



பொருள்களை எவ்வாறு மீளப் பயன்படுத்த முடியும் என்பதை நரம் அறிந்துகொண்டோம். மீள்பாவனை முறைகளைக் கையாண்டால் பொலித்தீன் பைகளினால் வடிகால்கள் அடைபடுவதைத் தவிர்க்க முடியும். நுளம்புத் தொல்லையைக் குறைக்க முடியும். இதனால் கொழும்பு மாநகரத்தில் சுகாதாரமான வாழ்க்கைச் சூழல் உருவாகும். எமது வாழ்க்கையை மேம்படுத்துவதில் ஷெல் ஆழ்ந்த அக்கறை கொண்டுள்ளது என்று பலர் சொல்லக் கேட்டிருக்கிறேன். இது முற்றிலும் உண்மை.

*ஷமீலா செனவிரத்ன*
**ஷெல் பாடசாலைச் சுற்றாடல் திட்டத்தில் பங்குபற்றிய மாணவி**

GRANT McCANN

*வாழ்வைச் சிறப்பிக்கத் தன்னை அர்ப்பணிக்கும்* **Shell GAS**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமுது வாசகர்களுக்கு

நத்தார்
மில்லேனிய
ரமழான்
பொங்கல்




## அமுதக் கடலில்...


அமுத வாசல் . . . . . . . . . . . . . . 2

சிக்கனமான சிலந்தி . . . . . . . . . . 5

**நெற்றிக்கண்** . . . . . . . . . . . . . 6

வாசலைத் தாண்டிய கடிதங்கள் . . . 7

**அரசியல் அரங்கம்:**

மரணத்தை வென்ற தேர்தல் . . . . . . 8

தேர்தல் சர்க்கஸ் . . . . . . . . . . . . 13

அற்பத்தனமான அரசியல் ஆலோசனை..15

**கவிதை:**

இருபத்தொன்று ஒரு நம்பிக்கை . . . . 17

பாராளுமன்ற உரைபெயர்ப்பு.. . . . . . 18

**சிறுகதை:**

இடிகின்ற சிந்தனைகள் . . . . . . . . . 21

வெள்ளிப் பனி மீது வசீகரம் . . . . . . 22

**சிறுகதை:**

தேவதை சொன்ன கதை . . . . . . . . . 25

காலம் எழுதிய டயரி . . . . . . . . . . . 28

**சிறுகதை:**

புயலான பூ . . . . . . . . . . . . . . . 30

**கவிதை:** .நீங்கள் தூவிய மலர்கள். . . 32

கிரக சஞ்சாரம்... . . . . . . . . . . . . 33

எய்ட்ஸ் வில்லன் . . . . . . . . . . . . 34

Y 2 K ப்றொப்ளம் . . . . . . . . . . . . 38

குங்.ஃபூ:

தாவோ தத்துவம் . . . . . . . . . . . . 40

**சினிமா:**

சினிமாவில் நகைச்சுவை . . . . . . . . 42

**நோயற்ற:** அவசரக் கருத்தடை . . . . . 46

மொறு மொறு சிப்ஸ் . . . . . . . . . . . 47

நூல் அறிமுகம் . . . . . . . . . . . . . 48


**உங்கள் ஆக்கங்கள் அபிப்பிராயங்களை அமுது வரவேற்கிறது.**


**ஆசிரியர்,**
**'அமுது'**
**இல: 35, டி.ஆர். விஜேவர்த்தன மாவத்தை,**
**கொழும்பு 10.**
**தொலைபேசி: 454283, 421181** Ext 347
**ஃபக்ஸ்: 320677**
E-Mail: webmgr@sri.lanka.net


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு மாதக் காத்திருப்பை அர்த்தப்படுத்தும் அமுது!



அமுதே உன் ஆக்கங்கள் அமுதுதான்பா... படு சூப்பர்...ஒவ்வொருபக்கமும்...இளைத்தமக்களின் சோகங்களையும், இலைமறை காய்களையும்... உண்மையான அரசியல் அரங்கையும் "குங்பூ" அறிவையும்தருகிறாயே...!அமுதேஉன்னில்வரும் "ஜோக்" எல்லாமே என்னை மிகவும் கடிக்கிறது. மொத்தத்தில் நீயொரு அமுதவாசல்தான்!

**பர்சானா சஹீட்,**
**எதுன்கஹகொட்டுவை.**

அரசியலரங்கம் அற்புதம்! தமிழ்ப் பத்திரிகையுலகில் அமுது தனக்குரிய தனி இடத்தைப் பதிந்து கொண்டுவிடும் என்ற நம்பிக்கை வருகிறது. துணிச்சலாகத் தொடருங்கள். முத்த வகைகள் அவ்வளவுதானா?

**அருமைநேசன்,**
**குருநகர்.**

தமிழ்ப் பொது வேட்பாளராகப் போட்டியிடும் குமாரின் நப்பாசையும், புலிகளை ஆதரித்துவிடும் அறிக்கைகளாலாவது புலிகள் மனம் குளிர்ந்து அதற்கு அனுமதிப்பார்களென்ற குமாரின் கனவும் பலிக்கவில்லை. அவரது அந்த ஆசையில் மண் அள்ளிப் போட்ட அவரது "அபிமானத்துக்குரிய" புலிகளை நாடி பிடித்தறியத் தெரியாத இவர், இன்னும் அவர்களுக்கு வக்காலத்து வாங்க வெட்கமில்லை?

**க. சத்தியகீர்த்தி,**
**யாழ்ப்பாணம்.**

அமுது படங்கள், பக்க வடிவமைப்பு எல்லாவற்றிலும் பெருமிதப்படும்படியாக இருக்கிறது. சோ.ப. தமிழாக்கியிருக்கும் கவிதை நன்று. ஒவ்வொரு இதழிலும் மொழிபெயர்ப்புக் கவிதை ஒன்றாவது தர முயலவும்.

**கு. தாரணி,**
**வவுனியா.**

ஒரு மாதக் காத்திருப்பை அர்த்தப்படுத்தியது அமுது. மிக நேர்த்தியாக கருத்துக்கள் அடர்த்தியாக பக்கங்களை அலங்கரித்திருந்தன. சிறுகதை, கட்டுரைகள் எல்லாம் மனசோடு பேசுவது போன்றிருந்தது....

'தினமுரசு' ஆசியருக்கு அப்பத்திரிகையின் ஆர்வலர்கள்... அபிமானிகள் போன்றோர்... அனுதாபம் அல்லது எதிர்ப்புக் காட்டாதிருந்தது எனக்கும் ஆச்சரியமாகவே இருந்தது. அது பற்றிய விளக்கத்தை அமுது தந்தபோது வியந்து போனேன். (விடயம் எழுதப்பட்ட மாதிரியை...) இத்தகைய நிலையை ஊரில் "ஏவம் கேட்பது" என்று நறுக்கென்று சொல்வார்கள்.

சினிமாக் கேள்விகளை முற்றாகத் தவிர்த்து இலக்கியத் தரமான ஓர் கேள்வி பதில் பகுதியேனும் அவ்விடத்தில் சேர்ப்பது சிறப்பு. வழிபாடும் வன்முறையும்.... கட்டித்தங்கம்... என்பன நல்ல அம்சங்கள்.

"பக்திவதை" இதை எழுதி மூடத்தனமொன்றின் முகத்திரையைக் கிழித்துக் காட்டியதை ரொம்பவும் நன்றிகளுடன் பாராட்டுகிறேன். சமூக விழிப்புணர்ச்சிக்கு தொடர்ந்து இது போன்று எழுதி வரலாம்... சகல மதங்களிலும் சாக்கடை அனுஷ்டானங்கள்தான் வியாபார ரீதியாக கொடிகட்டிப் பறக்கிறது. மனிதனும் அதிலேதான் மூழ்கிக் கிடக்கிறான்.

ஆசிரியர் குழுவுக்கும், அமுதுக்காக உழைக்கும் அனைவர்க்கும் பாராட்டுக்கள்..

இம்முறை அமுதை திருப்தியுடன் படித்து முடித்து...பூரணசந்தோஷம். அதுதான் உடனேயே மடலை வரைந்தாயிற்று.

**அனார்,**
**சாய்ந்தமருது.**

அமுது டிசம்பர் மாத இதழ் படித்தேன். கண்ணைக் கவரும் அட்டைப் படத்தில் சுமங்கலிப் பெண்ணுக்கு மங்கலத் திலகமிடும் காட்சி சிறப்பாக உள்ளது. அத்துடன் வாசலைத் தாண்டிய கடிதத்தில் நேர்மையுடன் நியாய முடிவை ஏற்கும் மனப்பக்குவத்தை இருதரப்பாரும் வளர்த்துக் கொள்ளல் அவசியம். கூடியவிரைவில் யுத்தத்தை நிறுத்தி நாட்டையும் மக்களையும் பாதுகாப்பதற்கான ஏற்பாட்டைச் செய்வதற்கு அமுது வாயிலாக வேண்டுகிறோம்.

**கந்த. ஞானமுத்து,**
**கைதடி மேற்கு.**

டிசம்பர் மாத அமுதை சுவைத்தேன். ஜனாதிபதி தேர்தல் சம்பந்தமான கட்டுரை பக்கச் சார்பில்லாமல் தக்க முன்னுதாரணங்களுடன் அருமையாக அமைந்திருந்தது.

தினமுரசு என்ற ஐந்தெழுத்தை இலட்சக்கணக்கான வாசகர்களின் உதடுகளில் உச்சரிக்கச் செய்து பத்திரிகை வானில் என்றும் உதய சூரியனாகத் திகழ்ந்த அற்புதனின் மறைவு உண்மையில் அனைவரையுமே அதிரும்படிதான் செய்துவிட்டது.

'காதலாகி கசிந்து...' காலத்துக்கேற்ற சிறந்த கதை. மொத்தத்தில் "அமுது" அள்ள அள்ளக் குறையாத பொக்கிஷங்களைக் கொண்ட அழகுப் பெட்டகமாகவே திகழ்கிறது. அப்புறம் தேயிலைத் தோட்டங்களுக்குள்ளும் அங்கேயிருக்கும் லயன்களுக்குள்ளும் கொஞ்சம் ஊடுருவிப் பார்த்தால் ஊரறியாத பல உண்மைகளை வெளிச்சத்துக்குக் கொண்டுவரலாமே சுவாமி....

**பாலா சங்குப்பிள்ளை,**
**அட்டன்.**

ஜனநாயக நாட்டின் முதுகெலும்பான பத்திரிகை சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஜனநாயகத் தலைவர்கள் எனப் பறைசாற்றுபவர்கள் திராணியற்றவர்களாகவே உள்ளனர். அன்று பிரேமாவின் காலத்தில் ரிச்சட் டி சொய்சாவை முதன் முதலாக மனித வேட்டையாடி, தமது இரத்த வெறி(பசி)க்கு ஆகாரமாக்கியது இக்கொடிய மிருகங்கள். அதோடு நின்றுவிடாமல் தொடரும் இவ் அவல நிலை இன்றைய காலத்திலும் தொடர்ந்து 'சட்டன்' ஆசிரியர் ரோஹண குமாரவையும், ஒப்பற்ற எழுத்தாளனும் தினமுரசு ஆசிரியருமான அற்புதராஜாவையும் வேட்டையாடியதன் மூலம் முற்றுப் பெறாமல் நிற்கிறது.

அமுதே! ஆயுத முனையை விட உன் பேனா முனை கூர்மையானது என நிரூபித்துக் காட்டுவாய் எனும் நம்பிக்கையில்...

**என். எம். சனீர்,**
**கல்பிட்டி.**

அமுதுக்கு ஒரு வயதே பூர்த்தியடைந்துள்ளது. ஆனால், துணிச்சல் பல தசாப்தங்களாக வெளிவரும் தமிழ்ப் பத்திரிகைகள், சஞ்சிகைகளை மிஞ்சிவிட்டது.

வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம்கள் தொடர்பாக இருட்டடிப்புச் செய்துவரும் தமிழ் ஊடகத்துறைக்குள்ளே மிகவும் துணிச்சலாக இவர்களுக்கென 12வது அமுதில் ஒன்பது பக்கங்களை ஒதுக்கி இவர்களது பிரச்சினைகளை அச்சொட்டாக வெளிக்கொணர்ந்தமைக்கு என் பல கோடி நன்றிகள் அமுதுக்கு உரித்தாகட்டும்.

**ஏ. எஸ். எம். றயீஸ்,**
**பேராதனைப் பல்கலைக்கழகம்.**

ஆரோக்கியமாய், அறிவு பூர்வமாய் வளர்கிறாய். வாழ்த்துக்கள். வைரமாய் வைரமுத்துவை அறுத்தீர்களா? வலித்திருக்கும். சக்கரவர்த்திக்கு ஒரு சபாஷ். லொட்ஜ் வாழ்வை சென்னதற்கு பாராட்டுக்கள். வாசலைத் தாண்டிய கடிதம் இதயத்தை நெருடுகிறது. யார் யாருக்காக அழுவது என்பதை விடுத்து தன்னோடு பிறருக்காகவும் சற்று கவலைப்பட நேரத்தை தேட வேண்டும் என்பது பிரார்த்தனை.

**றஸீனா புகார், ஹுனுகல.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது
தேசிய தமிழ் சஞ்சிகை



# நல்லதோர் வீணை செய்தே....


பிரதமஆசிரியர்:
**எஸ். மனோரஞ்சன்**
இணையாசிரியர்:
**து. பாஸ்கரன்**
ஆசிரிய பீட ஆலோசகர்:
**டி. பீ. எஸ். ஜெயராஜ்**
கட்டுரையாசிரியர்:
**சி. சிவகுமார்**

ஏனைய ஆசிரிய பீடத்தினர்:
**எம். எச். எம். ஷம்ஸ்**
**எம். எஸ். எம். ஹிஷாம்**

பிரதம வடிவமைப்பாளர்:
**சி. முரளிதரன்**
ஓவியர், கார்டூனிஸ்ட்:
**இ. ப்ரகீத்**
பக்க வடிவமைப்பு (கணனி):
**ஜெரால்ட் எஸ். நடேசன்**
எழுத்தமைப்பு (கணனி):
**எஸ். எம். பிரேம்குமார்**

விளம்பர முகாமையாளர்:
**வருண மல்லவஆராச்சி**
தயாரிப்பு முகாமையாளர்:
**அபய அமரதாஸ**
அச்சமைப்பு முகாமையாளர்:
**ந. சற்குணநாதன்**
விற்பனை முகாமையாளர்:
**அனுர அபேரத்ன**

அச்சிட்டு வெளியிடுவோர்:
**அசோஸியேடட் நியூஸ் பேப்பர்ஸ்**
**ஒ..ப் சிலோன் லிமிடெட்**
**இல. 35, டி.ஆர். விஜேவர்த்தன மாவத்தை,**
**கொழும்பு 10.**

Chief Editor:
**S. Manoranjan**
Associate Editor:
**T. Baskaran**
Editorial Consultant:
**D. B. S. Jeyaraj**
Features Editor:
**S. Sivakumar**

Other Editorial Staff:
**M.H.M. Shums**
**M.S.M. Hisam**

Chief Designer:
**C. Muralitharan**
Computer Graphic Artist/Cartoonist:
**P.R.B.Ekkneligoda**
Computer Page make-up:
**Gerald S. Nadesan**
Computer Typeset:
**S. M. Premkumar**


மில்லேனியம்!
ஒரு பாரிய காலகட்டத்தின் மாற்றம்.
வருடங்கள் மாறுவதாகவல்ல, தசாப்தங்கள் மாறுவதாகவல்ல, நூற்றாண்டுகள் மாறுவதாகவுமல்ல....
இது ஆயிரம் ஆண்டுகளின் கடவை. இந்தக் கடவையைத் தாண்டும் தருணங்கள் மிகப் பரபரப்பானவை. இத்தகைய தருணத்தைத் தரிசிக்கக் கிடைத்த வாய்ப்பும் அரியது.
சென்ற ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் நாம் எப்படியிருந்தோம் என்பதைத் திரும்பிப் பார்த்தால் இந்த ஆயிரம் ஆண்டுகளில் மனித குலத்தில் ஏற்பட்டுள்ள பாரிய வளர்ச்சியும் மாற்றமும் புரியும். கடந்த ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் மனிதனைச் சூழ்ந்திருந்த ஆபத்துக்கள் என்ன? அவனுக்கிருந்த பாதுகாப்பென்ன? அவனுக்கிருந்த நம்பிக்கைகள் என்ன? அவனது விழுமியங்கள் என்ன? அவனது சமூக அமைப்பு என்ன? அவனது நாகரீக வளர்ச்சி நிலை என்ன? அவனுக்கிருந்த அறிவு என்ன? அவனுக்கிருந்த வசதி வாய்ப்புகள் என்ன? அதைவிட அவனது தர்மநியாயங்கள் என்ன? அந் நிலையிலிருந்து இந்நிலைக்கு நாம் உயர்ந்ததற்குக் காரணம் என்ன? நிச்சயமாக மனித குலத்தின் மிக நெடுங்கால கடின உழைப்புத்தான் என்பதை நாம் மதித்தே ஆகவேண்டும். இன்று பிறக்கும் குழந்தைகள் வெறுங்கையோடு பிறக்கவில்லை. அவர்கள் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகால மனிதகுலத்தின் உழைப்பினால் பின்னப்பட்ட ஏணைக்குள்தான் ஏந்தப்படுகிறார்கள்.
அதனால் தாம் எதற்கும் பொறுப்புச் சொல்லத் தேவையில்லை என்று கூற தார்மீக உரிமையற்றவர்களாகிறார்கள். அத்தோடு எதிர்காலச் சந்ததிகளுக்கு தம் பங்களிப்பு என்ன என்பதையும் அவர்கள் சிந்திக்க வேண்டிய கடப்பாடு உடையவர்கள்.
இதேவேளை இந்த ஆயிரம் ஆண்டுகளில் மனித குலம் கண்ட வளர்ச்சியை மட்டுமல்ல, அத்தோடு வளர்ந்துள்ள வன்முறைகள், ஒடுக்கு முறைகள், அழிவுகர சாதனங்கள் ஆகிய பாதகமான அம்சங்களையுமிட்டு இத்தருணத்தில் கரிசனை செலுத்த வேண்டும். அடுத்த மில்லேனியத்துக்கு நாம் காவிச் செல்லும் பல முன்னேற்றகரமான விடயங்களுடன் இந்த நாசகரமான விடயங்களும் உள்ளடங்கித்தான் இருக்கின்றன. அத்தோடு ஏதோ புதிய கிரகத்துக்குள் நுழைவது போன்ற தோற்றப்பாட்டைத் தந்திருக்கும்புதிய மில்லேனியப் பிரவேசத்தில் வறிய நாடுகளின் ஏழை மக்களுக்கும் நுழைவுச் சீட்டு கிடைக்குமா என்ற கேள்வியும் உள்ளது எம் மனசாட்சிக்கும் அங்கே ஓரிடம் தேவைப் படுகிறது.

-ஆ-ர்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரமுகவுடன் கணக்கை ஆரம்பியுங்கள்

## 14%

சேமிப்புச் சான்றிதழ்களுக்கு

தினமும்
வங்கி அலுவலக நேரம்
காலை 9.00 மணி முதல்
இரவு 8.00மணி வரை
சனிக்கிழமைகளில்
காலை 5.00மணி முதல்
1.00 மணி வரை

## 11%

சேமிப்பு கணக்குகளுக்கு

ATM &
டெலிபேங்கிங்
வசதிகளும் உண்டு

தொடர்பு கொள்ளுங்கள்: 565418, 075 – 331101, 565998 அல்லது 565624

பிரமுக
வங்கி

316, காலி வீதி, கொழும்பு – 3 பிரதான அலுவலக தொலைபேசி : 565220 – 3
பெக்ஸ் : 565224 தலைமை அலுவலகம் தொலைபேசி : 565411 – 16

NETWORK


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சிலந்தியின் முகத்தின் குளோஸ் அப்

# வாழ்க்கைப் பிச்சைக்காய் வலை பின்னும் கலைஞர்கள்

- எர். எஸ். டினி.

**ஆண் சிலந்தி பெண் சிலந்தியைவிடச் சிறியது. ஆச்சரியம் என்ன தெரியுமா? இந்த ஆண் சிலந்திகள் ஒரே ஒரு முறைதான் கலவி செய்ய முடியும். பெண் சிலந்தி தனது ஆசையை ஆசை நாயகனிடம் தீர்த்துக் கொண்டதும்... என்ன கொடுமை! தான் உறவு கொண்ட அந்த ஆண் துணைவனைக் கொன்றுவிடும். அதனால் இந்த ஆண் சிலந்திகள் தான் உண்மையான ஏகபத்தினி விரதத்தைக் கடைப்பிடிப்பவை போலும்!**

பல கோடி ஆண்டுகளுக்கு முன் தோன்றிய ஓர் உயிரினம் அடுத்த மிலேனியத்திலும் வாழப் போகிறதென்றால் ஆச்சரியப்படுவீர்கள்.

சிலந்தி!

விஞ்ஞானப் பாகுபாட்டில் **'ஆத்திரப்போடா'** கணத்தைச் சேர்ந்த **அரக்னிடா** குடும்பத்து உயிரினங்களே சிலந்திகள்.

சிலந்திகளில் பல வகை. தோட்டச் சிலந்திகள், வீட்டுச் சிலந்திகள், நீர்ச் சிலந்திகள் என்பன இவற்றுட் சில. சிலந்தியின் தலை வேறாகவும், உடம்பு வேறாகவும் இரு பகுதிகளாகப் பிரிபட்டிருக்கும்.

நீர்ச் சிலந்திகள் குளங்களிலே தான் அதிகமாக வசிக்கும்.

மிக விரைவில் தாக்குதலுக்குள்ளாகும் சிலந்திகள், பெரும்பாலும் அமைதியானவை மட்டுமல்ல அப்பாவிகளும்தான். அவற்றுள் ஓர் இனம் மாத்திரம் மனிதனையே மரணிக்கச் செய்யுமளவுக்கு தன் உடம்பில் விஷத்தை வைத்திருக்கிறது. அது புலி முகச் சிலந்தி என அழைக்கப்படுகின்றது. இது உருவத்திலும் பெரியது. இந்த புலிமுகச் சிலந்திகள் வலை பின்னுவதில்லை. பொந்துகளிலேயே வசிக்கின்றன. பொந்துகளுக்குள் ஒளிந்து கொண்டு தமக்கு ஆபத்து வராத வண்ணம் பசை போன்ற ஒரு திரவத்தைச் சுரந்து அதனால் பொந்தின் வாயிலை மூடிக் கொள்ளுகின்றன.

பொதுவாக ஏனைய சிலந்திகள் வலை பின்னியே தமது வாழ்விடங்களை அமைத்துக் கொண்டிருக்கின்றன.

சிலந்திகள் வலை பின்னுவதே ஒரு தனி அழகுதான். முதலில் தனது வீடு அமைய வேண்டிய விதத்துக்கு ஒரு சட்டம் (Frame) அமைத்துக் கொள்ளும். பிறகு அதிலிருந்து நேராக நூல் போன்ற அதன் திரவத்தை இழுத்து வந்து சரியாக சைக்கிள் சில்லு போல மத்தியில் ஒரு இடத்தில் இணைக்கும். பின்பு வெளிப்புறத்திலிருந்து கொண்டு ஓடியோடி வளையத்தைப் பின்னும். மனிதனால் பின்ன முடியாத அளவுக்கு சிலந்தி மிகவும் நுட்பமாகவும் நேர்த்தியாகவும் தன் வலையைப் பின்னும். இவ் வலைகள் ஆடம்பரமற்றவை.

சிலந்திகள் கிடைத்ததைக் கொண்டு திருப்தியுறுபவை. போதாது என்ற மனம் இவற்றுக்கு எள்ளவும் இல்லை.

சிலந்தி மிகக் கஷ்டப்பட்டு கட்டும் வலையை நமது தும்புத் தடிகள் ஒரு நொடிப் பொழுதில் தட்டிவிட்டாலும், அவை உறுதியற்றவை எனத் தீர்மானித்து விடாதீர்கள். அந்த இழைகள் மிகவும் உறுதியானவை. எந்தளவுக்கென்றால் சிலந்தி வலையின் இழையின் பருமனில் உருக்குக் கம்பி ஒன்றைச் செய்தால் அக் கம்பியை விட 20 மடங்கு சக்தி வாய்ந்ததாம் சிலந்தியின் இழை.

சிலந்தியின் வலைகளே அவற்றின் உணவுகளைப் பிடிக்கும் பொறிகள். பறந்து வரும் சிறு பூச்சிகள் சிலந்தி வலையில் பட்டவுடன் ஒட்டிக் கொள்ளும். மத்தியில் இருந்து காவல் காத்துக் கொண்டிருக்கும் சிலந்தி ஓடி வந்து தன்னிடமிருக்கும் நச்சுத் திரவத்தை அந்த பூச்சியின் மீது செலுத்தும். அந்தத் திரவம் அப்பூச்சியின் உள்ளுறுப்புகளைக் கரைத்து ஒரு திரவ நிலைக்கு கொண்டுவரும். பின் சிலந்தி அந்தத் திரவத்தை உறிஞ்சிக் குடித்துவிட்டு இறந்த உடலை வெறும் கோதாக உதறிவிட்டு மீண்டும் போய் மத்தியில் அமர்ந்து கொள்ளும்.



எல்லாச் சிலந்திகளிலும் சிறு பூச்சி, விலங்குகளைக் கொல்லும் நச்சுத் திரவம் வாயில் இருக்கும். சிலந்தியின் வயிற்றிலிருந்து சுரக்கும் ஒரு வகைத் திரவமே இதுவாகும். சில வேளைகளில் பெரிய பறவைகளையும் பதம் பார்த்து விடும் இந்தச் சிலந்திகள்.

சிலந்தி வருடத்துக்கு 4 முறை தனது வளர்ச்சிக்காக (பாம்பு செட்டை கழற்றுவது போல) தனது தோலைக் கழற்றிக் கொள்கிறது.

இந்தச் சிலந்திகளுக்கும் மனிதனால் கெட்ட காலம் பிறந்து விட்டது. முதலில் வீடுகளில் நாம் இவற்றைக் கண்டதுமே கொன்று விடுவது. வெளிநாடுகளில் காடுகளுக்குச் சென்றே சிலந்திகளை சிலர் வேட்டையாடி அதை 1 முதல் 2 டொலருக்கு விற்கிறார்கள். ஏனென்றால் வாசனைத் திரவியங்களில் கலக்கும் அல்கஹோலைப் பெறுவதற்காக. ஒரு இனத்தையே கொன்று அதிலிருந்து அற்பமான ஒரு சுகம் கிடைக்குமென்றாலும் எவ்வளவு இன்பம் மனிதனுக்கு! •

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முகமூடி கிழிந்த அரசியற் போக்கிரித்தனம்




நக்கிரன்

இலங்கையின் இந்த 4 ஆவது ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டதுமே இத் தேர்தலில் ஏதாவது பயனுள்ள விடயத்தைச் சாதிக்க முடியுமா என்று பார்ப்பதைவிட இதில் இயன்ற அளவு குழப்பத்தை ஏற்படுத்த முடியுமா என்று முனையும் எதிர்மறையான சிந்தனைதான் இன்று தமிழ் மக்களுக்கான போராட்டத்தை முன்னெடுப்பதாகக் கூறி யுத்தம் புரியும் புலிகளிடம் காணக்கூடியதாக இருந்தது.

இனப்பிரச்சினைக்கு இந் நாட்டின் அரசாங்கங்கள் இன்னும் ஒரு அரசியல் தீர்வை வழங்கவில்லை என்பது உண்மை.

ஆனால் அதை நோக்கி அவர்களைத் தள்ளுவதா அல்லது எதையுமே செய்ய விடாது குழப்பி விடுவதா ஆரோக்கியமான வழிமுறையாக இருக்கும்?

ஜனாதிபதித் தேர்தலில் தமிழ் மக்கள் அக்கறைப்படத் தேவையில்லை என்றே புலிகள் தெரிவித்தனர். அது 'சிங்கள நாட்டின் தலைவர்களைத் தேர்ந்தெடுக்கும் தேர்தல்' என்றே அவர்கள் கூறினர். லண்டனில் மாவீரர் தின உரையாற்றிய புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் இதையே கூறியிருந்தார்.

ஆனால் புலிகள் இத் தேர்தலில் மிகுந்த அக்கறை காட்டியுள்ளதையே நாம் நடைமுறையில் கண்டோம். அதுவும் நேர்மையான அக்கறையாக இருந்தால் தமிழ் மக்களுக்கு ஏதாவது உபயோககரமாக அமைந்திருக்கலாம். ஆனால் அதுவோ தமிழ் மக்களைப் பணயம் வைக்கும் வக்கிரமான யுத்த நகர்வுகளுக்கான சதுரங்க விளையாட்டாகவே அமைந்திருந்தது. தினை விதைத்திருந்தால் தினை விளையும். ஆனால் வினை விதைக்க முயன்றால்...?

ஆம், புலிகள் இத் தேர்தலை எவ்வாறு நோக்கினர் என்பதைப் புரிந்துகொள்வது பலருக்கு மிகச் சிக்கலானதாக இருக்கிறது. ஏனெனில் அவர்கள் தெரிவித்த கருத்துக்களும் நடந்து கொண்ட விதங்களும் ஒன்றுக்கொன்று மாறுபட்டதாக இருந்தன. வழமையாக புலிகள் செய்யப்போவதை முன்னரே நியாயப்படுத்தி வைக்கின்ற கைங்கரியத்தைச் செய்யும் இந்த ஆதரவாளர் குழாம் அவ்வாறு இத்தடவையும் செய்ய நினைத்து பின்னர் பின்வாங்கித் தம்மைத் தாமே அம்பலமாக்கிக் கொண்டனர்.

இதில் அதிக சாயம் வெளுத்துப்போனவர் வேறுயாருமில்லை, குமார் பொன்னம்பலம்தான். அவருக்கு ஏற்பட்ட தர்ம சங்கடம்தான் இந்தக் கொடூரமான அரசியல் வேள்விக்குள்ளும் சற்று நகைச்சுவையான பக்கம்.

குமார் முதலில் பொதுத் தமிழ் வேட்பாளர் என்ற கோஷத்தை தூக்கிப் பிடித்தார். ஆனால் புலிகள், இத் தேர்தலில் தமிழர்கள் அக்கறைப்படத் தேவையில்லை என்று அறிவித்துவிட்டவுடன் அக் கோஷத்தை அப்படியே 'தொப்'பென்று கீழே போட்டு உடைத்தார். அடுத்து, இத் தேர்தலை நிராகரிப்பதுதான் புலிகளின் நிலைப்பாடாக இருக்கிறது என நம்பி அதைப் பிரசாரம் செய்யலாம் என முனைந்தால் அதற்கும் அவருக்குத் தடை வந்தது.

விலகி நிற்பதாகத் தெரிவித்த புலிகளோ ரணிலை மறைமுகமாக ஆதரித்தார்கள். அந்த சமிக்ஞையைப் புரிந்துகொண்ட ஜோசப் பரராஜசிங்கம் போன்ற தமிழ் அரசியல்வாதிகள் தங்கள் வேலையை அதற்கேற்றவாறு வகுத்துக் கொண்டார்கள்.

இதைக்கண்ட குமார் தனது அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் சார்பாக வினாயகமூர்த்தி மூலம் ஜனாதிபதி தேர்தலில் ரணிலை ஆதரிக்கும்படி அறிக்கை விடச் செய்தார்.

புலிகள் ரணிலை மறைமுகமாகவே ஆதரித்தனரேயன்றி அந்த ஆதரவைப் பகிரங்கமாகத் தெரிவிக்க விரும்பவில்லை. அதனால் குமார் செய்த வேலை அவர்களைக் காட்டிக் கொடுப்பதுபோல் அமைந்திருந்தது. இதனால் அவர்களுக்கு ஏற்பட்ட அதிருப்தியை உணர்ந்தோ என்னவோ குமார் மீண்டும் வினாயகமூர்த்தியைக் கொண்டே அது அ. இ. த. காங்கிரஸின் நிலைப்பாடல்ல என்ற ஒரு மறுப்பறிக்கை விடுத்தார்.

இவ்வாறாக, இக்கட்டில் மாட்டிக்கொண்ட குமார் பொன்னம்பலம் தனக்கு நேர்ந்த அவமானத்தைத் தானே உணராதிருக்கக்கூடிய சுரணையிழந்த தன்மை கொண்டிருப்பதால் எதுவும் நடவாதது போலச் சிரித்தபடி இருக்கிறார்.

இதே நிலைமை புலி ஆதரவாளர்கள் பலரைக் குழப்பத்தில் ஆழ்த்தியிருந்தது.

ஏனெனில், இத் தேர்தலில் விலகியிருக்கும்படி கூறிய புலிகள் ரணிலை ஆதரிப்பது ஏன் என்பதற்கு நியாயப்படுத்தக்கூடிய காரணங்களை தெரிவிக்க முடியாதிருந்தது. ரணில் ஒற்றையாட்சியையே வலியுறுத்துகிறார். வடக்குகிழக்கு இணைவதை எதிர்க்கிறார். அப்படியானால் புலிகள் ஒற்றையாட்சியின்கீழ் செல்லத் தயாரா என்பதை நம்ப முடியாத நிலை.

ஆனால் புலிகளின் நிலைப்பாடு தேர்தல் நாளன்றுதான் தெளிவாய்த் தெரிந்தது. அன்று கிழக்கு மாகாணத்தில் தமது கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் இருந்த மக்களை ரணிலுக்கு வாக்குப் போடும்படி கூறி ட்ரக்டர்களில் ஏற்றி அனுப்பிவைத்தார்கள்.

அங்கிருந்த வாகனச் சங்கத்திடம், மக்களை வாகனங்களில் ஏற்றி செங்கலடியூடாக வாக்குச்சாவடிகளுக்கு கொண்டு செல்லும்படி பணித்தார்கள். தேர்தலுக்கு முதல் நாள் படுவான்கரையில் புலிகள் மக்களிடம் ரணிலுக்கு வாக்குப் போடும்படி பகிரங்கமாகவே ஒலிபெருக்கிமூலம் அறிவித்தார்கள். அதுமட்டுமன்றி வாக்களிப்பில் ரணிலுக்குப் போடாது ஏமாற்றினால் தாம் அதை வாக்குச் சீட்டு அடிக்கட்டை மூலம் கண்டுபிடிப்பார்களெனவும் அப்படிச் செய்பவர்களுக்கு தண்டனையும் தெண்டமும் விதிக்கப்படுமெனவும் மிரட்டியுள்ளனர்.

அதேவேளை மக்கள் தமது கட்டுப்பாட்டுக்குள் இல்லாத யாழ்ப்பாணத்தில் தேர்தல் நடத்த விடாது குழப்புவதற்காக தம் சொந்த மக்கள்மீதே ஷெல் தாக்குதலை நடத்தினர்.

மகேஸ்வரன் என்னும் வர்த்தகர் மூலம் ரணிலுக்கு பகிரங்கமாகவே அங்கு பிரச்சாரத்தை முன்னெடுக்க வைத்தனர். புலிகளின் அனுமதியின்றி அங்கு தனிப்பட்டவர்கள் எவரும் இப்படிப் பகிரங்கமாக ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கொடி கட்டிப் பிரச்சாரம் செய்ய முடியாதென்பது அனைவருக்கும் தெரிந்ததே.

ஐ.தே.க. வின் ஆட்சிக் காலத்தில் ஒடுக்குமுறை தாங்காமல் போராட்டத்தில் இறங்கிய விடுதலைப் புலிகள் இன்று ஐ.தே.க.வுக்காக தேர்தல் பிரசாரத்தில் கூட இறங்கிச் செயற்பட்டுள்ளார்களென்பதை அரசியலென்றா, போராட்டமென்றா நியாயப்படுத்துவது? இந்த அளவுக்கு அவர்கள் ரணிலை ஆட்சியிலேற்றப் பாடுபட்டிருக்க, தமிழ் மக்களுக்கு சிங்களத் தேசத்தின் தலைவரைத் தேர்ந்தெடுக்கும் இந்தத் தேர்தலில் சம்பந்தமில்லை என்று கூறியது வெறும் ஏமாற்றே. (உண்மையில் இந்தியாவின் தமிழ்நாட்டுத் தேர்தல்களில் கூட இவர்கள் நேரடியாக ஈடுபட்டிருந்ததை அங்குள்ளோர் அறிவர்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரணிலை ஆட்சிக்குக் கொண்டுவர பகீரதப் பிரயத்தனம் செய்த புலிகள் ஏன் ரணிலின் ஜா-எல கூட்டத்தில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடத்தினர் என்பது அடுத்த கேள்வி. புலிகளைப் புரிந்துகொள்ள அவர்களின் அதீத ஆதரவாளர்களாலேயே முடியாது என்பதுதான் இங்கே வெளிப்படை.

புலிகளுக்கு ரணிலை ஆட்சிக்கு வரவைக்க வேண்டுமென்றிருந்த அக்கறை சமாதானம் பேச அல்ல, மாறாக சண்டை பிடிக்கவே. யாருடன் வெற்றிகரமாகச் சண்டை செய்யலாம் என்பதையே புலிகள் தேடினார்களேயன்றி சமாதானம் செய்ய முடியும் என்பதையல்ல. அதனால் பலஹீனமான எதிரியைக் கதிரையில் அமர்த்துவதே அவர்களின் நோக்கம்.

புலிகளின் இந்த சாணக்கியத்தைப் புரிந்துகொள்ளாமல் போனால் ஒரே மயக்கமாகத்தான் இருக்கும்.

அதனால் தான் ரணிலை ஆதரித்தால் கூட ரணில் ஆட்சிக்கு வந்தால், தன்னோடு மோதப்போகும் இராணுவத் தளபதியாகக்கூடிய லக்கி அல்கமவை சந்தர்ப்பம் கிடைத்த நேரத்தில் தீர்த்துக் கட்ட அவர்கள் தயங்கவில்லை.

அதுபோல, சந்திரிகாவைப் பலிவாங்குவது மட்டும் புலிகளின் நோக்கமல்ல. ஒரு தேர்தல் தருணத்தில் நிகழும் ஜனாதிபதிப் படுகொலை பாரிய ஒரு இனக் கலவரத்தை தோற்றுவிக்கும் என்பது அவர்களுக்குத் தெரியும். இதனால் இன்று புலிகளுக்கு வக்காலத்து வாங்க முன்னிற்கும் கொழும்புத் தமிழர்களே அழிக்கப்படுவார்கள் என்பது தெரிந்திருந்தும் அதைத் தான் அவர்கள் எதிர்பார்த்தார்கள்.

இதன் மூலம் தாங்கள் மீண்டும் 1983 கலவரத்தின் பின் இருந்த அதி உச்ச சர்வதேச ஆதரவினை ஈட்டிக்கொள்ளவும், பெருவாரியான இளைஞர்களைப் போராட்டத்தில் குதிக்க வைக்கவும் முடியலாம் என கணக்குப் போட்டனர். இப்படியான ஒரு கலவர வேளையில், தமது தற்போதைய ஆயுத பலத்துடன் யாழ் குடாநாட்டைத் தாக்கிக் கைப்பற்ற.... அதேவேளை ரணிலை ஆட்சியிலும் ஏற்றினால்....

இதுவே புலிகளின் நோக்கமாக இருந்தது. இது எத்தனை பேரைப் பலிகொள்ளப் போகிறது, இந்த நாட்டில் இன்னும் எத்தனை நாள் இரத்த ஆறை ஓடச் செய்யப் போகிறது, தமிழ் மக்களுக்கு சமாதானக் காற்றை சுவாசிக்க எப்படி வழி ஏற்படப் போகிறது என்பதெல்லாம் அவர்களுக்குப் பிரச்சினையாக இருக்கவில்லை.

தமது ஆயுத மார்க்கத்துக்கான பாதைகளை வகுப்பதும் அதன் மேலாதிக்கத்தை நிறுவுவதுமே அவர்களது விடயமாக இருந்தது. இதற்காக அவர்கள் எந்தக் கீழ்த்தர அரசியல்வாதியையும் ஆதரிக்கத் தயங்கமாட்டார்கள் என்பதையே நாம் புரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது. ●

## பரிதாபம்

தமிழ் மக்களை வதைக்கும் அவசரகாலச் சட்டத்துக்குக் கையுயர்த்தி விட்டு, ஒரு பா.உ. ஆக இருந்துகொண்டு அதை வெளிக்காட்டாமல், விலாசம் போடாமல், தொலைபேசி இலக்கத்தையும் வெளியிடாமல், பத்திரிகையொன்றை நடத்தி தமிழினம் முழுவதையும் முட்டாளாக்க முயன்ற அற்புதனின் மரணம்பற்றி அமுது எழுதிய விபரங்கள் போதாது.

மக்களின் குரல் வானொலி நிகழ்ச்சியில் பிரபாகரனை யமனாகக் காட்டி நடித்தவர், கொழும்பில் சந்தேகத்தில் கைதான தமிழர்களை பிரேமதாசா காலத்தில் சித்திரவதை செய்தவர், தினகரனில் 'புல்லட் பொக்ஸ்' என்ற பகுதியில் புலிகளைக் காட்டமாக விமர்சித்தவர். இத்தனை முகங்களும் தமிழனுக்குத் தெரியாதென நினைத்துக்கொண்ட அற்புதனின் மரணம், யாழ். நூலகத்தை எரித்த காமினியின் மரணத்துக்குச் சமனாக உண்மையை நேசிக்கும் ஒவ்வொரு தமிழனும் கொண்டாட வேண்டிய மரணம்.

உண்மையில் புலிகளின் பத்திரிகைகூட சென்றடைய முடியாத இடங்களுக்கெல்லாம் சென்று புலிகளின் பிரசாரப் பத்திரிகை போலவே தினமுரசு செயற்பட்டது. அந்த வகையில் அற்புதன் புலிகளுக்கு வெகுவாக உதவியுள்ளார். ஆனால் புலிகளே செய்யாத இக் கொலைபற்றி புலிகள்கூட அலட்டிக்கொள்ளவே இல்லை. அனுதாபம் தெரிவிக்கவும் இல்லை. பரிதாபம்!

உண்மை என்னவெனில் அற்புதனைக் கொல்லுவதைவிட புலிகளுக்கு பல முக்கிய வேலைகள் இருந்தன. ஆனாலும் காலம் வந்ததும் அவர்களே அற்புதனின் கடந்த காலத்துக்காக அவரின் கதையை முடித்துத்தான் இருப்பார்கள்.

புலிகள் நடத்தும் போராட்டத்தில் குளிர் காய்ந்து கொழும்பிலிருந்து அரசியல் நடத்தவும், பத்திரிகைகள் மூலம் பணம் பண்ணவும் முயல்பவர்களுக்கு அற்புதனின் முடிவு நல்ல எச்சரிக்கை. (கொழும்பில் கார் கண்காட்சியில் கலந்துகொண்டுவிட்டு வன்னியில் உள்ள மக்களுக்காக நீலிக் கண்ணீர் வடித்து, புலிகள் ஆதரவுக் கோஷம் எழுப்பி, ஒருமுறையேனும் பாராளுமன்றம் செல்லத் துடிப்பவர்களுக்கும்......)

ரஜனி திரணகமவின் கொலையை நேரில் கண்ட அவரது மாணவர்கள் இன்னும் டொக்டர்களாக இலங்கையில் இருக்கிறார்கள். அப்படியிருக்க அக் கொலையைப் புலிகள் செய்யவில்லையென வக்காலத்து வாங்கியதற்கு தெய்வ தண்டனையே அற்புதனுக்கு நேரிட்ட மரணம். மதிமுகராசா கொலைபற்றி 'மதிமுகராசா அவர் பலமுகராசா' என எழுதினார். அற்புதனுக்கு எத்தனை முகங்களென இப்போது தெரிகிறதா? உண்மை என்றோ ஒருநாள் வெல்லும் என்பதற்கு இம் மரணம் சாட்சி. அற்புதன் என்ற இந்தக் கபட வேடதாரியின் நாடகங்களை அமுது சில தொடர்களிலாவது தரவேண்டும் என்பது என் அவா.

**- யதார்த்தநேசன்**
**மருத்துவ பீடம்**
**யாழ். பல்கலைக் கழகம்**

## வாசலைத் தாண்டிய கடிதங்கள்

## துணிவிருந்தால்...

உங்கள் ஆய்வுக் கட்டுரைகள், வாசகர் கடிதங்கள், வாசலைத் தாண்டிய கடிதம் என்பவற்றைக் கண்ணுற்று வருகின்றேன்.

உங்கள் ஆய்வுகள் யாவும் தமிழையும் தமிழனையும், தமிழ்த் தார்மீகத்தையும், தமிழன் தன்மானத்தையும் உலகிற்கு ஒரு துச்சமாகக் காட்டவும், தமிழனின் தன்மானத் தன்மையை இழிவுபடுத்தும் நோக்குடனேயே வெளியிட்டு வருகிறீர்கள்.

நாம் தனிப்பட்ட வகையில் சிங்களரையோ முஸ்லீம்களையோ வெறுக்கவில்லை. ஆனால் அவர்கள் எம்மினத்தைப் பொறுத்தமட்டில் செலுத்திவரும் இனவாத அடாவடித்தனத்தைத்தான் எதிர்க்கிறோம்.

பிழைகள் எங்கும் நடப்பவைதான். அவற்றைச் சுட்டிக்காட்டி திருந்தச் செய்வது ஒரு தமிழ்ச் செய்தி ஊடகத்திற்கு இருக்க வேண்டிய சிறப்பம்சமே. ஆனால் தங்கள் பிரசுரத்தை உற்று நோக்கும்போது சிங்கள, முஸ்லிம் மக்களிடையே - தமிழர்களுக்கிருக்கும் இடைவெளியை மேலும் அதிகமாக்கும் விதமாகவே அமைகின்றன.

ஒரு ஒடுக்கப்படும் இனம் எத்தனையோ உட்சதிகள், வெளி அழுத்தங்களுக்கு மத்தியில் தாம் கொண்ட கொள்கையை மக்களுக்கான சுதந்திரப் பாதையை தேர்ந்தெடுக்க உன்னதமான உயிர்த் தியாகங்களையும் உறுப்புத் தியாகங்களையும் இன்னமும் செய்த வண்ணம் இருக்கும்போது நீங்கள் அங்கு காணப்படும் பிழைகளை உரிமையுடன் திருத்த வராது உள்நோக்குடன் விமர்சித்து தமிழ் வீரத்தையும் மானத்தையும் சிதைக்கும் விதத்தில் செயற்படுவது மிகுந்த கவலையாகவே உள்ளது.

இது உண்மையான தமிழ் சஞ்சிகை என்றால் தமிழ் - முஸ்லீம் உறவுகளை சீர்படுத்தவும் வலுப்படுத்தவும் தமிழ் இனத்தை காப்பாற்றவும் உங்கள் செய்தி ஊடகத்தை பயன்படுத்த வேண்டும்.

மீண்டும் மீண்டும் தங்களிடம் நாம் கேட்பது தமிழையும் தமிழ் இனத்தையும் மேம்படுத்த முடிந்தால் முயலுங்கள் இல்லையேல் உங்கள் எழுத்துத்துறையை இழுத்து மூடுங்கள்.

துணிவிருந்தால் சமநீதியுடன் செயற்படும் பத்திரிகை எனின் இதை வாசல் கடந்த கடிதப் பகுதியில் பிரசுரிக்கவும். பிறகு பாருங்கள் இக் கடிதத்துக்கு ஆதரவை.

**மனமுடைந்த மானமுள்ள தமிழன்,**
**'தமிழ்த்தாடி'**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிது

அது ஓர் அதிர்ச்சி அலை!
யாவரையும் என்ன
நிகழுமோ என நெஞ்சைப்
பிடித்தபடி விழிபிதுங்க
வைத்தது.
நம்புவதா விடுவதா என்ற
பதைபதைப்பு ஒருபுறம்...
நம்பமுடியாத பலதை
நம்பித்தான் ஆகவேண்டிய
நம் நாட்டின் முன்னைய
அனுபவங்கள் மறுபுறம்.
அதனால்...!
'அது நிகழுமா' என்ற
ஆச்சரியத்தைவிட 'அது
நிற்ந்து விட்டதா' என்ற
சந்தேகத்தையும் விட 'அது
நிகழ்ந்துதான் விட்டது'
என்ற பீதிக்குள்தான்
பலரும் தள்ளப்பட்டனர்.
ஆம்....
ஜனாதிபதி படுகொலை
செய்யப்பட்டுவிட்டார்
என்பதே அந்தப் பீதி!
தலைநகர் வாழ் தமிழ்
மக்களின் அடிவயிற்றைக்
கலக்கிய கிலி!
கொழும்பு நகர
மண்டபத்தில் பொதுஜன
ஐக்கிய முன்னணியின்
இறுதிப் பிரச்சாரக்
கூட்டத்தில் பேசிய
ஜனாதிபதி சந்திரிகா மீது
புலிகளின் தற்கொலைக்
குண்டுதாரி தாக்குதல்
நடத்தியதில் பலர் பலி,
பெருந்தொகையானோர்
காயம் என்ற செய்தி
கேட்டதும்....
'ஓ! நிச்சயம் அவர்கள்
பலியெடுத்து விட்டார்கள்'
என்றுதான் பலரும்
நம்பினர்.



வெற்றியின் பின்னும்
கலக்கம் நிறைந்த களிப்பு:
2வது பதவியேற்பின் பின்



இலங்கையின் ஐந்தாவது ஜனாதிபதியைத் தேர்ந்தெடுக்கும் நான்காவது ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரங்களின் இறுதிக்கட்டம் நிகழ்ந்த கடைசிநாளில், எதிர்பார்த்தபடி அசம்பாவிதங்கள் எதுவும் நிகழாது ஒருவாறு இத் தேர்தல் பதட்டகாலம் முடிவுக்கு வந்து விட்டது என்று எல்லோரும் மன நிம்மதியடைந்திருந்த வேளையில்...

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா மீது புலிகள் மேற்கொண்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல், இந்நாட்டையேதலைகீழாக்கி விடுமோ என்ற அச்சத்தைக் கிளப்பியிருந்தது.

அரசாங்கம் உட்பட சகல தரப்பினரும் இதனால் அதிர்ந்துதான் போனாலும் ஜனாதிபதி அவர்களுக்கு சிறு காயம் மட்டுமே ஏற்பட்டது என அரசாங்கச் செய்திகள் தெரிவித்தன. ஆனாலும் அது பொய்யென்றே பலரும் நம்பினர்.

இதுவரை நடந்த புலிகளின் தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் எதுவுமே தவறியதில்லை என்பதே இதற்குக் காரணம்.

அதனால், இந்தமுறை நிச்சயம் ஒரு பாரிய இனக்கலவரம்தான் நிகழப் போகிறது என்ற அச்சம் கொழும்பு வாழ் தமிழர்களை உலுக்கியது. அப்படி ஏதும் நிகழ்ந்தால் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளும் நிலையில் அவர்கள் இருக்கவில்லை.

நீண்டகாலமாக ஓய்ந்திருந்த இனக்கலவரங்கள் இனிமேல் இங்கு தோன்றாதென்ற எண்ணத்தில்தான் அவர்கள் தமது வாழ்க்கையை கொழும்பில் ஸ்திரப்படுத்தி வந்திருந்தனர்.

அதுமட்டுமல்ல தமிழ் தீவிரவாதத்துக்கான பிரசாரத்தையும், அத்தோடு நில்லாது மாற்றுக் கருத்துள்ளோர் மீதான அச்சுறுத்தலையும் ஒரு பகுதியினர் முன்னின்று செய்யவும் துணிந்திருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணத்தை வென்ற தேர்தல்

குருஷேத்திரன்

இப்படியான நிலையில் கலவரம் வருவதா..? அதை எண்ணிப் பார்க்கவும் முடியாத மனநிலையில் அவர்கள் விறைத்துப்போய் இருக்க, ஜனாதிபதியின் குரல் வானொலியில் ஒலித்தது!

தமிழ் மக்களைக் காக்க வேண்டியது எமது பொறுப்பு என அவர் வைத்தியசாலைப் படுக்கையிலிருந்து நினைவு மீண்டவுடன் விடுத்த செய்தியே யாவருக்கும் வயிற்றில் பால் வார்த்ததுபோல் அமைந்தது.

ஜனாதிபதி பிழைத்து விட்டார், கலவரம் ஏற்பட மாட்டாது, என்பன மெல்ல உறுதிசெய்யப்பட்டு விட்டன. இதன் பின்னரே வேறு எதையும் சிந்திக்கக் கூடிய நிலைக்கு மக்கள் மீண்டனர்.

ஆனால் மக்கள் நம்ப மறுத்த இந்நிழ்வு ஒரு ஆச்சரியமான உண்மை. புலிகள் இதுவரை செய்த தற்கொலைக் குண்டுத் தாக்குதல்களில் உயிர் தப்பியவர்கள் மிக அருமை. எனவே தற்கொலைக் குண்டுதாரியின் தாக்குதல் என்றவுடன் இதில் தப்பியிருக்கவே முடியாது என்றே யாவரும் எடுத்த எடுப்பில் நம்பினர்.

அத்துடன் இப்படியொரு எத்தனத்தை புலிகள் செய்யலாம் என்பதை மக்கள் அச்சத்துடன் ஒரு வகையில் எதிர்பார்த்தபடிதான் இருந்தனர்.

புலிகளின் மாவீரர் தின உரையில் பிரபாகரன் 'இதுவரை இருந்த ஆட்சிகளில் மிகக் கொடுமையான ஆட்சி ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சியே' எனக் கூறியிருந்தது புலிகள் அவரைத் தீர்த்துக் கட்டக் கங்கணம் கட்டியுள்ளார்கள் என்பதை வெளிக்காட்டியிருந்தது.

இதுவரையில் மாபெரும் இனக் கலவரங்களை நிகழ்த்தி, தமிழ் மக்களுக்கு 'போரென்றால் போர், சமாதானமென்றால் சமாதானம்' என்று யுத்தத்துக்கு அறைகூவல் விடுத்த... யாழ். நூலகத்தை எரித்துச் சாம்பலாக்கிய... பல்வேறு கிராமங்களைச் சுற்றிவளைத்து படுகொலைகளை நிகழ்த்திய... மிக மோசமான ஆட்சிகளையெல்லாம் மறந்து சந்திரிகாவையே வரலாற்றின் மோசமான ஆட்சியாளரென பிரபாகரனால் தெரிவிக்கப்பட்ட வலிந்த குற்றச்சாட்டில் நியாயத் தன்மையைத் தேட முடியாவிட்டாலும் நோக்கத்தை மட்டும் கண்டு கொள்ளக் கூடியதாக இருந்தது. தான் செய்யப் போகும் செயலை முன்னரே நியாயப்படுத்தும் முயற்சி அதில் அடங்கியிருந்தது.

இதேபோல்தான் லண்டனில் மாவீரர் தினத்தில் உரையாற்றிய புலிகளின் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தின் உரையும் காணப்பட்டது. அவரது பேச்சில் சந்திரிகா மீதான ஆத்திரம் அநாகரிகமான கேலியாகத் தொனித்தது.

அதில் திட்டவட்டமாக ஒரு செய்தியைச் சொல்லியிருந்தார். "நாம் விரைவில் சந்திரிகாவுக்கு நல்ல மருந்து கொடுப்போம்" என்று அவர் அவ் உரையில் எச்சரித்திருந்தார்.



அந்த "மருந்து" எதுவென்பது சட்டெனவே யாவருக்கும் பொறி தட்டக் கூடியதாய் இருந்தது.

இத்தகைய விடயங்களால் உசார்ப்படுத்தப்பட்ட மக்கள் விபரீதங்கள் நடப்பதற்கு வசதியான இச் சந்தர்ப்பத்தில் சந்திரிகா மீது புலிகள் குறிவைக்க நிச்சயம் திட்டம் தீட்டுவர் என்பதை எதிர்பார்த்தே இருந்தனர்.

ஆனால் தேர்தல் பிரசாரத்தின் இறுதி நாள் வரை இப்படியான ஒரு முயற்சி கைகூடவில்லை என்பதால் ஒருவாறு இக் கண்டம் கடந்துவிட்டது என எண்ணியிருந்த வேளையில் கடைசித் தேர்தல் கூட்டத்தில் இப்படி ஒரு தற்கொலைக் குண்டு வெடிப்பு நிகழ்ந்து விட்டது என்று கேள்விப்பட்டதும் 'அந்தோ கதை முடிந்து விட்டது!' என்றே யாவரும் பயந்தனர்.

புலிகளின் தற்கொலைத் தாக்குதல் பிழைக்காது என்ற எண்ணத்தால்தான் இத் தாக்குதலைக் கேள்விப்பட்டதும் பல முக்கியஸ்தர்களும் ஜனாதிபதி சந்திரிகா கொல்லப்பட்டே விட்டதாக கருத்தைப் பரப்பினர். அவருக்கு சிறு காயம்தான் என்று அரசாங்கம் சொன்னதை நிலைமையைச் சமாளிக்கச் சொல்லும் பொய்யான செய்தியாகவே பலரும் கருதினர்.

இப்படியான நிலையில் கலவரம் வருவதா? அதை எண்ணிப் பார்க்கவும் முடியாத மனநிலையில் அவர்கள் விறைத்துப்போய் இருக்க, ஜனாதிபதியின் குரல் வானொலியில் ஒலித்தது!

'தமிழ் மக்களைக் காக்க வேண்டியது எமது பொறுப்பு' என அவர் வைத்தியசாலைப் படுக்கையிலிருந்து நினைவு மீண்டவுடன் விடுத்த செய்தியே யாவருக்கும் வயிற்றில் பால் வார்த்ததுபோல் அமைந்தது.

ஜனாதிபதி பிழைத்து விட்டார், கலவரம் ஏற்படமாட்டாது, என்பன மெல்ல உறுதிசெய்யப் பட்டுவிட்டன. இதன் பின்னரே வேறு எதையும் சிந்திக்கக் கூடிய நிலைக்கு மக்கள் மீண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எது எவ்வாறாயினும் மீண்டும் தமிழ் மக்கள் மீது ஒரு பாரிய வன்முறை கட்டவிழ்த்து விடப்படுவதை உடனடியாகத் தடுத்தாக வேண்டும் என ஜனாதிபதி காட்டிய அக்கறையைப் பல அரசியல் தலைவர்களும் பின்னர் பாராட்டினார்கள்.

ஆனால் இப்படியொரு கலவரம் ஏற்பட்டால் என்னவாகும். தேர்தல் காலமாக இருப்பதால் அரசாங்கத்தால் நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாது போய்விடும். உணர்ச்சிப் பிரவாகமாக வெடிக்கப் போகும் இக்கலவரம் எத்துணை பாரதூரமானதாக இருக்கும்?

'83 கலவரத்தின் பின் மெது மெதுவாக ஒருவாறு கொழும்பில் தமது வாழ்க்கை வசதிகளை தமிழ் மக்கள் மீள அமைத்துக்கொண்டதற்கு, இனி இவ்வாறு ஒரு கலவரம் தோன்றாது என்ற நம்பிக்கையே காரணம்.

சற்றும் எதிர்பாராதவாறு இப்படியோர் கலவரம் ஏற்பட்டால் அதில் அப்பாவித்தனமாக அகப்பட்டு அழியப் போகும் தமிழர்கள் எத்தனை பேர்? நாசமாகப் போகும் அவர்களின் சொத்துக்கள் எவ்வளவு? இத் தாக்கத்தை தாங்க இயலுமா தமிழ் சமூகத்தால்?

ஆனாலும் இவையெல்லாம் பொருட்டல்ல, தமது இலக்கே முக்கியம் என புலிகள் இக் காரியத்தைச் செய்ய முற்பட்டனர்.

உண்மையில் அவர்களின் எண்ணம் வேறுவிதமாக இருந்தது. ஜனாதிபதி சந்திரிகா கொல்லப்படுவது மட்டும் அவர்களின் நோக்கமாக இருக்கவில்லை. கலவரம் ஏற்படுவதும் அவர்கள் விரும்பி எதிர்பார்த்த இன்னொரு நோக்கமாக இருந்தது.



கலவரம் வந்தால் சர்வதேச ரீதியாக இலங்கை அரசாங்கத்துக்கு அபகீர்த்தி ஏற்படும். இலங்கை அரசாங்கத்தின் கீழ் தமிழ் மக்கள் பாதுகாப்பாக வாழ முடியாது என மீண்டும் நிரூபிக்கக் கூடியதாக இருக்கும். அதனால் தமது பிரிவினைப் போராட்டத்துக்கு அங்கீகாரம் கிடைக்கும். அத்தோடு தமக்கு வெளிநாடுகளில் ஆதரவும் நிதியும் பெருகும்.

அதேவேளை '83 ல் ஏற்பட்டது போல் உணர்ச்சிவசப்பட்ட தமிழ் இளைஞர்கள் திரள் திரளாகத் தமது இயக்கத்தில் சேர்வார்கள். இந்தியாவிலும் குறிப்பாகத் தமிழ் நாட்டில் ராஜீவ் காந்தி கொலையால் ஏற்பட்ட அபகீர்த்தியை மறந்து மீண்டும் ஒரு ஆதரவான சூழ்நிலை தோன்றும் என அவர்கள் கணக்குப் போட்டனர்.

இத் தாக்குதல் வெற்றியளித்திருந்தால் இந்த ஆட்சியும் மாற்றி அமைக்கப்பட்டுவிடும் என்பதுவும் புலிகளின் எதிர்பார்ப்பாக இருந்தது. தமது அரசியல் நகர்வுகளுக்காக மக்களைப் பலிகொடுக்க புலிகள் தயங்கப் போவதில்லை என்பதை முன்னர் இந்தியப் படையோடு மோத முடிவெடுத்த விடயத்திலேயே மக்கள் கண்டிருந்தனர்.

அதனால்தான் எந்நேரமும் வெளிநாட்டு விசாவைக் கையிலே வைத்துக் கொண்டிருக்கும் ஒருசில தமிழரைத் தவிர புலிகளை ஆதரித்து பிரசாரங்களில் ஈடுபட்டிருந்த ஏனைய கொழும்புத் தமிழர்களுக்குக்கூட புலிகளின் இச்செயல் உயிர் நடுக்கத்தை ஏற்படுத்துவதாய் அமைந்திருந்தது.

ஆனால் தெய்வாதீனமாக தாக்குதல் தோல்வியில் முடிந்து இந்தப் பேரழிவிலிருந்து தமிழ் மக்கள் காப்பாற்றப்பட்டனர்.

தேர்தலோ தடுமாற்றமில்லாமல் ஒழுங்காக நிறைவேறியது. அதன் முடிவுகள், இத் தேர்தலின் மூலம் ஒரு பெரும் அரசியல் குழப்பத்தை ஏற்படுத்திவிட முழுமூச்சோடு முயன்றவர்களின் எண்ணங்களில் மண்ணள்ளிப் போடுவதாய் அமைந்துவிட்டது.

புலிகளும் அவர்களின் நிகழ்ச்சி நிரலின்படி செயற்படும் சில அரசியல்வாதிகள், பிரமுகர்கள், பத்திரிகையாளர்கள் போன்றோரும் தம்மால் இம்முறை இயலாது போய் விட்டது என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டியதாகி விட்டது.

புலிகளின் நோக்கத்தை தனக்கு சாதகமாக ஆக்கிக்கொண்டு அரசியல் வெற்றியை ஈட்டுமுகமாக புலிகளுடன் ஒரு இரகசிய ஒப்பந்தம்

என் வாயால்
நானும் கெட்டு,
போதாக்குறைக்கு
நாட்டையும்
கெடுத்து
பொறுப்பற்ற
அரசியல்
செய்யப்போய்
என்னவர்களையே
பயங்கரவாதத்
தூக்குப்
பலிகொடுத்து....
அம்பலப்
பட்டேனோ..?


ரணில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசிக்கொண்டு தேர்தல் வியூகம மைத்துச் செயற்பட்ட ரணில் விக்கிரமசிங்கவும் இறுதியில் படுதோல்வியடைய நேரிட்டது.

**எல்லாமே புலிகளால் முடியும் என்றிருந்த இவர்களின் நம்பிக்கையை உடைத்து புலிகளால் முடியாத விடயங்களும் உள்ளன என இச் சம்பவம் காட்டியுள்ளது.**

ரணிலைப் பொறுத்தவரை இத் தேர்தல் அரசாட்சியைக் கைப்பற்றுவதற்கான ஒரே வழியாக இருந்தது மட்டுமல்ல கட்சிக்குள் தன் தலைமைத்துவத்தை உறுதிப்படுத்திக் கொள்ளும் பரீட்சையாகவும் அமைந்திருந்தது. அதனால் இதில் என்ன திருகுதாளம் செய்தாவது வெற்றியடைந்துவிட வேண்டும் என்பதே ரணிலின் எண்ணக் கிடக்கையாக இருந்தது.

அதனால் ரணில் வகுத்த வியூகத்தில் பிரதான அம்சமாக புலிகளுடனான உடன்பாடு அமைந்திருந்தது.

ஏனெனில், என்னதான் முயன்றாலும் சிங்கள வாக்குகளில் சரிக்குச் சரியான நிலைமையே ஏற்படலாமென்று அவர் கருதியதால், வெற்றி வாய்ப்புக்கு சிறுபான்மையினரின் வாக்குகளே பிரதானமாகத் தேவைப்படும் என அவர் கருதினார்.

அதனால் புலிகளிடம் ஆதரவு தேடியது மட்டுமின்றி புலிகளைக் கொண்டு சந்திரிகா அரசாங்கத்துக்கு அபகீர்த்தியையும் இக்கட்டையும் ஏற்படுத்தவும் விழைந்தார்.

புலிகளின் வன்னித் தாக்குதலின் அமோக வெற்றி அரசாங்கத்தை ஆடிப்போக வைத்து, அதன்மீது சிங்கள மக்களுக்கு அவநம்பிக்கையை தோற்றுவிப்பதாக அமைந்திருந்தது. இராணுவத்தின் எதிர்பாராத பின்வாங்கலுக்கு இராணுவ மட்டங்களில் ரணிலின் செல்வாக்கும் வேலை செய்துள்ளதாகக் கூறப்படுவதில் உண்மையும் இருக்கலாம்.

வடகிழக்குப் பிரதேசங்களில் பல இடங்களில் இராணுவத்தினர் ரணிலுக்கு வாக்களிக்கும்படியும், அதனால் தாம் வீடுகளுக்குத் திரும்பலாம் நீங்கள் நிம்மதியாக வாழலாம் எனப் பிரச்சாரம் செய்திருந்தனர். இராணுவ முகாம்களில் ரணிலும் மனைவியும் உள்ள படக் கலண்டர்கள் தொங்கின.

மட்டக்களப்பு இராணுவப் பொறுப்பதிகாரி, துணைப்படையாய் இயங்கும் தமிழ் இளைஞர்களில் ஒரு பிரிவினரை அரசியலில் ஈடுபட வேண்டாம் எனத் தடுத்துவிட்டு இன்னொரு பிரிவினரை ரணிலுக்கு ஆதரவான சுவரொட்டிகள் ஒட்ட விட்டிருந்தார்.

இவ் விடயங்கள் இராணுவத்தினுள் ரணிலின் கைகள் இயங்கியதை வெளிப்படுத்துகின்றன.

கிழக்கு மாகாணத்தில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் ரணிலின் சுவரொட்டியைத் தவிர வேறு எவையும் ஒட்ட அனுமதிக்கப்படவில்லை. தேர்தல் நாளில் புலிகள் நேரடியாகவே இறங்கி ரணிலுக்கு ஆதரவாக மும்மரமாக வேலை செய்திருந்தார்கள். தேர்தலுக்கு முதல் நாள் சில பகுதிகளில் ஒலிபெருக்கி மூலம் ரணிலுக்கு வாக்களிக்கும்படி அறிவுறுத்தியிருந்தார்கள்.

மக்களை வாகனங்களில் ஏற்றி வாக்குச்சாவடிகளுக்கு அனுப்பி, ரணிலுக்கு வாக்களிக்கும்படி நிர்ப்பந்தித்திருந்தனர். அவர்கள் யாருக்கு வாக்களிக்கிறார்களென்பதை தாம் வாக்குச் சீட்டு அடிக்கட்டைகள் மூலம் கண்டுபிடிக்க முடியுமென்றும், தம்மை ஏமாற்ற முயல்வோருக்கு தண்டனையும் தண்டமும் விதிக்கப்படுமெனவும் எச்சரித்திருந்தார்கள்.

தமது கட்டுப்பாட்டில் இல்லாத யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோணமலை, வவுனியா, மன்னார் பகுதிகளில் இருந்த மக்களுக்கும் பிரமுகர்களுக்கும் தாம் இரண்டு மாதங்களுக்குள் (ரணில் ஆட்சிக்கு வந்தவுடன்) அங்கு வந்துவிடுவோம் என்றும், அதனால் தமது விருப்பத்துக்கு மாறாகச் செயற்பட வேண்டாமெனவும் எச்சரித்திருந்தார்கள்.

தம்மால் கட்டுப்படுத்த முடியாத யாழ் குடாநாட்டைப் பொறுத்தவரை அங்கு தேர்தலைக் குழப்பும் தாக்குதலைத் தொடுத்திருந்தார்கள். தாம் ஒரு சில நாட்களில் யாழ்ப்பாணத்துக்குள் புகுந்து விடுவோம் என்ற தோற்றப்பாட்டை ஏற்படுத்தி சந்திரிகாவுக்கு வாக்களிக்க விழைவோருக்கு பயத்தை உண்டாக்க முயன்றிருந்தார்கள்.

இச் செயற்பாடுகள் யாவும் புலிகளுக்கு ரணிலின் வெற்றியில் இருந்த அக்கறையைத் தெட்டத் தெளிவாக எடுத்துக்காட்டின.

ஆனால் ரணிலுக்கும் புலிகளுக்குமிடையிலான இந்த உடன்பாடு பகிரங்கமானால் சிங்கள வாக்காளர்கள் மத்தியில் தனக்கான ஆதரவு பறந்துவிடும் என்று தெரிந்த ரணில் அதை மிக இரகசியமாகவே வைத்திருந்தார்.

அத்தோடு தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற ஒரு அரசியல் வாக்குறுதியையும் முன்வைத்தார். தான் பதவிக்கு வந்தால் புலிகளுடன் பேச்சுவார்த்தை நிகழ்த்தி அரசியல் தீர்வொன்றைக் காண்பாரெனக் கூறியிருந்தார்.



டிசம்பர் 18ம் திகதி இரவு இந்த நாட்டு வரலாற்றில் இருள் சூழ்ந்த இரவாகப் பதியப்படும். எமது தேசத்தின் மீது சாபமாக விதிக்கப்பட்டுள்ள கொலைகளையும் கொடுமைகளையும் இல்லாதொழிப்பதற்கு நான் மேற்கொண்ட முயற்சிகளை சந்தேகத்தோடு பார்த்தவர்களுக்கு, இன்று என் முகத்தை நேரடியாகப் பார்த்து அச் சந்தேகத்தை வெளிப்படுத்த முடியுமா என நான் சவால் விடுக்கிறேன். நான் இந்த நாட்டுக்கு ஏற்பட்டுள்ள சாபக்கேட்டை அகற்றி நிரந்தரமான சமாதானத்தை ஏற்படுத்த நேர்மையாக முயற்சியெடுக்கவில்லையென்று அவர்களால் கூற முடியுமா?

எனக்கு ஏற்பட்டுள்ள காயங்கள் அவர்களின் சந்தேகங்களுக்குப் பதிலளிப்பதாய் அமையும். இந்த நாட்டில் அர்த்தமற்ற முறையில் ஓடிக்கொண்டிருக்கும் இரத்த ஆற்றுக்கும், அழிவுகளுக்கும் முடிவுகட்ட என்னைவிட உறுதியோடு செயற்பட்ட ஒரு மனிதர் இப் பூமியிலே இருக்க முடியாது.

எனது எதிரிகள் எவ்வளவு சுதந்திரமாக இத் தேசத்தில் உலவுகிறார்கள் என்பதை நான் காண்பதுபோல் வேறு எந்த ஒரு தலைவரும் கண்டிருக்க முடியாது. அவ் வெறுக்கத்தக்க எதிரி நான் பேசுகின்றபோது எனக்கு முன்னே இருக்கிறான். எனக்கு அவனைத் தெரியும். நான் அவனைக் காண்கிறேன். நானும், எனது குடும்பமும் இந்தத் தேசமும் பலமுறை அவ் எதிரியின் தொடுகையை உணர்ந்திருக்கிறோம்.

கலக்கமில்லாத மன உறுதியுடன் நான் பிரகடனப் படுத்துகிறேன், கடைசித் தடவையாக நான் அவனின் தொடுகையை ஸ்பரிசித்திருக்கிறேன். அதனால் இந்நாள் முதல் மரணத்தையும் அழிவையும் வெறுப்பையும் இந்த மண்ணிலிருந்து விரட்டும்வரை ஓய்வெடுக்கப் போவதில்லை!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காயப்பட்ட ஜனாதிபதி, தன் மகன் மகள் இருவரோடும்...



ஆனால், ஒற்றையாட்சியையும் வட-கிழக்கின் பிரிப்பையும் வலியுறுத்தும் ரணில், தீர்வை எப்படி அரசியல் சட்டமாக நிறைவேற்றப் போகிறார் என தெரிவிக்கவில்லை.

எனினும் புலிகள் அதுபற்றி அக்கறை காட்டவில்லை. ரணிலை ஆட்சிக்குக் கொண்டுவந்து விட்டும் அவரோடு யுத்தம் புரியத்தான் போகிறோம் என்பதில் அவர்கள் தெளிவாய் இருந்தனர்.

அதனால்தான் ஜனாதிபதியைக் குறிவைத்த அதேநேரம் முன்னாள் மேஜர் ஜெனரல் லக்கி அல்கமவையும் அதேவகை தற்கொலைத் தாக்குதலால் கொன்றொழித்தார்கள்.

லக்கி, ரணிலின் ஆட்சியில் இராணுவத் தளபதியாகவோ இராணுவ ஆலோசகராகவோ இயங்கப் போகிறார் என்பது அவர்களுக்குத் தெரியும். எனவே ரணிலைக்கூட வலக்கையை முறித்துவிட்டே பதவியில் அமர்த்த முனைந்தார்கள் புலிகள்.

ரணிலின் பரிதாபம், புலிகளைக் கண்டிக்கக்கூட முடியாத நிலை. புலிகளோடு முரண்பட்டால் அவர்கள் தயவு தாட்சண்யமின்றி ரணில் தம்முடன் செய்துகொண்ட இரகசிய ஒப்பந்தங்களைப் பகிரங்கப்படுத்தி விடுவார்களென்ற அச்சமே அவருக்கு இதில் இருக்கும் தரும சங்கடம்.

ஆனாலும் தான்தான் ஆட்சிக்கு வரப்போகிறார் என்ற எண்ணத்தை ரணில், ஊடகங்களூடாக கச்சிதமாகப் பரப்பிவந்தார்.

இங்கிலாந்து நிபுணர்களின் ஆலோசனைகளுடன் மேற்கொள்ளப்பட்ட இத் திட்டமிட்ட பிரச்சாரம் சலசலப்பை ஏற்படுத்தியது. ரணில் பதவிக்கு வந்தே விடுவார் என்ற அபிப்பிராயத்தை இது செயற்கையாக ஏற்படுத்திவிட்டது.

ஐ.தே.க. தலைமை புனைந்த கதையை ஐ.தே.க. ஆதரவாளர்களும் நம்பத் தொடங்கிவிட்டார்கள். அந்த உற்சாக மிகுதியில் ரணில் ஆட்சிக்கு வந்ததும் பொ.ஐ.மு. ஆதரவாளர்களை ஓரங்கட்டப் போவதாக மிரட்ட ஆரம்பித்து விட்டார்கள். அது அவர்களுக்கு எதிரான விளைவைத்தான் ஏற்படுத்தியது.

இத் தேர்தலில் ரணில் தோற்றது அவரது சொந்த வாயாலேயே என்பதும் ஒருவிதத்தில் உண்மை

ஜனாதிபதி படுகொலை முயற்சி தோல்வி கண்டதும், தேர்தல் பெறுபேறுகள் இவர்களின் எதிர்பார்ப்பை தவிடுபொடியாக்கிவிட்டது. ஆனால் இப் பெறுபேறு படுகொலை முயற்சியால் விளைந்த அனுதாப அலையினால் ஏற்பட்டதாக இருக்கவில்லை. அத்தனை பெரிய அனுதாப ஆதரவு இத் தேர்தலில் தெரியவுமில்லை.

அதேவேளை, படுகொலை முயற்சிக்கு முன்னரே வழங்கப்பட்டுவிட்ட தபால் மூல வாக்குகளை நோக்கினால், அதில் ஜனாதிபதி சந்திரிகாவுக்கே அதிக வாக்குகள் விழுந்திருந்தன. பின்னர் தேர்தலில் தொகுதிகள் தோறும் கிடைத்த வாக்குகளின் போக்கும் அதனையே ஒத்திருந்ததும் அவதானிக்கக் கூடியதாய் இருந்தது.

சந்திரிகா 51.12சதவீத வாக்குகளால் வெற்றிபெற்றார். ஆனாலும் குண்டுத் தாக்குதல் காயங்களுடன் பதவியேற்பு உரையை ஆற்றிய ஜனாதிபதியின் கண்களில் மகிழ்ச்சியையன்றி கண்ணீரைத்தான் காண முடிந்தது. ஒரு நாட்டின் ஜனாதிபதி கண்களில் கண்ணீர் கசிவதென்றால் அது நாட்டின் துயர அடையாளத்தைத் தான் தொனித்து நிற்கிறது.

இந்நாட்டில் எத்தனையோ தாய்மார் தம் புதல்வர்களை இதே கொடிய யுத்தத்தின் பயங்கரத்துக்குப் பலிகொடுத்துவிட்டு அழுது கொண்டிருக்கிறார்கள்.

சொந்த மண்ணிலேயே அகதிகளாகவும், இந்த மண்ணை விட்டுத் தப்பியோடி வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளோரும் பலர். இன்னும் பலர் நடந்தது தெரியாமலே மரணித்து விட்டார்கள்.

இச்சோகங்களைத் தாங்கிய மக்களின் கண்களில் பொங்குகின்ற கண்ணீருக்கு ஒரு தர்ம பலம் உண்டு. அதனால் அம் மக்களின் நன்மை தீமைகளுக்குப் பொறுப்பேற்றுள்ள இந் நாட்டின் தலைவி என்ற வகையில் ஜனாதிபதி அவர்களுக்கு மிகுந்த பொறுப்புண்டு.

அவர் இம்முறை சென்ற தடவை போல் சாதாரண தேர்தல் வாக்குறுதியை வழங்கவில்லை. பதிலாக பாராளுமன்றத்தை சட்டவாக்கல் நிர்ணயசபையாக மாற்றி இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணும் மக்கள் ஆணையொன்றைக் கோரியிருந்தார். தேர்தலில் அதை பெற்றும் உள்ளார்.

எனவே ஐ.தே.க. ஒத்துழைக்காவிட்டால்கூட, பாராளுமன்றத்தை சட்டவாக்கல் நிர்ணய சபையாக மாற்றி, தீர்வுத் திட்டத்தை சாதாரண பெரும்பான்மையுடன் நிறைவேற்ற முடியும்

துயர்மிகு சரித்திரத்தை மாற்றி எழுத அவருக்குக் கிடைத்துள்ள கடைசி வாய்ப்பை - அவரே கூறுவதைப்போல எல்லாத் தெய்வங்களும் அவரைக் காப்பாற்றித் தந்த தன் நோக்கத்தை - பாழ்படுத்த மாட்டார் என்பது சகலரதும் நம்பிக்கை. நிறைவேற்றுவாரானால் இந்த நாட்டின் சரித்திரத்தை மாற்றியெழுதிய ஓர் உன்னதமான கனவானாக அவர் உயர்வார் என்பதில் ஐயமில்லை.

நாம் நல்லவற்றையே எதிர் பார்ப்போம்! •

**யாருக்கு யார் ஆறுதல் சொல்லுவது?**

அவர் கண்களில் கண்ணீர் துளிக்கிற தென்றால் அதற்கு ஆழமான அர்த்தமுண்டு. சாதாரண மக்களின் கண்ணீரோ அவர்களின் துயரை வெளிப்படுத்தும் வழியாகவே இருக்கிறது. ஆனால் ஜனாதிபதியின் கண்ணீருக்கோ அவர்களின் துயரைத் துடைக்கின்ற வலிமை உண்டு. ஏனெனில் சாதாரண மக்களிடத்தில் உணர்வு உண்டே யொழிய அதிகாரம் இல்லை. ஆனால் ஜனாதிபதியிடம் அதிகாரமும் உண்டு. அதிகாரம் உணர்வுடன் ஒருங்குசேருமிடத்தில் அது மாற்றத்தை ஏற்படுத்தும் மனவுறுதியாக மட்டுமன்றி செயற்பாடாகவும் வடிவம் பெறும். அந்த திடசங்கல்பத்துடனான செயற்பாட்டையே மக்கள் அவரிடமிருந்து எதிர்பார்க்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலில் தடுமாறிய தமிழ்த் தலைமைகள்

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டதும் மிக இக்கட்டுக்குள்ளாகியிருந்வர்கள் தமிழ்க் கட்சிகளின் தலைவர்களே. ஏனெனில் அவர்கள் இதுவரை கையாண்டு வந்த வழிமுறை அரசாங்கத்தோடு ஒரு புறத்தில் ஒட்டுறவை வைத்துக் கொள்வது மறுபுறத்தில் விமர்சித்துக் கொள்வது என்பதாகவே இருந்து வந்தது.

விமர்சிக்கும் இடத்தில் தமது ஒட்டுறவை மறைத்தும், ஒட்டுற



இரா. சம்பந்தன்

வாடும் இடத்தில் தமது விமர்சனங்களை மறைத்தும் இவர்கள் செயற்பட்டனர்.

எனினும் இந்த ஒட்டுறவு என்பதுகூட தமிழ் மக்களின் நலன்களை அடிப்படையாகக் கொண்டதாக இல்லாமல் தனிப்பட்ட நலன்களின் அடிப்படையானதாக இருந்தது. விமர்சனமோ உண்மையான நடைமுறை அரசியல் போராட்டத்துக்கு மக்களை இட்டுச்செல்லும்செயற்பாடாகஅமையாத, வெறுமனே கீழ்த்தரமான செல்வாக்கைத் (**Cheap popularity**) தேடிக்கொள்ளவும் தம் இயலாமையை மூடி மறைக்கவும் பயன்படும் கருவியாகவே அமைந்திருந்தது.

இப்படியான இரட்டைத்தனத்துடன் இருந்தவர்களுக்கு தேர்தல் விதித்த நிர்ப்பந்தம் என்னவென்றால், தாங்கள் என்ன நிலைப்பாட்டில் உள்ளார்கள் என்பதை வெளிக்காட்ட வேண்டியவர்களாக்கியது.

இதில் பெரிய இக்கட்டுக்குள்ளான ஒரு கட்சி தமிழர் விடுதலைக் கூட்டணி. தமிழ் மக்களின் உண்மையான ஜனநாயகப் பிரதிநிதிகள் தாங்கள்தான் என அவர்கள் சொல்லிக் கொள்கிறார்கள். (ஆனால் அதை அவர்கள் அதிகம் உரத்துச் சொல்வதில்லை. புலிகளுக்குக் கேட்டுவிடும் என்ற பயத்தால்)

இப்படியான ஒரு முக்கியத்துவம் வாய்ந்த தேர்தல் தருணத்தில் தமிழ் மக்கள் இத்தேர்தலில் என்ன நிலைப்பாடு எடுக்க வேண்டுமெனச் சொல்ல அவர்களுக்கு முடியவில்லை. நெடுங்காலம் மௌனம் சாதித்தார்கள். அந்த மௌனத்துக்கு மத்தியில் மட்டக்களப்புப் பிரதிநிதி ஜோசப் பரராஜசிங்கம் தன் இஷ்டத்துக்கு புலிகளின் நிகழ்ச்சி நிரலின்படி செயற்பட்டுக் கொண்டிருந்தார். அவரைக் கட்டுப்படுத்தவும் முடியவில்லை.

கட்டுப்படுத்த முனைவது புலிகளின் எதிர்ப்பைச் சம்பாதிப்பதாக ஆகிவிடுமோ என்றும் அஞ்சினர். அதே வேளை அவர் செயற்படும் விதத்தை, கூட்டணியின் தீர்மானமாகக் கூறவும் முடியவில்லை. கூட்டணியினரின் தீர்மானத்துக்கு விரோதமாகத்தான் அவர் செயற்படுகிறார் என்றும் தெரிவிக்க முடியவில்லை.

ஆனால் தெரிவிக்க வேண்டியிருந்தது. ஏனெனில் அவர்கள் அரசாங்கத்தையும் எதிர்கொள்ள வேண்டியிருந்தனர்.

இச்சமயம், சுரேஷ் பிரேமச்சந்திரன் முன்னெடுப்பில் பொதுத் தமிழ் வேட்பாளரை தேர்தலில் நிறுத்தும் முயற்சியொன்று மேற்கொள்ளப்பட்டது. அதற்கும் கூட்டணி இணங்க மறுத்தது. ஏன் என்றும் கூறவில்லை, அதைக் கண்டிக்கவும் இல்லை. வெறும் மறுப்போடு நின்று கொண்டது.

கேள்வி கேட்கும் பத்திரிகையாளர்களுடன் எல்லாம் விசனப்பட்டபடி பதில் கூறா நிலைமை - அல்ல.... பதில் இல்லா நிலையைக் கடைப்பிடித்தனர்.

அந்த மௌன விரதமும் புலிகளின் மாவீரர் தின உரையைக் கேட்டுவிட்டு எதையும் யோசிக்கலாம் என்ற காத்திருப்பாகவே தென்பட்டது. மாவீரர் தின உரையில் புலிகள் யாரையும் தேர்தலில் ஆதரிப்பதாக வெளிப்படையாகச் சொல்லவில்லை. சந்திரிகா அரசாங்கத்தை மட்டும் கடுமையாகச் சாடியிருந்தனர்.

> **கூட்டணியினருக்கு, சந்திரிகா சார்பான நிலைப்பாட்டுக்குப் போக ஒரு பெரும் தடைக்கல் விழுந்துவிட்டது. அதே வேளை ஜோசப் பரராஜசிங்கமோ ரணிலை ஆதரிக்கும் செயற்பாடுகளைத் தன் தனித்த வழியில் மேற்கொண்டு சென்றபடியிருந்தார். இந்நிலையில்... கூட்டணியின் நிலைப்பாடு என்ன என்ற கேள்வி மிக இறுக்கமானதாக நெருக்கத் தொடங்கி விட்டது. அதனால் கூட்டணியின் தேர்தலுக்கான முதலாவது கூட்டத்தில் எந்தப் பிரதான கட்சிகளுக்கும் ஆதரவளிப்பதில்லை என்ற தீர்மானம் வெளியிடப்பட்டது. இது கூடுதலாக ஜோசப் பரராஜசிங்கத்துக்கு வாய்ப்பாக இருந்தது.**

அதனால் கூட்டணியினருக்கு சந்திரிகா சார்பான நிலைப்பாட்டுக்குப் போக ஒரு பெரும் தடைக்கல் விழுந்துவிட்டது. ஜோசப் பரராஜசிங்கமோ ரணிலை ஆதரிக்கும் செயற்பாடுகளைத் தன் தனித்த வழியில் மேற்கொண்டு சென்றபடியிருந்தார்.

இவ்வேளை, கூட்டணியின் நிலைப்பாடு என்ன என்ற கேள்வி நெருக்கத் தொடங்கிவிட்டது. அதனால் கூட்டணியின் தேர்தலுக்கான முதலாவது கூட்டத்தில் எந்தப் பிரதான கட்சிகளுக்கும் ஆதரவளிப்பதில்லை என்ற தீர்மானம் வெளியிடப்பட்டது. இது கூடுதலாக ஜோசப் பரராஜசிங்கத்துக்கு வாய்ப்பாக இருந்தது.

ஏனெனில் கூட்டணி, பொ.ஐ. முன்னணியை ஆதரிக்கப் போவதில்லை என்பது தெளிவு. இந்நிலையில் சந்திரிகாவை ஆதரிக்காது விட்டாலே கூட்டணி அவரை எதிர்ப்பதாக அர்த்தமாகிவிடும். அதனால் ரணில் பக்கமே ஆதரவு சேரும்.

இப்படியான ஒரு சூட்சுமமான நன்மை ஜோசப்பின் செயற்பாட்டுக்கு கிடைக்கப் போகிறது என்பதைக் கண்டு செய்வதறியாமல் தடுமாறிய கூட்டணியினர் மீண்டும் அவசரமாகக் கூடி மற்றொரு தீர்மானத்தை வெளியிட்டனர்.

சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கப்பவர்களுக்கு வாக்களிக்கும்படி கூறினர். இதன்மூலம் வாசுதேவ நாணயக்காரவைத்தான் அவர்கள் குறிப்பால் உணர்த்தினர். அப்படி யார் சுயநிர்ணய உரிமையை ஆதரிப்பவர் என்று மக்களைகண்டுபிடிக்கும்படி புதிர் போடாமல் நேரடியாகவே சொல்லியிருக்கலாம். ஆனால் அதற்கும் துணிவிருக்கவில்லை. எப்படியிருந்தாலும் கூட்டணியின் தீர்மானத்தின்படி ஜோசப் பரராஜசிங்கமோ ஏனைய கிழக்கு மாகாணப் பிரதிநிதிகளோ செயற்படவில்லை. அவர்கள் இத்தீர்மானத்தை உதறித் தள்ளிவிட்டு புலிகளின் விருப்புக்கிணங்கவே வேலை செய்தனர்.

தமது கட்சிப் பிரதிநிதிகளையே தம் தீர்மானப்படி செயற்படவைக்க முடியாத கூட்டணியின் தீர்மானத்தை மக்களும் செவிமடுக்கவில்லை. கிழக்கில் மட்டுமல்ல வடக்கிலும் அப்படியே.

இறுதியான பெறுபேறுகளைப் பார்த்தால் கூட்டணியென்ற முன்னாள் மாபெரும் தமிழ்கட்சியின் கருத்துக்கு மதிப்பேதும் இல்லாது அடியுண்டு போனதைக் காணலாம்.



அட்டையில்...

குண்டுவெடிப்புக்கு சற்று முன்னர் கூட்டத்தில் மக்களிடமிருந்து விடைபெறும் ஜனாதிபதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சுரேஷ்

**இதற்கு முன்னைய ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகாவுக்கு பகிரங்க ஆதரவு வழங்கியவர் சுரேஷ். தற்போதைய அரசில் மீன்பிடி அமைச்சின் ஆலோசகர் பதவியை அரசியல் நியமனமாகப் பெற்று அனுபவிப்பவரும் அவரே. அப்படி யிருந்து கொண்டே, அப்பதவியை ராஜினாமாச் செய் யாமலே அரசாங் கத்தை எதிர்க்கவும் அவர் முனைந்தது பலர் மத்தியில் விசனத்தை உருவாக்கியிருந்தது.**

இப்பரிதாப நிலை, அவர்களால் தலைமை கொடுக்க முடியாத பலஹீனத்தாலும், ஒன்றுபட்ட கருத்தில்லாத அவலத்தாலுமே ஏற்பட்டது. கூட்டணி இத்தேர்தல் மூலம் தன்னிடம் இனித் தலைமைத்துவம் இல்லை என்பதையே நிரூபித்து ஓய்ந்தது.

தேர்தலால் தடுமாறிய மற்றோர் கட்சித் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன். ஈ. பி. ஆர். எல். எப். இன் செயலாளர் நாயகமான இவர் தடுமாறியது மட்டுமன்றி தடம் மாறவும் செய்தார்.

எந்தப் பிரதான கட்சிகளையும் ஆதரிக்காமல் பொதுத் தமிழ் வேட்பாளர் ஒருவரை நிறுத்தி தமிழ் மக்களின் எதிர்ப்பை வெளிப்படுத்தலாம் என்ற முயற்சியை மேற்கொண்டார். ஆனால் அவ்வாறான பொது வேட்பாளரொருவரைத் தமிழ் கட்சிகளிடையே கண்டுபிடிக்க முடியாதவராய், தன்னைக் கூட அப்படியான ஒருவராக முன்னிறுத்த இயலாதவராய் இறுதியில் குமார் பொன்னம்பலத்தின் தயவை நாடி, அவராலும் கைவிடப்பட்டு, இம்முயற்சிக்கு முற்றுப்புள்ளி வைத்தார்.

அதன் பின் விடுத்த அறிக்கையில் தமிழ் மக்களை எந்தப் பிரதான கட்சிக்கும் ஆதரவளிக்கும்படி கூறும் தார்மீக உரிமை எம்மிடம் இல்லையென்றும் தமிழ் மக்கள் மதியூகமான முடிவெடுத்துச் செயற்படும்படியும் கேட்டார். இவ்வேண்டுகோளில் ரணிலை ஆதரிப்பதே மதியூகமானது என்ற கருத்தே சொல்லாமல் சொல்லப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

இதற்கு முன்னைய ஜனாதிபதித் தேர்தலில் சந்திரிகாவுக்கு பகிரங்க ஆதரவு வழங்கியவர் சுரேஷ். தற்போதைய அரசில் மீன்பிடி அமைச்சின் ஆலோசகர் பதவியை அரசியல் நியமனமாகப் பெற்று அனுபவிப்பவரும் அவரே. அப்படியிருந்து கொண்டே, அப்பதவியை ராஜினாமாச் செய்யாமலே அரசாங்கத்தை எதிர்க்கவும் அவர் முனைந்தது பலர் மத்தியில் விசனத்தை உருவாக்கியிருந்தது.

இதில் வெளியே சொல்லப்படும் விடயங்களை விட பல உள் நகர்வுகள் நிகழ்ந்தன. அரசாங்கம் வழங்கியிருக்கும் அவரது வீட்டின் கீழே இருக்கும் ஐ. தே. க். முக்கியஸ்தர் டாக்டர் ஜெயலத் ஜயவர்தனவுடன் நெருக்கமாகி ஐ. தே. க. செயலாளர் காமினி அத்துக்கோரளவுடன் இரகசியப் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டார்.

அதன் பின்னரான அவரது அறிக்கை தமிழ் மக்கள் எப்படி "மதியூகமான" முடிவை எடுக்க வேண்டுமென வழி காட்டும் வகையில் மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சுவார்த்தையை ஏற்கும் பெரும்பான்மைக் கட்சியை ஆதரிக்கும்படி கூறினார். மத்தியஸ்தப் பேச்சுவார்த்தை நடத்தப் போவதாக பெரும் பிரசாரம் செய்த ஐ. தே. க. மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்திற்கு எதிர்க் கருத்து எதையும் சொல்லியிருக்காத நிலையில் இவரது தீர்மானம் ஐ. தே. க. வை ஆதரிப்பதையே வலியுறுத்தியிருந்தது.

தமிழ் மக்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுக்கும் வாசுதேவ நாணயக்காரவையும் இவர் பட்டும் படாமலும் கைவிட்டுவிட்டார். இவர் கூறும் சகல நிபந்தனைகளையும் கூடிய அளவில் பூர்த்தி செய்யக்கூடியவர் வாசுதேவா. ஆனால் வாசுவின் பெயரைச் சொன்னால் ரணிலுக்கான ஆதரவு அடிபட்டுப் போகும் என்பதால் அந்த மௌனச் சதியையும் அவர் செய்தார்.

இறுதியாக, ஜனாதிபதி சந்திரிகா தற்கொலைக் குண்டுதாரியால் தாக்கப்பட்டு இருந்த பதற்றமான தருணத்தில் தெரிந்தோ தெரியாமலோ 'சந்திரிகா மரணித்தார்' என்ற புரளியையும் சில மட்டங்களில் கிளப்பிவிட்டிருந்தார் எனத் தெரிகிறது.

ஆனால் இத்தனைக்கும் பிறகு, கடைசியாக சந்திரிகா தேர்தலில் வென்றதன் பின் அவர் தெரிவித்த கருத்தோ தலைகீழாக இருந்தது. மக்கள் சந்திரிகாவுக்கு இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு மக்கள் ஆணை வழங்கியிருப்பதாக அவர் தெரிவித்தார்.

இவ்வாறான தடுமாற்றத்தினால் அவர் கண்ட விளைவு கட்சிக்குள் ஒரு பாரிய பிளவாகவே முடிந்தது.


வரதராஜப்பெருமாளுடன் சேர்ந்த மத்தியகுழு உறுப்பினர்கள் தாமே உண்மையான ஈ.பி.ஆர்.எல்.எப். தலைமையென்றும், தாம் ஜனாதிபதி சந்திரிகாவை ஆதரிப்பதாகவும் தெரிவித்து சுரேஷை மீறி அவருக்கு ஆதரவாக தேர்தலில் பிரசாரம் செய்தனர். சுரேஷோ எதுவும் செய்ய இயலாத நிலைக்குத்தான் தள்ளப்பட்டார்.

மறுபுறம், மலையக மக்கள் முன்னணித் தலைவர் சந்திரசேகரன் அரசாங்க அமைச்சர் பதவியிலிருந்து விலகி, ஐ.தே.க. வை ஆதரித்தார்.

அவரை இந்நிலைக்குத் தள்ள, புதிதாக இ. தொ. கா. தலைமை ஏற்ற ஆறுமுகம் தொண்டமானின் செயற்பாடு காரணமாக அமைந்தது. தொண்டமான் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதமொன்றை அவர் துண்டுப் பிரசுரமாக வெளியிட்டிருந்தார். அதில் தொண்டமான் சந்திரசேகரனைப் பற்றி முறையிட்டு தன் கீழான தேர்தல் பிரசாரப் பணிகளிலிருந்து அவரை ஒதுக்கி வைக்கும்படி கேட்டிருந்தார்.

இந்நடவடிக்கைகளாலும் ஐ.தே.க. வெற்றியடையும் என்று தெரிந்த மாயையாலும் ஐ. தே. க. வெல்லும் பட்சத்தில் தனது கட்சியைப் பலப்படுத்திக் கொள்ளலாமென்ற ஆதங்கத்தாலும் அவர் விலகிச் சென்றார். ஆனால் இத்தேர்தல் முடிவுகள் அவரை ஒரு பழங் கிணற்றுக்குள்தான் நீண்ட காலத்துக்கு முடங்கிக் கிடக்க வைக்கப் போகின்றன. ●

**...இந் நடவடிக்கைகளாலும் ஐ. தே. க.வே வெற்றியடையும் என்று தெரிந்த மாயையாலும் ஐ. தே. க. வெல்லும் பட்சத்தில் தனது கட்சியைப் பலப்படுத்திக் கொள்ளலாமென்ற ஆதங்கத்தாலும் அவர் விலகிச் சென்றார். ஆனால் இத்தேர்தல் முடிவுகள் அவரை ஒரு பழங் கிணற்றுக்குள் தான் நீண்ட காலத்துக்கு முடங்கிக் கிடக்க வைக்கப் போகின்றன.**



பெ. சந்திரசேகரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அற்பத்தனமான அரசியல் ஆலோசனை

*1999* மாவீரர் தின நிகழ்ச்சிகள் வன்னியில் பிரபாகரனின் தலைமையில் கொண்டாடப்பட்ட பொழுது பலரும் ஆவலோடு எதிர்பார்த்திருந்த பிரபாகரனின் மாவீரர் தின உரை புலிகளின் குரல் வானொலியில் ஒலிபரப்பப்பட்டது. அவ்வுரையில் புதிதாக ஏதோ பல விடயங்களை அவர் சொல்லப் போகிறார் என எதிர்பார்த்திருந்தவர்களுக்கு சப்பென்று போய் விட்டது.

காரணம், 98ம் ஆண்டு மாவீரர் தினச் செய்தியில் சொல்லியிருந்த அதே விடயங்களை ஒரு சில வசன மாற்றங்களோடு அப்படியே ஒப்புவித்திருந்தார் பிரபாகரன். ஒரு பக்கம், தான் நிபந்தனையற்ற பேச்சுவார்த்தைகளுக்குத் தயாரெனக் கூறிய அதே வேளை மறு பக்கம்



தானே பல நிபந்தனைகளை அவ்வுரையின் மூலம் அவர் முன்வைத்திருந்தார்.

அத்துடன், எந்தவொரு சிங்கள அரசும் தமிழ் மக்களுக்கு உரிமைகளை வழங்கும் என்ற நம்பிக்கை தனக்கு இல்லை என்றும் கூறியிருந்தார். அதன் மூலம் தனி நாட்டுக்கான போராட்டத்தை மீண்டும் வலியுறுத்தி இருந்தார்.

ஆனால் விசேஷமாக அவர் கூறியிருந்த ஒரு விடயம் பலரின் கவனத்தையும் ஈர்ப்பதாக இருந்தது. அதாவது சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அவர்கள் விடுதலைப் புலிகளோடு இரகசியமாக பேசுவதற்கு மூன்று முறை அழைப்பு விடுத்ததாகவும் தாம் அதை மறுத்துவிட்டதாகவும் கூறியிருந்தார்.

காரணம், யுத்தம் நிகழும் வேளையில் தாம் அரசாங்கத்தோடு எந்தவித இரகசிய பேச்சுவார்த்தைகளிலும் ஈடுபட தயாரில்லை எனவும் அவர் கூறினார். இது பல கேள்விகளையும் சந்தேகங்களையும் கிளப்பி விடுவதாக அமைந்தது.

ஜனாதிபதி சந்திரிகா தமக்கு விடுத்த இவ்வழைப்புகள் பற்றி இத்தனை நாள் இரசியமாக வைத்திருந்துவிட்டு இத்தேர்தல் காலகட்டத்தில் அதை புலிகள் வெளியிட்டதன் காரணம் என்ன? அதுவும் ரணில் விக்கிரமசிங்க வட - கிழக்கை இரண்டு வருடத்திற்கு புலிகளிடம் ஒப்படைக்கப் போகிறாராம் என ரணிலுக்கு எதிராக அரசாங்கமும் பொதுஜன ஐக்கிய முன்னணியும் கடுமையான எதிர்ப் பிரசாரத்தைச் செய்து கொண்டிருக்கும் வேளையில் இதை வெளியிட்டதன் நோக்கம் என்ன? ரணிலை இக் கட்டிலிருந்து காப்பாற்றுவதற்கா?

அடுத்தது, இதுவரை ஜனாதிபதி சந்திரிகாதான் எந்தவித பேச்சுவார்த்தைக்கும் தயாரில்லை எனவும் புலிகள் எப்போதும் பேச்சுவார்த்தைகளுக்கு தயாராக இருக்கிறார்கள் என்றும் நம்பியிருந்த பலருக்கு எங்காவது ஒரு நாட்டிலேனும் நாம் பேசுவோமென அரசாங்கம் விடுத்த அழைப்பை புலிகள்தான் மறுத்திருக்கிறார்கள் என்ற உண்மை குழப்பத்தில் ஆழ்த்தியது.

அது ஒருபுறம் இருக்க, அதே மாவீரர் தினத்தன்று லண்டனில் மாவீரர் தின நிகழ்ச்சியில் அன்டன் பாலசிங்கம் உரையாற்றினார். அவரின் உரை மிகவும் நகைச்சுவை உணர்வு கொண்டதாக இருந்ததாகவும் அவ்வுரையைக் கேட்டு அங்கு கூடியிருந்த பெருந்திரளானோர் ஆர்ப்பரித்து ஆரவாரம் செய்ததாகவும் தமிழ்நெட் என்னும் கொம்ப்யூட்டர் வலைத்தளச் சேவை (Website) குறிப்பெழுதி செய்தி வெளியிட்டிருந்தது.

இத் தமிழ்நெட்டை நடத்துபவர் புளொட் அமைப்பின் முன்னாள் மத்திய குழு உறுப்பினரும், அவ்வமைப்பின் உளவுத் துறையின் முக்கிய அங்கத்தவராகவும் இருந்த **டி. சிவராம்** என்பவராவார். இவர் ஆங்கிலப் பத்திரிகைகளில் **தராக்கி** என்னும் பெயரில் கட்டுரைகளை எழுதி வருபவர்.

தமிழ்நெட் வெளியிடப்பட்டதன் படி அன்ரன் பாலசிங்கம் லண்டனில் தனது உரையின் மூலம் இன்னுமொரு இரசியத்தை வெளியே விட்டார். அதாவது புலிகளும் சந்திரிகாவோடு இரசியமாக தொடர்புகொண்டு ஒரு உதவி கேட்ட விடயத்தைப் பற்றி அவர் வெளிப்படுத்தினார்.

அவர் சொன்ன தகவல், தான் வன்னிக் காட்டில் இருக்கும்போது தனக்கு சிறுநீரகம் செயல்படாமல் போய் கடும் சுகயீனம் கண்டதாகவும் அதற்கு வைத்தியம் செய்வதற்காக தான் வெளிநாடு செல்வதற்கு உதவும்படி ஜனாதிபதியிடம் கோரியதாகவும், அதற்கு இக்கொடிய ஜனாதிபதியும், அரசாங்கமும் மறுத்துவிட்டதாகவும் அவர் கூறியிருந்தார்.

ஆனால் இதுவரை புலிகளோ புலிகளுக்கு ஆதரவான பத்திரிகைகளோ இந்த இரகசியத்தை தமிழ் மக்களுக்கு வெளியிடாமல் தான் வைத்திருந்தன.

மேலும் பாலசிங்கம் பேசுகையில், புலிகள் இரண்டு இராணுவ வீரர்களை விடுதலை செய்து தமது நல்லெண்ணத்தை வெளிப்படுத்தியதாகவும் பிரித்தானியா, நோர்வே மற்றும் *ICRC*க்கு ஊடாக இக்கோரிக்கையை விடுத்தும் ஜனாதிபதி மறுத்தது மட்டுமன்றி பல நிபந்தனைகளையும் போட்டார்.



ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தமது அருமை நாயுடன். பின்னாலிருப்பவர் தமிழ்ச்செல்வன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாலசிங்கம்

ஆரவாரம் அடங்கியதும் பாலசிங்கம் சிரிப்போடு, "எனக்கும் அவவை லண்டனில கொண்டு வந்து வச்சிருக்க சாதுவான விருப்பந்தான். ஆனால் என்ன செய்ய அடேல் அன்ரி செருப்பால அடிப்பா எண்டுதான் பயம்" என்று சொன்னவுடன் கரகோஷம் வானத்தைப் பிளந்தது. விசில் சத்தங்கள் கேட்டன. அந்த கரகோஷ ஒலியினூடே பாலசிங்கம் மீண்டும் அதே வசனத்தை எந்தவித கூச்சமும் இன்றி மீண்டும் மீண்டும் உச்சரித்து பார்வையாளர்களை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தினார்.

அந்த நிபந்தனைகள் எனது சிறுநீரகத்தோடு எந்தவித தொடர்பும் இல்லாதவையென அன்ரன் பாலசிங்கம் கூறியதும் கேட்போர் கூடத்தில் இருந்து பெரும் சிரிப்பொலி கிளம்பியது என தமிழ் நெட் வர்ணித்திருந்தது. ஆனால் இத் தமிழ்நெட் தயாரிப்பாளர், பாலசிங்கம் அவர்களின் உரையில் இருக்கும் பல சுவாரசியமான விடயங்களை கத்தரித்து பிரசுரித்ததன் மூலம் அன்ரன் பாலசிங்கத்தின் அசிங்கமான முகத்தை மூடி மறைக்க முயற்சித்தது போல் தெரிகிறது.

அச்சுவாரஷ்யமான விடயங்களில்... அதிகம் கரகோஷமும் ஆர்ப்பாட்டமும் பெற்ற விடயம் இதுதான்:

அன்ரன் பாலசிங்கம் தனது உரையில் ஓரிடத்தில் **"நண்பர்களே...! நான் இன்று உங்கள் முன் உரையாற்ற வருவதற்கு முன் நேற்று வன்னியில் இருக்கும் தலைவரோடு தொடர்பு கொண்டு பேசினேன். அப்போது நான் 'என்னடாப்பா இந்த ரணில் விக்கிரமசிங்க, இந்த மனிசி சந்திரிகாவை பிடிச்சு உன்னட்ட தரப் போறாராமே. என்ன செய்யப் போறாய்' என்று கேட்டன். அப்ப தலைவர் சொன்னார் 'ஐயோ....! பாலா அண்ணை எனக்கு வேணாம். நீங்கள் வேணுமெண்டால் அவவை லண்டனில கூட்டிக் கொண்டுபோய் வைச்சிருங்கோ'** என்றார்".

(சபையில் கரகோஷமும் ஆரவாரமும்)

ஆரவாரம் அடங்கியதும் பாலசிங்கம் சிரிப்போடு, **"எனக்கும் அவவை லண்டனில கூட்டிக் கொண்டு வந்து வச்சிருக்க சாதுவான விருப்பந்தான். ஆனால் என்ன செய்ய... அடேல் அன்ரி செருப்பால அடிப்பா எண்டு தான் பயம்"** என்று சொன்னவுடன் கரகோஷம் வானத்தைப் பிளந்தது. விசில் சத்தங்கள் கூரையைப் பிளந்தன.

அந்த கரகோஷ ஒலியினூடே பாலசிங்கம் மீண்டும் எந்தவித கூச்சமும் இன்றி மீண்டும் மீண்டும் உச்சரித்து கேட்போரை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தினார். புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் அவர்களின் ஆழம்மிக்க இவ்வரசியல் கருத்துக்களை நம் தமிழ் பத்திரிகைகளும் ஊடகங்களும் வெளியிடாமைக்குக் காரணம் புலிகளின் புனிதத் தன்மை கெட்டுப் போய் விடலாம் என்பதுதானோ யார் அறிவார்.

தனது சிறுநீரகம் பழுதடைந்ததும் "கொழும்புச் சிங்கள அரசாங்கத்துடன்" தொடர்பு கொண்டு பயண ஒழுங்கு செய்து தரும்படி கேட்கத் தயாராக இருக்கும் பாலசிங்கமும் அவருக்கு அனுமதி வழங்கிய தலைவர் பிரபாகரனும் எத்தனையோ நோயாளிகள் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு வருவதற்காக இருந்த ஒரே மார்க்கமான லயன் எயார் விமானத்தை சுட்டு வீழ்த்தினார்களே அது எந்த வகையில் நியாயம் என்று யாரும் கேட்பாரில்லை.



அடேல்

**"சீக்.... வட் அப்பா, நீங்கள் நோட்டி அரசியல் டோக்கிங்..."**

பாலசிங்கத்தின் பழுதடைந்த சிறுநீரகத்தைக் காப்பாற்றுவதற்காக இரண்டு இராணுவ வீரர்களை விடுதலை செய்து மற்றும் பிரிட்டன் நோர்வே **ICRC** போன்ற எல்லோரையும் பாவித்து அரசுடன் தொடர்புகொண்டு பேச முனைகின்ற புலிகள் இயக்கம் இந்த யுத்தத்தால் ஆயிரக்கணக்கில் மக்கள் சதா மரணிக்கிறார்கள், அங்கவீனம் அடைகிறார்கள், அகதிகளாகிறார்கள், சிறார்கள் மனித வெடிகுண்டுகளாகி அழிகிறார்கள் என்ற காரணங்களை முன்வைத்து உலக நாடுகளின் உதவியோடு ஏன் அரசாங்கத்தோடு பேச முன்வரவில்லை என்ற கேள்வியை கேட்போர் இன்று யாருமில்லை.

அன்ரன் பாலசிங்கம் அவர்கள் தனது உரையில், மக்கள் கஷ்டப்படுகின்ற பொழுது நாம் வெளிநாட்டு ஹோட்டல்களில் சுகபோகமாக அமர்ந்து பேச விரும்பவில்லை என சுட்டிக்காட்டியுள்ளார்.

அவர் யாழ்ப்பாணத்தில் இருந்தபோதும் சரி வன்னிக் காட்டில் இருந்தபோதும் சரி அவருக்கும் அவரது தலைவர்கட்கும் என்ன வாய்ப்புக்கள், வசதிகள் இல்லாமலிருந்தன? பாலசிங்கத்திற்கு எது இல்லாவிட்டாலும் தினமும் உயர் ரக சிகரட்டும், "பிளக் அன்ட் வைற்" விஸ்கி போத்தலும் அன்றாடம் குறைவின்றிக் கிடைத்தது. அவர் அன்போடு வளர்த்த செல்ல நாய்க்கு மிக சுவையான உணவு பரிமாறப் பட்டது.

யாழ்ப்பாணத்தில் 1991ஆம் ஆண்டு அவரது நாய் காணாமல் போய் விட்டதென விடுதலைப் புலி அங்கத்தவர்கள் வாகனத்திலே ஒலிபெருக்கிகளைக் கட்டி வீதி வீதியாக அறிவித்து அந்நாயைத் தேடித் தரும்படி மக்களைக் கோரினார்கள்.

யாழப்பாணத்தில் அவரும் அவரது பாரியார் அடேல் அவர்களும் தங்கியிருந்த இரண்டு மாடி வீட்டிற்கு 24 மணி நேரமும் ஜெனரேட்டர் மூலம் மின்சாரமும் ஒரு சில அறைகள் குளிரூட்டப்பட்ட நிலையிலும் இருந்தன என்பதை பாலசிங்கத்தால் மறைக்கவோ, மறுக்கவோ முடியுமா?

ஆனால் லண்டனில் பேசும் போது யாழ்ப்பாணத்தில் மாமர நிழலின் கீழ் பாயை விரித்து அதில் அமர்ந்து யாழ்ப்பாண பனங் கள்ளைக் குடிப்பதில் உள்ள சுகத்தைப் பற்றி பாலசிங்கம் விவரிக்கும் பொழுது சபையில் இருந்த மக்கள் அப்படியே புல்லரித்துப் போய் கரகோஷமெழுப்பினர்.

மேலும் பாலசிங்கம் பேசும் போது, ஒரு தமிழீழ தனி நாட்டை உருவாக்குவதற்குத் தான் அங்கே உள்ள மக்கள் எல்லோரும் உயிரைக் கொடுத்து போராடிக் கொண்டிருக்கிறார்கள். அந்தப் போராட்டத்திற்கு நீங்கள் எல்லோரும் இதுவரை செய்தது போல் பொருளுதவி செய்ய வேண்டும். ஆனால் உங்களிடம்தான் நிறைய அறிவுச் செல்வம் குவிந்து கிடக்கிறது. எனவே நீங்கள் எல்லோரும் ஒரு காலத்தில் தமிழீழத்துக்கு வந்து தமிழீழத்தைக் கட்டியெழுப்ப வேண்டும் என்ற அழைப்பை விடுத்தார்.

அவர் கூற முனைந்தது, வெளிநாடு செல்ல முடியாமல் வட கிழக்கிலே நிற்கின்ற கழிவு கட்டைகளையெல்லாம் பிடித்துநாங்கள் ஒரு வகையில் குண்டுகளைக் கட்டி கொன்றுவிடுவோம். பின்னர் நீங்கள் எல்லோரும் உங்கள் சொத்து சுகங்களுடன் அங்கு வந்து சந்தோஷமாக வாழலாம் என்பதுதானோ!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருபத்தொன்று - ஒரு நம்பிக்கை

புறாக்களின் இறகுகளாய் அரிவாள்கள்
குழந்தை கையில் ரத்தப் புட்டி
அஃறிணை ஆயுதங்களால் ஏவப்படும் மானுடம்
இருபதும் புருட்டஸ் நூற்றாண்டுகள்.

பத்துக் கரங்களும் துப்பாக்கியானால்
சகோதரனை எதனால் அணைப்பது?

வன்முறையால் நிலைநிறுத்தப்படுவதென்றால்
சட்டங்கள் மட்டுமல்ல,
நியாயங்கள் கூட அசிங்கமானவை!

உலகம் குடும்பம்
பகை முகமூடி எனில்
காண்டீப அம்புகள்
உடல் தைக்கலாமா?

கோதண்ட உதவியுடனென்றால்
ராமராஜ்யமும் நமக்கு வேண்டாம்.

நாகரீகமடைந்து பல ஆயிரமாண்டாகியும்
வன்முறையில்தானே எங்கள் வாழ்க்கை.

கற்காலத்திலிருந்து
உழைத்தது போதும்
உத்தியோகத்திலிருந்து
ஓய்வு கொடுத்தனுப்புங்கள்
ஆயுதங்களை.

எங்கள் அம்பறாத்தூணியில்
புன்னகைகளே.

நாளை எடுத்து வரவும்
ஏதுமின்மையால்
இன்று போவதற்கில்லை,
உட்கார்ந்து பேசுவோம்.

- நீலமணி

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பாராளுமன்றத்திலே சமகால உரை பெயர்ப்பு



**மொழியில் மிக மிகக் கைதேர்ந்தவர்களே இந்தத் தொழிலுக் காகத் தேர்ந்தெடுக்கப் படுகிறார்கள். ஏனெனில் இதுவொரு மிகப் பெரிய சவாலை எதிர்கொள்ளும் தொழில். ஒருவர் என்ன பேச வருகின் றார் என்பது முன் கூட்டியே தெரியாது. எப்படிப் பேசுவார், எதைப் பற்றிப் பேசுவார் என்பது பேசும்போதுதான் தெரியும். சொல்லின் அர்த்தம் புரியாவிட் டால் அகராதிகளைப் புரட்டிக் கொண்டிருக்க முடியாது. தவறும் பட்சத்தில் தலை போக நேரிடும். இவ்வாறான சவாலை எதிர்நோக்கித்தான் இந்தத் தொழிலில் கால் வைக்க வேண்டும்.**

பாராளுமன்ற விவாதங்கள் நடக்கும் தினங்களில் பாராளுமன்ற உறுப்பினர்கள் தான் விரும்பிய மொழியில் பேசலாம். எதையும் பேசலாம். குறுக்கீடு செய்யலாம். அவர் பேசுவது தமிழ் மொழியாகவும் இருக்கலாம். ஆனால் பாராளுமன்றத்திலே ஒரு உறுப்பினர் எந்த வேகத்தில் பேசுகிறாரோ அதே வேகத்தில் ஏற்ற இறக்கங்களோடு ஒரு சிறிய கண்ணாடி அறைக்குள் இருந்து கொண்டு, காதுக் கருவி (*Ear phone*)களை தலையில் போட்டுக்கொண்டு, தனக்கு முன்னாலுள்ள ஒலிவாங்கியில் அவ் உறுப்பினர் பேசுவதை கேட்டு, அவதானித்து உரை பெயர்க்க வேண்டும். இவரைத் தான் *Interpreter* (உரைபெயர்ப்பாளர்) என்று கூறுகிறோம். *Translator* (மொழிபெயர்ப்பளர்) அல்ல. மொழிபெயர்ப்பு வேறு உரைபெயர்ப்பு வேறு. அது ஒரு தனிக் கலை.



இடமிருந்து வலமாக முறையே திரு. எல்.பியசேன, குஞ்சிதபாதம், திரு. ஏ.பி. பீலி

உரை பெயர்ப்பு மொழி பெயர்ப்பைப் போன்றதல்ல.



எம். கே. ராகுலன்

ஒருவர் பேசிக் கொண்டிருக்கும் போதே அவர் பேசுவதில் சிறிதும் பிசகாமல் அப்படியே சொல்வது தான் உரை பெயர்ப்பு.

எமது நாட்டைப் பொறுத்த வரையில் பாராளுமன்றத்தில் தான் இந்த உரைபெயர்ப்பு மிகச் செல்வாக்கு செலுத்துகிறது.

கடந்த 27 வருடங்களாக, சவால்களை எதிர்கொண்டு தனது திறமையை நிலைநாட்டி, இப்போது இலங்கைப் பாராளுமன்றத்தில் பிரதம உரைபெயர்ப்பாளராகக் கடமையாற்றும் **திரு. ராகுலன்** அவர்களைச் சந்திக்க அவர் அலுவலகத்துக்குச் சென்றோம்.

பாதுகாப்புக் கெடுபிடிகளை முடித்து அவரைக் காணச் சென்றதும் இன்முகத்துடன் எங்களை வரவேற்று உரையாட ஆரம்பித்தார். அவரது குரலின் கம்பீரம் உடலிலும் இருந்தது. அவருடன் கலந்துரையாடிய விடயங்களை அமுது வாசகர்களுக்காகத் தருகிறோம்.

இது சிறுபான்மையினருக்கே கிடைத்த பெருமையாகவே திரு. ராகுலன் கருதுகிறார்.

பதவிக்கு வரும் அரசுகள் தமிழைப் புறக்கணிப்பதாக ஒரு மனப்பான்மை நம்மத்தியில் இருந்தாலும் பொதுவான சில இடங்களில் இந்த மாற்றாந் தாய் மனப்பான்மைகளையப் பட்டிருப்பதற்கான உதாரணங்களையும் நாம் காணமுடியும். பாராளுமன்றத்தில் சமகால உரைபெயர்ப்பாளர்களின் தலைமைப் பதவி ஒரு சிறுபான்மையினத்தவருக்கு வழங்கப்பட்டிருப்பதை இங்கு விதந்து குறிப்பிட வேண்டும்.

1947ம் ஆண்டில் ஜனப் பிரதிநிதிகள் சபை (செனட் சபை) ஆரம்பிக்கப்பட்ட கால கட்டத்தில் எல்லா உரைகளும் முழுவதும் ஆங்கிலத்திலேயே இருந்தன. ஹன்ஸாட் அறிக்கை கூட ஆங்கிலத்தில் மாத்திரம் தான் பதியப்பட்டிருந்தன.

ஆனால் சில பிரதிநிதிகள் சிங்களத்திலோ, தமிழிலோ தாங்கள் பேசப் போகிறோம் என்று சபாநாயகரிடம் கேட்ட சந்தர்ப்பங்களில் அனுமதியும் வழங்கப்பட்டிருக்கிறது.

ஆனால் அப்படி பேச வேண்டியேற்படும் போது முன்கூட்டியே எழுத்தில் முன் அறிவித்தல் கொடுக்க வேண்டும். இவ்வாறு எழுத்து மூலம் அறிவிப்பது ஏனென்றால், ஹன்சாட் அறிக்கையில் சிங்கள, தமிழ் பதியப்பட்ட சுருக்கெழுத்தாளர்களை முன்கூட்டியே தேடிக் கொள்வதற்காக.

இவ்வாறு சிங்களத்திலோ தமிழிலோ பேசியது சிலருக்குப் புரிந்தது. இவ்விரண்டு பாஷைகளும் தெரியாதவர்களுக்கு அவர்கள் பேசியது என்னவென்றே தெரியவில்லை. இவ்வாறான ஒரு சிக்கல் ஏற்பட்ட பொழுதுதான் சமகால உரைபெயர்ப்பு அவசியம் என்று உணரப்பட்டது.

அக்காலகட்டத்தில் பாராளுமன்ற செயலாளர் நாயகமாகவிருந்த **திரு. ரல்ப் தெரணியகல** அவர்கள் சமகால உரைபெயர்ப்பை பரீட்சார்த்தமாக செய்து பார்க்க வேண்டும் என்ற நோக்கில் இங்கிலாந்தைச் சேர்ந்த மொழியியல் நிபுணர் **ஏ. பீ. பிலி** என்பவரை இதற்கான சாத்தியக் கூறுகளை ஆராய்வதற்கு வரவழைத்தார்.

அவர் இங்கு வந்து வாய்ப்புக்களைப் பார்த்து விண்ணப்பங்களைக் கோரி அதனடிப்படையில் ஜனப் பிரதிநிதி சபைக்கு 1956ஆம் ஆண்டு மே மாத காலப் பகுதியில் முதன் முதலாக 2 உரைபெயர்ப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருவர், திரு. எல். பியசேன. இவர் சிங்களத்திலிருந்து ஆங்கிலத்துக்கு உரைபெயர்ப்பாளராகவும், அடுத்தவர் திரு. என். குஞ்சிதபாதம். இவர் தமிழிலிருந்து ஆங்கிலத்துக்கு உரை பெயர்ப்பவராகவும் இருந்தார்.

பாராளுமன்றத்திலே இதைச் சாத்தியப்படுத்த முடியுமா என்ற சந்தேகத்தில் இந்நடவடிக்கைகள் தற்காலிகமாகவே இருந்தன. காலப்போக்கில் இச்சமகால உரைபெயர்ப்பு வெற்றியடையவே 1957ம் ஆண்டு இன்னும் மூன்று பேரைத் தெரிவு செய்தார்கள். ஒருவர் சீ. டபிள்யு. பன்னில, மற்றவர் என். பீ. சிவசுப்பிரமணியம். மூன்றாமவர் ஹேவாவசம்.

இவர்கள்தாம் சமகால உரைபெயர்ப்பின் முன்னோடிகள். இலங்கைப் பாராளுமன்றத்திலே சமகால உரைபெயர்ப்பு ஆரம்பிக்கப்பட்ட காலகட்டத்திலே உலகிலே 5-6 நாடுகளில்தான் பாராளுமன்ற உரைபெயர்ப்பு இருந்ததாம். அதுவும் ஒன்று அல்லது இரண்டு மொழிகளில் மாத்திரம்தான் உரைபெயர்க்கப்படுகிறது.

**இன்னுமொரு விசேடம் என்னவென்றால் ஆசியாவிலேயே முதன் முதலாக சமகால உரைபெயர்ப்பு ஆரம்பிக்கப்பட்ட பெருமை இலங்கையையே சாரும் என்றார் திரு. ராகுலன்.**

ஒரு சமகால உரைபெயர்ப்பாளர் என்று சொல்லும்பொழுது அவர்கள் உடனுக்குடன் அந்த உரையை உரைபெயர்ப்பது மாத்திரமல்ல பாராளுமன்ற உறுப்பினர் எந்த விதத்திலே, எந்த வேகத்திலே பேசுகிறாரோ அந்த விதத்திலே அதே வேகத்திலே உரைபெயர்ப்பு இருந்தால்தான் அது ஒரு வெற்றிகரமான உரைபெயர்ப்பாக இருக்கும்.

ஏனென்றால் அந்தப் பாராளுமன்ற உறுப்பினர்கள் பேசும்போது அவர் பேசும் மொழி தெரியாதவர்கள் தங்களது காதுக் கருவிகளைப் போட்டுக் கொண்டு கண்ணால் காண்பதோ பேசுகின்ற உறுப்பினரை, அவர்களின் அங்க அசைவுகளை.

அவர்கள் கேட்பதோ இந்த உரைபெயர்ப்பாளரின் சமகால உரைபெயர்ப்பை.

எனவே அவரது உரையினுடைய வேகத்தின் அடிப்படையில் நெளிவு சுழிவுகளோடு பேச வேண்டும். அதாவது சமகால உரைபெயர்ப்பாளர் பாராளுமன்ற உறுப்பினர் பேசுவதைப் போன்று பேசும் நடிகராக இருக்க வேண்டும்.

இலங்கைப் பாராளுமன்றத்திலே சமகால உரைபெயர்ப்பில் 3 பிரிவுகள் இருக்கின்றன. ஒன்று ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கும் தமிழிலிருந்துஆங்கிலத்துக்கும். இரண்டாவது ஆங்கிலத்திலிருந்து சிங்களத்துக்கும் சிங்களத்திலிருந்து ஆங்கிலத்துக்கும். மூன்றாவது பிரிவு சிங்களத்திலிருந்து தமிழுக்கும் தமிழிலிருந்து சிங்களத்துக்குமாகும்.

இப்படியான மூன்று பிரிவுகளிலும் ராகுலனைத் தலைமையாகக் கொண்டு எல்லாமாக 19 பேர் தற்போது வேலை செய்கின்றனர். உரைபெயர்ப்பாளர்களின் தொகை மிகக் குறைவாகவே உள்ளது. இலங்கைப் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையான சமகால உரைபெயர்ப்பாளர்கள் சிறுபான்மையினத்தவர்களே.

உரைபெயர்ப்பு என்பது முக்கியமான ஒரு தொழில் மட்டுமல்ல இது ஒரு முக்கியமான கலையும்தான் என்கிறார் ராகுலன்.

உரை பெயர்ப்பு மூன்று விதமானது. ஒன்று சமகால உரைபெயர்ப்பு. அடுத்தது ஒருவர் மேடையில் பேசும்போது அவர் அடுத்து இரண்டுமூன்றுவாக்கியங்களைப் பேசியபின் அதை தொகுதியாக உரைபெயர்ப்பது. மற்றையது யாராவது பேசும்போது அவர் பேசியவற்றின் சுருக்கத்தைச் சொல்வது.

இதில் எல்லாவற்றையும் விடக் கஷ்டமான காரியம் சமகால உரைபெயர்ப்புத்தான். பாராளுமன்ற உறுப்பினர் பேசி முடிந்து ஒரு சில செக்கன்களுக்குள் உரைபெயர்ப்பாளரும் அவரது உரைபெயர்ப்பை முடிக்க வேண்டும்.

ஒரு உறுப்பினர் பேசிக்கொண்டு போகும்போது சில சொற்கள் புரியாது, அல்லது அந்தச் சொல்லுக்குரிய கருத்து ஞாபகத்துக்கு வராமல் போனால் உடனடியாக அதற்கு சமமான கருத்துடைய சொல்லைச் சொல்லிவிட வேண்டும். குழப்பம் கூச்சல்கள் சபையில் எழுந்தால் அந்த நேரத்தில் பேசுவது கேட்காமல் போகும். எனவேசபையில் கூச்சலாக உள்ளது, அவர்கள் பேசுவது எமக்குக் கேட்கவில்லை என்று சொல்லிவிட நேரும்.

ஒரு உறுப்பினர் பேசும்போது அது சொல்வதற்கு தகுதியற்ற வார்த்தையாக இருந்தாலும் அதைச் சொல்லியே ஆகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. சில வேளை பாராளுமன்ற உறுப்பினர் உரைபெயர்ப்பாளரைத் தாக்கியே பேசலாம். அப்படியான சந்தர்ப்பங்களிலும் அதை உரைபெயர்ப்பாளர்கள்தான் உரை பெயர்க்க வேண்டும்.

பழமொழிகளில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். மட்டுமன்றி உரைபெயர்ப்பாளர்களுக்கு சமகால அறிவு, பொது அறிவு உலக நடப்புகள் போன்ற பல்வேறு துறைகளிலும் தேர்ச்சி இருந்தால்தான் உரைபெயர்ப்பைத் திறம்படச் செய்ய முடியும்.



பாராளுமன்றத்தில் நடத்தப்பட்ட உரைபெயர்ப்பாளர் தினத்தில் சபாநாயகர் கே.பி ரட்னாயக்கா உரையாற்றும்போது...

**உரைபெயர்ப்பு என்பது சாதாரண தொழிலல்ல. இதைச் செய்பவர்களுக்கு முதலாவதாக தன்னம்பிக்கை இருக்க வேண்டும். அடுத்ததாக சம்பந்தப்பட்ட இரண்டு மொழிகளிலும் நல்ல தேர்ச்சி இருக்க வேண்டும். தேர்ச்சி இருந்தாலும் போதாது. உடனுக்குடன் அந்தந்தச் சொல்லுக்கான அடுத்த மொழிப் பதத்தை சரியாக எடுத்துச் சொல்லக் கூடிய திறமையோடு, மொழியாற்றல், மொழியை சரளமாகப் பயன்படுத்தக் கூடிய தன்மையும் இருக்க வேண்டும். பேசுகின்றவர் ஒன்றைச் சொல்ல உரைபெயர்ப்பவர் இன்னொன்றைச் சொல்ல முடியாது. பேசிக் கொண்டிருக்கும்போது அகராதியையோ, கலைக் களஞ்சியங்களையோ புரட்டிக் கொண்டிருக்க முடியாது. எனவேதான் இதுவொரு சவால் என்றார் திரு. ராகுலன்.**


ராகுலன்

**பிரபல்யம் பெறாத ஒரு சாதாரண பாடசாலையில் படித்து இலங்கைப் பாராளுமன்றத்தில் பகுதிநேர உரைபெயர்ப்பாளராகச் சேர்ந்து, பின் எழுதுவினைஞராக இணைந்து, சிரேஷ்ட உரைபெயர்ப்பாளராகி, பிரதி பிரதம உரை பெயர்ப்பாளராகப் பதவி வகித்து, 1994 ஒக்டோபர் 17ம் திகதி முதல் பிரதம உரைபெயர்ப்பாளராகக் கடமையாற்றி வருகிறார்.**

**1999 மே மாத காலப்பகுதியில் கனடா நாட்டு பாராளுமன்ற உரைபெயர்ப்பு தொடர்பான நடவடிக்கைகளைக் கவனிப்பதற்கு அனுப்பப்பட்ட ராகுலன், இலங்கைப் பாராளுமன்ற வரலாற்றிலேயே முதன் முதலாக பிரதம உரைபெயர்ப்பாளராக தெரிவு செய்யப்பட்ட சிறுபான்மையினத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமகால உரைபெயர்ப்புக் கலையைப் போதிப்பதற்கு இலங்கையில் எந்தப் பயிற்சி நிலையங்களும் இல்லை. அவ்வாறு பயிற்சி நிலையங்கள் அமைக்கப்பட்டால் இந்தக் கலையை மேலும் வளர்க்கலாம் என்று ஆதங்கப்படுகிறார் ராகுலன்.

இத் துறைக்கு பட்டம் பெற்றவர்களோ பாண்டித்தியம் பெற்றவர்களோ மாத்திரம்தான் செல்ல வேண்டுமென்பதில்லை. கிரகித்தல் தன்மையும், சமயோசித புத்தியும், மொழித்திறனும், தன்னம்பிக்கையும் இருந்தால் எவருக்கும் இலகுவாக உரைபெயர்ப்பாளராக முடியுமென்கிறார் இவர்.



தற்போது இலங்கைப் பாராளுமன்றத்தில் பணியாற்றும் உரைபெயர்ப்பாளர் குழு

நாட்டின் அனேக தலைவர்களின் பேச்சுக்களை உரைபெயர்த்தவர் ராகுலன். புதிய பாராளுமன்றம் திறக்கப்பட்ட போது சமகால உரை பெயர்ப்பைச் செய்தவரும் இவரே.

இலங்கையன் என்றமுறையில் தான் சார்ந்த சமூகத்துக்கு, தனது மொழிக்கு ஏதாவது செய்தாக வேண்டுமென்ற எண்ணம் கொண்டவர் ராகுலன். பாராளுமன்ற உரைபெயர்ப்புத் துறையில் கூட இவர் வந்ததன் பின் நிறைய மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன.

உரை பெயர்ப்பாளர்களின் எண்ணிக்கையை அதிகரித்தது. சிறிய நூலகம் நிறுவியது. மட்டுமன்றி உரைபெயர்ப்பாளருக்காக சங்கம் *(API - Association of Parliamentary Interpreters)* ஒன்றை நிறுவியுள்ளார். இச்சங்கத்தின்மூலம் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளைத் தொடரவிருக்கின்றார்.

அடுத்து, சர்வதேச ரீதியாக உரைபெயர்ப்பாளர்களை ஒன்று சேர்க்கும் முயற்சியை செய்து கொண்டிருக்கிறார். அத்தோடு பாராளுமன்றத்தில் பயன்படுத்தப்படும் சொல்லகராதி ஒன்றை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொண்டிருக்கிறார்.

ஏனைய நாடுகளோடு ஒப்பிடுகையில் இலங்கையில் உரைபெயர்ப்பாளருக்குக் கொடுக்கப்படும் சம்பளம் மிகக் குறைவாம்.

ஏனைய கலையும் கலைஞர்களும் கௌரவிக்கப்படுவது போல உரைபெயர்ப்புக் கலையும் கலைஞர்களும் கௌரவிக்கப்பட வேண்டும் என்ற தன் ஆவலையும் வெளியிடுகிறார் ராகுலன்.

பாராளுமன்றம் ஒரு மாதத்தில் சுமார் எட்டு நாட்கள் கூடும். இதில் மாற்றங்கள் செய்யப்படலாம். உரைபெயர்ப்பாளர்கள் பாராளுமன்றம் கூடும் நாட்களில் உரைபெயர்ப்பு செய்வதோடு ஏனைய நாட்களில் மொழிபெயர்ப்பு வேலைகளிலும் ஈடுபடுவார்கள்.

"பாராளுமன்ற உரைபெயர்ப்பாளர்கள் என்ற வகையில் பாராளுமன்றத்திலே நடைபெற்ற பல அடிபிடிகளை, பாராளுமன்ற உறுப்பினர்களுக்கிடையே சண்டை ஏற்பட்டு இரத்தம் சிந்திய சந்தர்ப்பங்களை, சபாநாயகரின் கட்டளையை மீறும் போது பொலீசாரினால் இழுத்துச் செல்லப்படும் சந்தர்ப்பங்களையெல்லாம் நிறையக் கண்டிருக்கிறேன். ஆனால் பாராளுமன்ற கௌரவத்துக்காக சம்பந்தப்பட்டவர்களைச் சொல்ல மாட்டேன்" என்றார் ராகுலன்.

1983 ஜுலைக் கலவரத்துக்குப் பிறகு அரசியல் சட்டத்தை திருத்துவதற்காக அவசரமாக அன்றைய அரசாங்கம் பாராளுமன்றத்தைக் கூட்டியது. அந்த நேரத்தில் சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த உரைபெயர்ப்பாளர்கள் அன்று வர முடியாமலிருந்தது. சிலர் அகதி முகாம்களுக்குள் இருந்தார்கள். சிலர் வீடுகளிலே அடைபட்டிருந்தார்கள்.

"அப்படியான ஒரு சந்தர்ப்பத்தில் தமிழிலிருந்து ஆங்கிலத்துக்கும் ஆங்கிலத்திலிருந்து தமிழுக்கும் சிங்களத்திலிருந்து தமிழுக்கும், தமிழிலிருந்து சிங்களத்துக்கும் இரண்டு பிரிவிலும் பகல் 2 மணியிலிருந்து அடுத்த நாள் அதிகாலை 5.30 வரை முழு நேரமும் மாறி மாறி உரைபெயர்த்தவர்கள் நானும் மன்னாரைச் சேர்ந்த காலஞ்சென்ற எச். எம். ஷெரீப்பும்தான்" என்று பழைய அனுபவத்தை நினைவுகூர்ந்தார் ராகுலன்.

நாம் எல்லோரும் அறிந்த மற்றும் ஒரு சம்பவத்தைநினைவுகூர்ந்தார். அன்றைய ஜனாதிபதி பிரேமதாசவுக்கெதிராக இம்பீச்மென்ட் (குற்றம் காண் பிரேரணை) கொண்டுவரப்பட்டு அது நிறைவேற்றப்படவில்லை.

அந்நேரம் பாராளுமன்றக் கூட்டத்தொடர் ஒத்திவைக்கப்பட்டு புதிய பாராளுமன்றக் கூட்டத் தொடரை ஆரம்பித்து வைக்க ஜனாதிபதி பிரேமதாச அங்கு வந்தார். எதிர்க்கட்சியினர் கூக்குரலிட்டு சத்தம் போட்டார்கள். ஆனால் ஜனாதிபதி வந்ததோ கொள்கைப் பிரகடனத்தை வாசிப்பதற்கு. அதன் பிரதிகள் எங்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்தன. குறுக்கீடுகளும் கூச்சல்களும் ஏற்பட்டது. அவற்றுக்கு ஜனாதிபதி பதிலளித்துக் கொண்டிருந்தார். குறுக்கீடுகளையும் நாம் உரைபெயர்க்க வேண்டியிருந்ததால் ஜனாதிபதியின் பிரதியை ஒதுக்கித் தள்ளிவிட்டு உரைபெயர்ப்புச் செய்தோம்.

சில செய்திப் பத்திரிகைகளிலிருந்து வரும் நிருபர்கள் அவர்களுக்கு விளங்கும் பாஷையில் எமது உரைபெயர்ப்பைக் கேட்டுத்தான் எழுதுவார்கள். எனவே நாங்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் அடுத்த நாள் எமது கழுத்துப் போய்விடும் என்று சிரித்தார் ராகுலன்.

இந்தத் தொழிலுக்கு யாரும் வர விரும்பினால் தன்னம்பிக்கை, மொழித்திறமை, பேச்சுத் திறமை என்பன இருந்தால் போதுமானது. இவற்றை பாடசாலை மட்டத்திலிருந்தே கல்வியறிவோடு சேர்த்து வளர்த்துக் கொண்டால் நிச்சயமாக எவருக்கும் உரைபெயர்ப்பாளராக முடியும் என்கிறார் அவர்.

திரு. ராகுலனிடமிருந்து நாம் விடைபெற்று வந்தாலும், அவர் ஆணித்தரமாகவும் கவலையோடும் சொன்ன, **இதுவும் ஒரு கலை இதுவும் உரியபடி கௌரவிக்கப்பட்டால் இந்தத் துறைக்கு மென் மேலும் ஆட்கள் சேர்வார்கள்** என்ற அந்த ஆதங்கக் குரல் தொடர்ந்தும் நம் காதுகளில் ரீங்கரித்துக் கொண்டிருக்கிறது.

**- ஹிஷாம்**



கூலிக்கு ஆள்வைத்துப் பண்ணை நடத்தும் அப்பனும் மகனும் கடலில் குளிக்கப்போனார்கள். திடீரென அலையொன்று அடித்து தண்ணீரில் மூழ்கத் தொடங்கி விட்டான் தகப்பன்.

தகப்பனைக் காப்பாற்றுவதற்காக மற்றவர்களைக் கூவி அழைத்தான் மகன். தண்ணீருக்குள்ளிருந்து ஒருமுறை எம்பிப் பார்த்த தகப்பன் கத்தினான்: "டேய் அவர்கள் வந்து காப்பாற்றுவதாக இருந்தால் காப்பாற்றட்டும். ஆனால் எவருக்கும் முப்பது ரூபாய்க்கு மேல் கூலி வழங்க ஒத்துக் கொள்ளாதே"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# ஓடுகின்ற சிந்தனைகள்



– வ. சசிகுமார்

பொழுது புலர்ந்து கொண்டிருந்தது. மென்மையான சூரியக் கீற்றொளிகள் எங்கும் தெறித்தது. அதன் ஒருதுளி வீட்டின் முகட்டிலுள்ள ஒரு துவாரத்தினூடாக ரகுவின் விரக்தி முகத்தில் பட்டுத் தெறித்தது. சூடு அழுத்த, திடுக்கென எழுந்து கடமைகளை முடித்து அலுவலகம் நோக்கி வேகமாக சைக்கிளை மிதித்தான்.

"என்னதான் பறந்தாலும் ஊர்க் குருவி பருந்தாகுமா?"

ஜில் என்று காற்றும், அதற்கு மேலாக அந்த பஸ் வண்டியினால் எழுப்பப்பட்ட புழுதியும் அவன் வேகத்தைக் குறைத்தன.

"அடேங்கப்பா அந்த பஸ் எவ்வளவு வேகமாப் போகுது! என்னதான் அது என்னை முந்திச் சென்றாலும் அந்த பண்டடியில் நிற்கத்தான் வேணும். அப்ப நான் கட்டாயம் முந்திடுவன்" என நினைத்து சிறிது சிரிப்பான். முந்த வேணும் என்ற நோக்குடன் இன்னும் வேகமாக மிதிப்பான்.

மாட்டு வண்டில் வேறு.

அது "டாங் டிங்" என ஆடிச் செல்லும்போதுமாட்டைஓட்டுபவன் மீது சிறு கோபமும் வரும். "விசர் மடையன் என்ன அடி அடிக்கிறான் அந்த மாட்டுக்கு, சே.... அடியாத மாடு படியாதா? அல்லது அந்த மாடுதான் சுணைக்கெட்டதா? அது மட்டுமா, ரோட்டும் கூட பழுதுபடாதா?... ஓசில ஓட்டுப் போடுற கதைதான்."

இப்போ இவனைத் தாண்டி மறு பஸ்ஸும் போய்விட்டது.

சும்மா சொல்லக்கூடாது ஆயிரம் பிரச்சினைகள் இவனுக்கு. அவை மனக்குமுறல்களாகவும், வேதனையாகவும் வெளிவருவது உண்மைதான். தனக்குள்ளே "கள்ள மாட்டு மனமே, குரங்கு மனமே ஏன் என்னைத் தொந்தரவு செய்கிறாய். துக்கங்களை மற. அதுவே நீ எனக்குச் செய்யும் மிகப் பெரிய உபகாரம்" என கட்டளை இட்டும் பயனற்றுப் போனது.

"ஹலோ ரகு என்னடா கவனியாமல் போறா, இண்டைக்கு என்ர மாமாட்ட இருந்து வெளிநாட்டுக் கோல் வரும், என்னண்டு கேட்டு அறிஞ்சு வை. பின்னேரம் நான் சந்திக்கிறன்" என்றபடி ராமு எதிர்ப்பட்டான். பதிலுக்கு இவனும், "பிறகென்ன, மாமாட்ட இருந்து பெண்ணை மட்டுமல்ல, பொன்னையும் வாங்கப் போறாய். நீ பெரிய கில்லாடிதான்." எனக் கூறிக்கொண்டே சைக்கிளை வேகமாய் மிதித்தான்.

அலுவலக வாசலை வந்தடைகிறான் ரகு.

வழக்கம் போல வேலைகள் ஓடிக்கொண்டிருந்தது. 'குட்மோர்னிங் ரகு' என்றவர்களுக்கு பதில் 'குட்மோர்னிங்' கூறி தன் வேலையைக் கவனிக்க அமர்ந்தான்.

முதலாளி அறையைப் பார்த்த ரகு, அங்கு அவர் இல்லை என்பதை அவதானித்தான். சுற்றிலும் பார்த்தபோது அந்த ஞாபகம் வந்தது. "வீதியில் சென்ற மாட்டு வண்டி இவர்களைவிட முன்னேற்றம்தான்"

வேலையை முடித்தான்.

பின்னர் ரமணிசந்திரனின் கதையைப் புரட்டி ஒரு வரி வாசிப்பதற்குள்.... திடீரென ஏக்கங்களும், ஆசைகளும் துன்பங்களும் கதை வாசிக்கும் மூட்டைக் கலைத்தது. புத்தகத்திலுள்ள ஒவ்வொரு வரியும், ஏன் ஒவ்வொரு சொல்லும் ஒவ்வொரு சம்பவத்தை ஞாபகப் படுத்த அவன் தன்னையறியாமல் கடந்த கால வாழ்வுக்கே சென்று விடுவான்.

அவன் பிரச்சினைக்குக் காரணம் ஒன்றா இரண்டா? தந்தை இல்லை, தன்னை ஓரளவுக்கேனும் படிக்க வைத்த தாயைப் பார்ப்பதா? இரு தங்கைகளைக் கரை சேர்ப்பதா? பணம் எங்கே? குடும்பமே அவன் பொறுப்பில்.

இதற்கு மேலாக வேலை, நேரம், ஒழுங்கு என வாயால் போராடும் முதலாளி.... செத்தாலென்ன என்று ரகுவுக்குத் தோன்றுவதுண்டு. அவனை மேலும் ரென்ஸன் படுத்த, இருக்கவே இருக்கிறது ரெலிபோன் அலறல்....

ஒ.்.பீஸில் உள்ள கமலண்ண, குணாண்ண கூட "தம்பி ரகு, ஓடியாடா ஒரு கதை" என அழைக்கையில் சென்று அவர்களுடன் பன்பல் அடிப்பதும் ஒரு தனிச் சுவாரஷ்யம் தான். அந்நிகழ்வில் -

"திடீரென சிலர் வேண்டுமென்றே இதயத்தைக் கடினமாக்கினம்" என்ற குணாண்ணையின் குத்தல் ரகுவைப் பதற வைத்தாலும் சமாளித்து, "இல்ல குணாண்ண, எப்பவாம் சம்பளம். இந்த முறை சம்பளம் எடுத்தால் எல்லோருக்கும் கவனிப்புத்தான், நீங்கள் நழுவினாலும் விடமாட்டன்" என கதையைமாற்ற அவரும், "நிச்சயமா தம்பி இந்த முறை பெரிய பார்ட்டியே கொண்டாடுவம். வேணுமெண்டால் நீ பாரன் எப்பிடி நடக்குதெண்டு" என கதையை நீட்டினார்.

அவர்களில் கமலண்ணை எண்டால் ரகுவுக்குக் கொள்ளை பிரியம். எப்பவும் பகிடி விட்டுக் கொண்டிருப்பார். அங்கு அவனுக்குப் பிடித்ததே அவர்தான். துன்பத்திற்கு மது தான் என்பார்கள் குடிகாரர்கள். ரகுவுக்கு கமலண்ணையே மதுவாகத் தெரிந்தார். அவர் உடற்கட்டும், சிரிக்க வைக்கும் நகைச் சுவைக் கதைகளும், வீரக் கதைகளும் அந்தக் காலத்து வீரப்பனை நினைவுபடுத்தும். "செய்திகள் வாசிப்பவர் மண்டை பழுதான மாணிக்கம்" என அடுக்கத் தொடங்கினால் சொல்லத் தேவையில்லை. அவர் நிறுத்தினாலும், "கமலண்ணை இன்னும் சொல்லுங்கோவன் கேட்பம்" என ரகு அடம்பிடிப்பது வழக்கம்.

அந்தச் சிறிது நேரத்திலாவது சந்தோஷத்தை அனுபவிக்கலாம் அல்லவா.

சிலர் பல தனிப்பட்ட விசயங்களைப் பெற்றோருக்குச் சொல்ல மாட்டார்கள். ஆனால், நண்பர்களுக்குச் சொல்லுவார்கள். அதிலும் இப்படி அரட்டையடிக்கும் இடங்களில் உணர்ச்சிவசப்பட்டு பலவற்றையும் கக்கி விடுவார்கள். இது பிரச்சினைகளைக் கொட்டிவிட வசதிதான். ஆனாலும் ரகுவின் பிரச்சினை இப்படித் தீரவா போகிறது?

"தம்பி ரகு, எங்கட குடும்பத்தில உன்னைஉன்ர அப்பா மேலபடிக்க வைக்க வேணும் என்று துடிச்சவரடா, இப்ப அவர் இருந்து உன் நிலைமையை எண்ணிக் கவலைப் படுறதைவிட, செத்துப் போனதே மேலப்பன்" என்ற அம்மாவின் ஏக்கக்குரல் எங்கேயோ இருந்துவந்து அவன் நெஞ்சை குத்தியது. காலை படிப்பு, மதியம் பாடசாலை, இரவு படிப்பு என்பதன்றி வேறொன்றையும் அறியாது கற்றவனுக்கு நம்பத்தகாத பெறுபேறு...!

அது அந்தக் குடும்பத்துக்கே பேரிடியாக விழுந்தது.

வறண்ட நிலம் பார்த்து மேகம் கண்ணீர் வடித்தது. இவன் நிலை பார்த்து இவனிடமே கண்ணீர்....

ஒ.்.பிஸில், "சேர் எனக்கு புறமோஷன் கிடைக்குமா, குடும்பமே என்னில்தான் தங்கியுள்ளது. பிளீஸ் சேர் என்னைக் கைவிட்டு விடாதேயுங்கோ"

"டேய் என்ன பைத்தியக்காரத்தனமா பேசுறாய், நீ வந்து கொஞ்ச நாள்தானே... அதுக்குள்ள புறமோஷன் எண்டால்.... ஒண்டு சொல்றன் நீ இங்கு ஓடியாடி வேலையைச் செய்வதோடு, எனக்கும் தனிப்பட்ட சிலவற்றைச் செய் அப்பதான் ஓரளவு..." என இழுக்க, ரகு தொண்டையில் எச்சிலை கஷ்டப்பட்டு விழுங்கிக் கொண்டு "சரி சேர்..." மெதுவாக இழுத்துவிட்டுச் சென்றான்.

வாழ்க்கைமேல் திகில் கொள்ள வைக்கும் பெரிய எரிமலை அவனுக்குள் வெடித்தது.

வேலை முடிந்து சைக்கிளை மிதிக்கத் தொடங்கினான். அவனது நோக்கம் மேலே உயர்வதல்ல. தாழ்ந்து விடாது குடும்பம் வாழச் செய்வதே.

அந்த மாட்டு வண்டி இப்போது திரும்பிச் சென்றதைப் பார்த்தான். "தம்பி உங்களை காப்பாத்துவான்" என்ற அப்பாவின் ஏக்கக் குரலும், "அண்ணா கலியாணம் செய்து வைப்பான்" என்றுதங்கையின் எதிர்பார்ப்புக் குரலும் அவன் சைக்கிள் பெடல் கட்டைகளில் எதிரொலித்தன.

மேற்கு ஆதவனின் செங்கதிர் கன்னத்தில் பட்டுச் சுட்டது. ஒரு தெம்புடனும் மிடுக்குடனும் பார்த்தான். ஆயிரம் கைகள் மறைத்தாலும் மறையாத ஆதவன் சகலருக்கும் ஒளி தருகிறான்.... பாரினில் இவன் இடர் இன்றல்ல என்றோ ஒரு நாள் தீரும்" என்ற ஒளி நம்பிக்கை இவனுக்குள் எழ பெடலை வேகமாய் மிதித்தான். ●



அவன் இரக்க சுபாவம் மிக்கவன். ஒரு நாள் ஆமையொன்று அவன் கையில் சிக்கியது. அதை சூப் போட்டு சாப்பிட நினைத்தாலும் அதைக் கொன்ற குற்றத்திற்கு ஆளாகவும் அவன் விரும்பவில்லை. ஒரு பாத்திரத்தில் தண்ணீரைக் கொதிக்க வைத்து அதன்மீது ஒரு கம்பியை குறுக்காக வைத்து ஆமையிடம் இப்படிக் கூறினான்.

"நீ இந்தக்கம்பி மீது ஏறி மறுமுனைக்குச் சென்றுவிட்டால் உன்னை விட்டு விடுகிறேன்."

சாக விருப்பமில்லாத அது மன உறுதியை வரவழைத்துக் கொண்டு கம்பியைக் கடந்து விட்டது.


இரக்கசாலி கூறினான்: "சபாஷ்... சபாஷ்..! எங்கே இன்னொரு முறை செய்து காட்டு பார்க்கலாம்!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளிப் பனி மீது

வெள்ளைப் பனி மீது ஓர் அற்புத நடனம்! பனியில் சர்ரென வழுக்கிக்கொண்டு அழகுக் கோலம் போடும் அந்தப் பாதங்களில் தான் எத்தனை வேகம்! கச்சிதம்!





விர்ரென்று பாய்வதும், நில் என்றால் அச்சொட்டாய் நிற்பதும், சுற்றிச் சுழன்று தாவி வந்து தன் சோடியைச் சேர்வதும், சேர்ந்த வேகத்தில் அள்ளித் தூக்கி ஆகாயத்தில் உயர்த்தி அப்படியே அரங்கத்தை வட்டம் போடுவதும் பின் விட்டுப் பிரிவதும், பிரிவைத் தாளாது மீண்டும் வளைய வருவதுமாய்.....

ஒரு விரக தாபத்தை உணர்ச்சிப் பண்டமாய் விரல் நுனியில் நிறுத்திச் செய்யும் மிகவசீகரமான இந்த நடனக் கோலம் அவ்வளவு சுலபமானதல்ல. ஆணும் பெண்ணும் சோடியாய் இணைந்து பனிப் படலத்தின் மீது நுனிக் காலில் செய்யும் இந்த விந்தை நடனத்தை நாம் வியந்து பார்த்து மகிழும் சந்தர்ப்பத்தை எமக்கு தொலைக் காட்சிதான் ஏற்படுத்தித் தந்திருக்கிறது. நம் நாட்டில் எங்கே பனி? ஆனால் தற்போது புலம் பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் எம்மவருக்கு இதை நேரடியாகக் கண்டுகளிக்கக் கூடியதாய் இருக்கலாம்.

ஆயினும் இந்தப் பனிச் சறுக்கல் நடனத்தைப் பற்றி நாம் அறிந்து கொண்டது குறைவு.

பார்ப்பதற்கு அழகாயிருக்கும் இந்தச் சாகசங்களைச் செய்வதற்கு உண்மையில் அதிக தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். பாதத்தில் சப்பாத்தில் பொருத்தப்பட்ட மெல்லிய பிளேட்டில்தான் உடலின் மொத்த சமநிலையும் பேணியபடி அசைவுக்கான உந்து விசைகளையும் கணக்காகச் செலுத்தி நிறுத்தவும், வளைந்து திரும்பவும் வேகப்படுத்தவும், குறைக்கவும் வேண்டும். அதுவும் இசைக்கும் இசையோடு இசைந்த அசைவுகளாக இருக்க வேண்டும். அத்தோடு தன் சோடியோடு ஒத்திசைந்து செயற்பட வேண்டும்.

இப்படி நடக்கும் பனிச் சறுக்கல் விளையாட்டு பலவகைப்பட்டது.

ஆரம்ப காலத்தில் பனிச்சறுக்கலென்பது கி. மு. 1000 ஆண்டுகளில் நோர்வே, சுவீடன் போன்ற ஸ்கன்டிநேவியன் நாடுகளில் தோன்றியது. உறைந்த ஆறுகள், ஏரிகள் ஆகியவற்றில் பிரயாண மார்க்கமாக இச்சறுக்கல் நுட்பத்தை அவர்கள் கையாண்டார்கள். பனியில் நடந்து செல்வதைவிட இது வேகமான பயணமாக அவர்களுக்கு இருந்தது.

அப்போது அவர்கள் காட்டெருமை, மரை போன்ற விலங்குகளின் விலா எலும்புகள் பொருத்திய சறுக்கல் சப்பாத்து (*Skate*) தயாரித்து பனியில் சறுக்கிச் சென்றார்கள். பின்னர் எலும்புகளுக்குப் பதில் உலோகத் தகடுகளைப் பயன்படுத்த ஆரம்பித்தனர். எனினும் எலும்பின் பாவனை 12ம் நூற்றாண்டு வரை இங்கிலாந்தில் காணப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில் அகலமான உலோக முளைகளே பாவிக்கப்பட்டன. ஆனால் ஒடுங்கிய பிளேடுகள் இதற்கென அறிமுகப்படுத்தப்பட்டதையடுத்து 17, 18ம் நூற்றாண்டுகளில் ஸ்கேட்டிங் மிகப் பிரபல்யமடையலாயிற்று.

மத்திய காலத்தில் நெதர்லாந்தின் கணவாய்களில் ஆண்களும் பெண்களும் பொழுதுபோக்கிற்கு ஸ்கேட்டிங் செய்யத் தொடங்கியதையடுத்து பிரயாணத்துக்கான முறையாக இருந்து வந்த ஸ்கேட்டிங் பொழுதுபோக்கு விளையாட்டாக மாறத் தொடங்கியது. அது 17ம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் பிரபல்யமடையத் தொடங்கியது.

1740களில் ஸ்கேட்டிங் வட அமெரிக்காவில் அறிமுகமானது. 1742ல் முதலாவது ஸ்கேட்டிங் கிளை ஸ்தாபிக்கப்பட்டது. 1776ல் பிரான்சுக் கோட்டையிலும் இது மாரி அன்டொய் நிலியால் ஆடப்பட்டதாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு வசீகர விளையாட்டு

அதுமட்டுமல்ல மாவீரன் நெப்போலியன் போனபாட் கூட 1781ல் (Auxerre) ஒக்சரில் ஸ்கேட்டில் செய்தார் என்று அறியக்கூடியதாக இருக்கிறதென்றால் ஸ்கேட்டிங் எவ்வளவு விருப்பத்துக்குரிய பிரபலமான விளையாட்டாக ஆகியிருந்தது என்பதைப் பார்த்துக் கொள்ளலாம்.

இன்றைய ஸ்கேட்டிங் விளையாட்டு மூன்று வகைப்பட்டதாக உள்ளது.

*Speed Skating* - வேகப் பனிச் சறுக்கல் ஒரு வகை.

*Figure Skating* - உருவப் பனிச் சறுக்கல் இன்னொரு வகை.

ஐஸ் ஹொக்கி விளையாட்டு மற்றொரு வகை.

ஸ்பீட் ஸ்கேட்டிங்கில் நிர்ணயிக்கப்பட்ட தூரத்துக்கான 500 முதல் 750 கிலோ மீற்றர் வரையிலான ஸ்கேட்டிங் முறை ஓட்டப் பந்தயம் நடத்தப்படும்.


ஐஸ் ஹொக்கி என்பது பனியில் விளையாடப்படும் ஒரு வகை ஹொக்கி விளையாட்டு.

ஆனால் நாம் இங்கே நோக்கும் நடனங்களும் சாகசங்களும் அமைந்துள்ளது. ஃபிகர் ஸ்கேட்டிங் - அதாவது உருவப் பனிச்சறுக்கல் என்ற வகையில்தான். இது கலைத்தன்மை கொண்ட ஒரு ஸ்கேட்டிங் நிகழ்ச்சியாகும்.

ஆரம்பத்தில் இந்த ஃபிகர் ஸ்கேட்டிங்குக்கான சட்ட திட்டங்கள் கப்டன் றொபேட் ஜோன்ஸ் என்பவரால் 1772ல் முதன் முதலில் வகுக்கப்பட்டது. அப்போது அதன் வளைவுகள், கடப்புகள், வடிவங்கள் என்பனவும் உடல் நெளிவுகள் கால் எத்துக்கள் என்பவையும் எளிமையானவையாக இருந்தன. பின்னர் காலப் போக்கில் சிக்கலான நுட்பங்கள் சேர்ந்தன.

1864ல் பலே நடன ஆசிரியரான ஜக்ஸன் ஹெய்நிஸ் என்னும் அமெரிக்கரால் இந்த ஃபிகர் ஸ்கேட்டிங் மிக அழகானதாகவும் அற்புதமானதாகவும் வடிவமைக்கப்பட்டது. அவர் இதில் ரிதம் கொண்ட இசையைப் புகுத்தி அதன்









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூலம் எத்தனை அழகிய அசைவுகளை வெளிப்படுத்தலாமெனக் காண்பித்தார்.

இந்த ஃபிகர் ஸ்கேட்டிங் மூன்று கிளைகளைக் கொண்டது. *Solo skating* எனும் தனித்த பனிச்சறுக்கல் விளையாட்டு ஒரு ரகம்.

இந்த விளையாட்டில் ஸ்கேட்டிங் மூலம் பனிப் படலத்தில் 69 வகையான வரைவுகள் வரையப்படும். அந்த வரைவுகளின் கடினத் தன்மை போட்டிக்குப் போட்டி வேறுபடலாம். இந்த வரைவுகளை வரைந்து காட்டுவதை விட அவ்வீரரின் சுதந்திரமான ஸ்கேட்டிங் (*Free Skating*) நிகழ்ச்சியும் இடம்பெறும். அதில் பாய்தல், சுற்றுதல், சுழலுதல், மற்றும் நடன அசைவுகளில் தமக்குரிய திறமையை இசைக் கேற்பச் செய்து காட்டுவார்.

அடுத்த வகை *Pair Skating* எனப்படும் சோடி ஸ்கேட்டிங். இங்கு படங்களில் காணப்படுவது.

இதில் ஆணும் பெண்ணுமாகச் சோடியாக சுதந்திரமான முறையில் ஸ்கேட்டிங் நிகழ்ச்சியொன்றை வழங்குவர். இவர்கள் இருவரும் ஒருவருக்கொருவர் ஒத்திசைத்தபடி இசையுடன் சேர்ந்து நடனமும் சாகசமும் கலந்த அசைவுகளைச் செய்வர். இதில்தான் *Lift* எனப்படும் ஒரு சாகச அம்சம் செய்து காண்பிக்கப்படுகிறது.

அதில் ஸ்கேட்டிங் அசைவுகளைச் செய்தபடியே ஆண் பெண்ணை பலவாறு தூக்கி, ஆடி, பின் லாவகமாகத் தரையில் இறக்குவார். இந்நிகழ்ச்சியில் இருவருமாகச் சுற்றிச் சுழன்று இணைந்தும் பிரிந்தும் ஈர்ப்பு மிக்க, விரகதாபம் தொனிக்கும் அழகான பனிச்சறுக்கல் கோலங்களை நாம் ரசிக்கலாம்.



மூன்றாவது வகைதான் *Ice dance* எனப்படும் பனி நடனம். 1683ல் லண்டன் நகரில் ஏற்பட்ட மிகப் பெரும் பனி உறைவின்போது சாமுவேல் பெப்பிஸ் என்பவர் அப்பனியில் நடனமாடியதாக நாம் அறிந்தாலும் நவீன பனி நடனம் 1880களில் வெய்னா ஸ்கேட்டிங் கிளப்பால் அறிமுகப்படுத்தப்பட்டது.

இந்த ஐஸ் நடனம் வோட்ஸ், ஃபொக்ஸ் - ட்ரொட்ஸ், டாங்கோ போன்ற பிற நடனங்களிலிருந்து தொகுக்கப்பட்டது.



1930களின் பின் இந்நடனம் துரித வளர்ச்சி கண்டது. சர்வதேச ரீதியாக அங்கீகரிக்கப்பட்ட 10 முதல் 14 வகையான அசைவுகள் இந்த நடனத்தில் உள்ளன. சோடிப் பனிச்சறுக்கலில் உள்ளது போல் இங்கு பலத்தையும் ஆற்றலையும் காட்ட வேண்டிய அவசியம் இல்லை. அத்தோடு இங்கு எவரையும் பனிப் படையை விட்டு முழுதாகத் தூக்குவதற்கு அனுமதிக்கப்படுவதில்லை. பனித்தரையில் ஸ்கேட் எப்போதும் தொட்டபடி இருக்க வேண்டுமென்பது இந்நடனத்தின் பிரதான விதி.

1892ல் ஸ்கேட்டிங் விளையாட்டிற்கான சர்வதேச ஸ்கேட்டிங் யூனியன் (I.S.U.) உருவாக்கப்பட்டது. 1908ல் முதலாவது சர்வதேச ஸ்கேட்டிங் போட்டி நிகழ்த்தப்பட்டது. அவ்வாண்டே ஸ்கேட்டிங் ஒலிம்பிக்விளையாட்டில்சேர்த்துக் கொள்ளப்பட்டது.

1950ல்தான் ஐஸ் டான்சிற்கான சர்வதேச சாம்பியன் போட்டி I.S.U. மேற்பார்வையில் ஆரம்பிக்கப்பட்டது.

மிகக் கவர்ச்சிகரமான, சாகசம் நிறைந்த, யாவராலும் விரும்பிப் பார்க்கப்படும் கலைத் தன்மை வாய்ந்த விளையாட்டான ஸ்கேட்டிங்கில் இன்றுவரை அற்புதமான பல சாகச வீரர்கள், வீராங்கனைகள், நடன விற்பனர்கள் தோன்றிவிட்டார்கள். சில்லிட வைக்கும் பனியைப் போலவே அதன் மீது உலவியபடி இந்தத் திறமையானவர்கள் உலகைக் கிறங்கடித்துக் கொண்டிருக்கிறார்கள்.

**- தர்ஷி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் வியாபார நடவடிக்கைகளுக்கான
"சென்றல்"
இடம்
வரையறுக்கப்பட்ட சென்றல் ஃபினான்ஸ் நிறுவனம்

# கவர்ச்சியான வட்டி

லீசிங்

காப்புறுதி வசதிகள்

வாடகை உரித்து

கழிவு பற்றுச் சீட்டு (பில்):

ஃபினான்ஸ் வர்த்தகம்

செயற்பாட்டு வரி

வீடு, சொத்து கடன்

## வரையறுக்கப்பட்ட சென்றல் ஃபினான்ஸ் நிறுவனம்

தலைமை அலுவலகம்

84, இராஜ வீதி, கண்டி. தொலைபேசி: 08-234278, 234247, 234394, 223842, 227000

நகர அலுவலகம்

270, வக்சோல் வீதி, கொழும்பு -02. தொலைபேசி: 448573, 300555

காட்சியறை

254, கட்டுகஸ்தோட்டை வீதி, கண்டி. தொலைபேசி: 08-234234, 08-234235

கிளை அலுவலகம்

அநுராதபுரம், பதுளை, தெஹிஅத்தகண்டிய, காலி, கம்பஹா, குருனாகல், மாத்தளை, மாத்தறை, நீர்கொழும்பு, இரத்தினபுரி, பொலன்னறுவை

செழிப்பாய் வளரவும் சுபீட்சம் பெறவும் நாம் உங்களுக்கு உதவுவோம்

10814



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அமுது

ஜனவரி 2000

**ஜனவரி**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | 31 | 3 | 10 | 17 | 24 |
| செ | .. | 4 | 11 | 18 | 25 |
| பு | .. | 5 | 12 | 19 | 26 |
| வி | .. | 6 | 13 | 20 | 27 |
| வெ | .. | 7 | 14 | 21 | 28 |
| ச | 1 | 8 | 15 | 22 | 29 |
| ஞா | 2 | 9 | 16 | 23 | 30 |

**பெப்ரவரி**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | .. | 7 | 14 | 21 | 28 |
| செ | 1 | 8 | 15 | 22 | 29 |
| பு | 2 | 9 | 16 | 23 | .. |
| வி | 3 | 10 | 17 | 24 | .. |
| வெ | 4 | 11 | 18 | 25 | .. |
| ச | 5 | 12 | 19 | 26 | .. |
| ஞா | 6 | 13 | 20 | 27 | .. |

**மார்ச்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | .. | 6 | 13 | 20 | 27 |
| செ | .. | 7 | 14 | 21 | 28 |
| பு | 1 | 8 | 15 | 22 | 29 |
| வி | 2 | 9 | 16 | 23 | 30 |
| வெ | 3 | 10 | 17 | 24 | 31 |
| ச | 4 | 11 | 18 | 25 | .. |
| ஞா | 5 | 12 | 19 | 26 | .. |

**ஏப்ரல்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | .. | 3 | 10 | 17 | 24 |
| செ | .. | 4 | 11 | 18 | 25 |
| பு | .. | 5 | 12 | 19 | 26 |
| வி | .. | 6 | 13 | 20 | 27 |
| வெ | .. | 7 | 14 | 21 | 28 |
| ச | 1 | 8 | 15 | 22 | 29 |
| ஞா | 2 | 9 | 16 | 23 | 30 |

**மே**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | 1 | 8 | 15 | 22 | 29 |
| செ | 2 | 9 | 16 | 23 | 30 |
| பு | 3 | 10 | 17 | 24 | 31 |
| வி | 4 | 11 | 18 | 25 | .. |
| வெ | 5 | 12 | 19 | 26 | .. |
| ச | 6 | 13 | 20 | 27 | .. |
| ஞா | 7 | 14 | 21 | 28 | .. |

**ஜூன்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | .. | 5 | 12 | 19 | 26 |
| செ | .. | 6 | 13 | 20 | 27 |
| பு | .. | 7 | 14 | 21 | 28 |
| வி | 1 | 8 | 15 | 22 | 29 |
| வெ | 2 | 9 | 16 | 23 | 30 |
| ச | 3 | 10 | 17 | 24 | .. |
| ஞா | 4 | 11 | 18 | 25 | .. |

**ஜூலை**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | 31 | 3 | 10 | 17 | 24 |
| செ | .. | 4 | 11 | 18 | 25 |
| பு | .. | 5 | 12 | 19 | 26 |
| வி | .. | 6 | 13 | 20 | 27 |
| வெ | .. | 7 | 14 | 21 | 28 |
| ச | 1 | 8 | 15 | 22 | 29 |
| ஞா | 2 | 9 | 16 | 23 | 30 |

**ஆகஸ்ட்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | .. | 7 | 14 | 21 | 28 |
| செ | 1 | 8 | 15 | 22 | 29 |
| பு | 2 | 9 | 16 | 23 | 30 |
| வி | 3 | 10 | 17 | 24 | 31 |
| வெ | 4 | 11 | 18 | 25 | .. |
| ச | 5 | 12 | 19 | 26 | .. |
| ஞா | 6 | 13 | 20 | 27 | .. |

**செப்டம்பர்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | .. | 4 | 11 | 18 | 25 |
| செ | .. | 5 | 12 | 19 | 26 |
| பு | .. | 6 | 13 | 20 | 27 |
| வி | .. | 7 | 14 | 21 | 28 |
| வெ | 1 | 8 | 15 | 22 | 29 |
| ச | 2 | 9 | 16 | 23 | 30 |
| ஞா | 3 | 10 | 17 | 24 | .. |

**ஒக்டோபர்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | 30 | 2 | 9 | 16 | 23 |
| செ | 31 | 3 | 10 | 17 | 24 |
| பு | .. | 4 | 11 | 18 | 25 |
| வி | .. | 5 | 12 | 19 | 26 |
| வெ | .. | 6 | 13 | 20 | 27 |
| ச | .. | 7 | 14 | 21 | 28 |
| ஞா | 1 | 8 | 15 | 22 | 29 |

**நவம்பர்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | .. | 6 | 13 | 20 | 27 |
| செ | .. | 7 | 14 | 21 | 28 |
| பு | 1 | 8 | 15 | 22 | 29 |
| வி | 2 | 9 | 16 | 23 | 30 |
| வெ | 3 | 10 | 17 | 24 | .. |
| ச | 4 | 11 | 18 | 25 | .. |
| ஞா | 5 | 12 | 19 | 26 | .. |

**டிசம்பர்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தி | .. | 4 | 11 | 18 | 25 |
| செ | .. | 5 | 12 | 19 | 26 |
| பு | .. | 6 | 13 | 20 | 27 |
| வி | .. | 7 | 14 | 21 | 28 |
| வெ | 1 | 8 | 15 | 22 | 29 |
| ச | 2 | 9 | 16 | 23 | 30 |
| ஞா | 3 | 10 | 17 | 24 | 31 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# தேவதை சொன்ன கதை

- ஷோபாசக்தி -

**"நாங்கள் தேவதைகளின் நகருக்குள் இறங்கிக் கொண்டிருக்கிறோம். இதோ தேவதைகளின் நகரம் பாங்கொக் உங்களை வரவேற்கிறது"**

**இவன் பிரான்ஸில் ஏறி பாங்கொக்கில் வந்து இறங்கும்போது விமானத்தில் பாங்கொக்கை இப்படித்தான் அறிமுகப்படுத்தி வைத்தார்கள். ஆனால் இந்த தேவதைகளைத் தேடிபாங்கொக் நகர வீதிகளிலே திரிவேன் என்று அப்போது இவன் கொஞ்சமும் நினைத்திருக்கவில்லை.**

இவன் கல்யாணம் முடிக்கத்தான் பாங்கொங் வந்தான். ஆனால் கல்யாணம் குழம்பிப் போனது. உடனே திரும்பிப் பிரான்சுக்குப் போக இவனுக்கு விருப்பம் இல்லை. அங்கே அறிந்தவர்கள் தெரிந்தவர்களிடமிருந்து ஆயிரம் கேள்விகள் வரும். ஆயிரம் கேள்விகளும் ஆயிரம் 'நாக்கிளிப் புழுக்களுக்கு' சமனாயிருக்கும். இவனை போகவிட்டு முதுகுக்குப்பின்னால் சிரிப்பார்கள். தாய்லாந்தில் மூன்று மாத விசா கொடுத்திருந்தார்கள். ஒருமுறை தாய்லாந்தை சுற்றி வந்தான்.

தாய்லாந்தின் புராதன தலைநகரம் 'அயோத்தியா'வுக்கு போனான். மலைகளின் ராணி 'உடப்போ'னுக்கு போனான். தங்கக் கடற்கரை 'பத்தயா'வுக்கு போனான். ஆனால் அலைகளிலும் மலைகளிலும் ரசிப்பதற்கு எதுவும் இருப்பதாக இவனுக்குத் தெரியவில்லை. வழிகளில் சில தேவதைகள் இடறத்தான் செய்தார்கள். அவர்களை வேடிக்கை பார்த்தான். சாடையாக பரிதாபப்பட்டான். அவ்வளவுதான்.

நாளைக்குபிரான்சுக்குதிரும்பிப் போகவேண்டும். ஆனால் காலை தொடங்கி மனதில் ஒரு சின்னக் குழப்பம். ஒரு தேவதையைத் தொட்டுப் பார்த்தால் என்ன? என்று யோசித்தான். முப்பது வயசாப் போச்சுது, வாழ்க்கையில 'என்னத்தைக் கண்டன்' என்று பத்து நிமிடங்களுக்கு ஒரு முறை சொல்லிக் கொண்டான். 'இல்ல இது ஒரு மனச்சாட்சி இல்லாத வேலை' என்றும் ஒரு மணி நேரத்துக்கு ஒரு தடவை மெதுவாக சொல்லிக் கொண்டான். இரவு எட்டு மணிக்கு தங்கியிருந்த அறையைவிட்டு வெளியே வந்து வீதியில் இறங்கினான். 'எங்கே போகிறேன்?' என்று கேட்டுக் கொண்டான். 'சும்மா இப்படியே காலாற நடந்து வரப் போகிறேனாக்கும்' என்று வாய்க்குள் முணுமுணுத்தான். ஏதோ இவனின் மூளை கட்டளையிடாமலேயே கால்கள் தாமாக 'சுத்திசான் வீதி'க்குள் நுழைவதாகவும், இது ஒரு மனோதத்துவப் பிரச்சினை என்றும் இதற்குத்தான் கொஞ்சமும் பொறுப்பாளி ஆக முடியாதென்றும் நம்ப முயன்றான்.

பகல் முழுவதும் தூங்கும் 'சுத்திசான் வீதி' இருட்டிவிட்டால் முகம் கழுவி எழுந்துவிடும். வீதியின் இரு புறங்களிலும் நூற்றுக்கணக்கான விடுதிகளும், ஆயிரக்கணக்கான தேவதைகளும், விடுதிக்குள் கண்ணாடிகளால் சூழப்பட்ட காட்சியறைக்குள் தேவதைகள கூட்டம் கூட்டமாக இருப்பார்கள். தேவதைகளின் இதழ்கள் முப்பது விநாடிகளுக்கு ஒரு முறை தானியங்கி முறையில் புன்னகையாய் விரிந்து மூடும். தேவதைகளின் மார்புகளில் அவர்களது அடையாள இலக்கம் குறிக்கப்பட்டிருக்கும்.

இவன் விடுதிக்குள் உள்ளிட்டு ஒரு மூலையாய் நின்று கொண்டான். தேகம் ஓர்முறை நடுங்கி நின்றது. விடுதி ஏற்கனவே 'விழாக் கோலம்" கொண்டிருந்தது. நீல விழிகள், பச்சை விழிகள், பூனை விழிகள், கருமை விழிகள், கண்ணாடி காட்சியறையைத் துளைத்துக் கொண்டிருந்தன. சில தேவதைகள் கைகளை உயர்த்தி அசைத்து "என்னை கூப்பிடுங்கள்.... என்னைக் கூப்பிடுங்கள்..." என்று சைகை செய்தார்கள். இவன் மெதுவாக விழிகளை உயர்த்தி தேவதைகளை நோட்டம் விட்டான். இலக்கம் 80... இலக்கம் 81.. இலக்கம் 82... இலக்கம் 83ல் கொஞ்சம் நிதானித்தான். அந்தத் தேவதை கண்களை இடமாகவும் வலமாகவும் வெட்டியபடியே கைகளை மார்புக்கு குறுக்காக கட்டியவாறு உட்கார்ந்திருந்தாள். அவள் அணிந்திருந்த ஆடைகள் அவளுக்குப் பொருத்தமில்லாமல் இருந்தன. இவள் மற்றைய தேவதைகளைப் போல பவுண் நிறமில்லை. நிறம் கொஞ்சம் குறைவாக இருந்தாள். கிட்டத்தட்ட ஒரு இந்தியச் சாயல் அவளில் இருந்தது. அந்த 'லுக்' இவனுக்குப் பிடித்திருந்தது. இவன் ஒரு முடிவுக்கு வந்துவிட்டான் என்பதை விடுதித் தலைவி ஊகித்துக் கொண்டிருக்க வேண்டும். இவனை நெருங்கி வந்தாள். இவன் கடைசியாய் கொஞ்சம் யோசித்துவிட்டு "நம்பர் எயிற்றி திறி" என்று மெதுவாக சொன்னான். விடுதித் தலைவி "பற்சிப் சாம்... பற்சிப் சாம்..." என்று அந்தத் தேவதையின் இலக்கத்தை ஒலிவாங்கியில் அறிவித்தாள். தேவதை திடுக்கிட்டவளாய் எழுந்து நின்றாள். கண்ணாடிக் கதவைத் திறந்துகொண்டு "டக்... டக்..." என்று குதிக்கால் செருப்புக்கள் ஒலி எழுப்ப இவனுக்குப் பக்கத்தில் வந்து நின்றாள். "சேர் காலையில் எட்டு மணிக்கு இவளை விட்டுவிடுங்கள்" என்று சொல்லிச் சிரித்த விடுதித் தலைவி இவனிடம் ஆயிரம் பாத்துக்கள் எண்ணி வாங்கிக் கொண்டாள்.

இவனும் தேவதையும் அந்த அறைக்குள் நுழைந்தார்கள். அறைக்குள் எந்தப் பக்கம் திரும்பினாலும் நிலைக் கண்ணாடிகளாகவே இருந்தன. தேவதை நிலைக் கண்ணாடிகளில் தெறித்து நூறாகத் தெரிந்தாள். அறையின் நடுவே பெரிய கட்டில் இருந்தது. கட்டிலின் மேலே கூரையிலும் ஒரு பெரிய கண்ணாடி தொங்கிக் கொண்டு கட்டிலைப் பிரதி எடுத்தது. தேவதை ஒன்றும் பேசாமல் குளியலறைக்குள் நுழைந்து குளிக்கத் தொடங்கினாள்.

இவன் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்தான். 'இவள் கொஞ்சம் நல்லடைப் பெட்டையாய் தெரியிறாள்' என்று யோசித்தான். ஆனால் இவன் தேவதைகளைப் பற்றி கதை கதையாய் கேள்விப்பட்டிருந்தான். வரும்போது பூனை மாதிரி வருவார்கள் என்றும், பின், தொடப் போகும்போது இன்னும் பணம் கேட்டு தொடவிடாமலே அழிச்சாட்டியம் பண்ணுவார்கள் என்றும் கேள்விப்பட்டிருந்தான். பாங்கொக்குக்கு புதியவர்கள் என்று தெரிந்துகொண்டால் இடுப்பிலுள்ள அரைஞாண் கொடியைக் கூட உருவிக்கொண்டுதான் விடுவார்கள் என்று கூட கேள்விப்பட்டிருந்தான். எனவே தான் ஒன்றும் பாங்கொக்குக்குப் புதியவனல்ல என்பதை அவளுக்குக் காட்டிக்கொள்ள விரும்பினான். தேவதை குளியலை முடித்துக்கொண்டு பாதங்கள் தரையில் படாமல் விரல்களால் நடந்து வந்து கட்டிலின் ஓரத்தில் அமர்ந்து கொண்டாள். ஒரு சின்ன வெள்ளைத் துண்டை மட்டும் உடம்புக்குக் குறுக்காக சுற்றியிருந்தாள். இவன் 'சேர்ட்'டை கழற்ற தேவதை அதை வாங்கி மடித்து வைத்தாள். இவன் "கப் குன் மா கப்" என்று தாய்லாந்து





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொழியில் நன்றி சொல்லித் தான் தாய்லாந்துக்குப் புதியவனல்ல என்று நிரூபிக்க இவனுக்குக் கிடைத்த முதலாவது சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டான்.

இப்போது தேவதை இவனுக்கு மிக நெருக்கமாக வந்து உட்கார்ந்துகொண்டாள். இவன் தேவதையைப் பார்த்து மெதுவாகச் சிரித்தான். தேவதையின் முகத்தில் உணர்ச்சி ரேகைகளே இல்லை. இவன் குரலுக்கு கொஞ்சம் கம்பீரத்தைக் கொண்டு வந்து கேட்டான்.

குன் சீ அலாய் கப்? (உன் பெயர் என்ன?)
தொங்ஸீயூ.
ஆயூ தொளாய் கப் (வயது என்ன)
சிப் யெற் (பதினேழு)

இவன் இன்னும் சில தாய்லாந்து மொழிச் சொற்களை ஞாபகப்படுத்தி பேச முயற்சிக்கையில் தேவதை இவனின் கையைப் பிடித்து "புட் தாய் மிடாய்கா புட் இங்கிலிஸ்" (எனக்கு தாய் பாஷை தெரியாது ஆங்கிலத்தில் பேசுங்கள்) என்றாள்.

இவன் கொஞ்சம் குழம்பிப் போனான். இவள் தன்னை ஏதோ புது 'ரூட்'டில் ஏமாற்ற முயற்சிக்கிறாளோ? என்று யோசித்தான். தேவதை அப்படியே கட்டிலில் படுத்து ஆடாமல் அசையாமல் படுத்துக் கொண்டாள். மூச்சுக் காற்றை அடிவயிற்றுக்குள் நிறுத்தி வைத்துக் கொண்டவள் போல் பற்களை வேதனையுடன் கடித்து முகத்தை இறுக்கிக் கொண்டாள். தேவதையின் கண்கள் மூடிக் கொண்டன. உதடுகளைச் சுழித்து "கமோன் சேர்" என்றாள். இவன் போய்விட்டான்.

நடுச்சாமத்தில் இவனுக்கு நித்திரை முறிந்தது. அப்படியே கண்களை மூடிக்கொண்டு படுத்திருந்தான். பற்களை கடித்துக் கொண்டு மூச்சுவிட சிரமப்படுபவன் போல மூசினான். கையை பொத்திப் பிடித்து மெதுவாக கட்டிலில் குத்தினான். இவன் இப்படியான சேட்டைகள் செய்தால் ஆள் எதையோ நினைத்து வருத்தப்படுகிறான் என்று அர்த்தம். அரைக் கண்ணை விழித்து தேவத்தையைத் தேடினான்.

தேவதை அறையின் மூலையில் அந்த வெள்ளைத் துண்டை இடுப்புக்கு மட்டும் கட்டிக் கொண்டு நிலத்தில் குந்தியிருந்தாள். இவன் விழித்ததை அவள் கண்டுகொண்டதாகத் தெரியவில்லை. மேலே கூரையில் தொங்கிய சர விளக்கையே உற்றுப் பார்த்துக் கொண்டு சிகரட் புகைத்துக் கொண்டிருந்தாள். இவனுக்கு இப்போது தேவதையைப் பார்க்க உண்மையிலேயே பெரிய பாவமாக இருந்தது. நெஞ்சில் சின்னதாக வலி கிளம்பியது.

பாரிசில் தானுண்டு தன் வேலையுண்டு. தங்கையின் லண்டன் மாப்பிள்ளைக்குக் கொடுத்த சீதனத்துக்குப் பட்ட கடனுக்கு வட்டியுண்டு என்று எட்டடிக்குப் பத்தடி அறையில் வாழ்ந்து கொண்டிருந்தவனுக்கு லண்டன் தங்கைதான் முதல் வெடி வைத்தாள்.

"பரிஸ் அண்ணைக்கும் முப்பது வயசாப் போச்சுது. நான் லண்டனில் பெரியண்ணை ஜேர்மனில, தம்பி சுவிஸில... பரிஸ் அண்ணன் தனியாய் கிடந்து கஷ்டப்படுறார். தனிய இருக்கிற இளந்தாரியளுக்கு கெட்டுப் போறதுக்கான 'சாண்ஸ்' வெளிநாடுகளில கூடுதலா இருக்கு. அதால பரிஸ் அண்ணைக்கு கெதியா ஒரு கலியாணம் செய்து வைக்கவேணும்" என்று தங்கை தொலைபேசியில் ஜெர்மனிக்கு வெடிக்க ஜெர்மனி ஊடாக சுவிஸ், சுவிஸ் ஊடாக கொழும்பு என்று இவனது திருமணப் பிரச்சினை சர்வதேச அளவில் வெடித்தது.

இவன் முதலில் கலியாணம் வேண்டாம் என்றான். உழைக்கின்ற சம்பளத்தில ஒரு தனி மனிதனே அறை வாடகை, வட்டி வரி, திறை, கிஸ்தி கட்டி மாத முடிவில் கையறு நிலையில் ரயிலுக்கு ரிக்கட் எடுக்க சில்லறை பிராங்குகள் கூட இல்லாமல் ரயில் நிலைய தடைக் கம்பிகளுக்கு மேலாய் உயரம் பாய்ந்து கொண்டிருக்கிறான். இவன் ஆண் பிள்ளை பாய்வான். வரப்போகும் மனைவியை உயரம் பாயச் சொன்னால் முடியுமா? எனவே "எனக்கு இப்போதைக்கு கலியாணம் வேண்டாம்" என்றான்.

இவனுக்கு மீண்டும் சர்வதேச மட்டத்தில் எதிர்ப்பு கிளம்பியது. அம்மா "இவன் மூலம் பேரன் பேத்திகளைக் காண்பதே தான் இந்த பூலோகத்தில் அவதரித்தன் நோக்கம்" என்று தொலைபேசி வழியே உள்ளத்தைஉருக்கினாள். "காய்ச்சல் துன்பம் வரும் நேரங்களில் மனைவியென்று ஒருத்தி இருந்தால் தேநீர் வைத்து தருவாள்" என்று ஒரே வரியில் தாம்பத்திய தத்துவத்தையே ஜெர்மனி அண்ணன் சுருக்கிக் கூறினார். "இந்தக் கிழவன் கல்யாணம் செய்தால்தானே நான் கல்யாணம் செய்யலாம்" என்று சுவிஸ் தம்பி லண்டன் அக்காக்காரியோடு புலம்பினான்.

இவன் அசைந்து கொடுக்கவில்லை. அந்த எட்டடிக்கு பத்தடி அறைக்குள் பெண்சாதி, கட்டில், பிள்ளை, தொட்டிலைக் கற்பனை பண்ணிப் பார்த்தான். "சும்மா ஒரு வரவு செலவுத் திட்டம் எழுதிப் போட்டுப் பார்த்தான். அரிசி, கறி, புளி, பால்மா, இனி எப்படியும் மனைவிக்கு இரண்டு மாதத்திற்கு ஒரு உடுப்பாவது வாங்கிக் கொடுப்பதுதான் ஆண்பிள்ளையாய்ப் பிறந்தவனுக்கு அழகு. இப்படியே நீட்டுக்கு எழுதி கணக்கை கூட்டிப் பார்த்தவன் தலையை ஒரு முறை சிலிப்பிக் கொண்டு சிரித்தான். சித்தார்த்தன் புத்தனாக மாறும்போது இப்படித்தான் ஒரு சிரிப்பு சிரித்திருப்பான்.

ஆனால் கலைவாணியைத்தான் இவனுக்கு பேசி முற்றாக்கி வைத்திருக்கிறார்கள் என்று அறிந்தபோது இவன் கொஞ்சம் ஆடித்தான் போனான்.

கலைவாணி அடக்கம் என்றால் அடக்கம் அப்படியொரு அடக்கம். வெள்ளிக்கிழமைகளின் மாலைகளில் 'இட்ட அடி நோக எடுத்த அடி கொப்பளிக்க' தலையைக் குனிந்து கொண்டே 'இனிச்சபுளியடி முருகன்' கோயிலுக்கு வருவாள். ஐயன் 'தேவாரமொழி பாடுக' என்று சொல்லி வாயை மூட முன்பே "காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி" என்று உண்மையாகவே கண்களில் நீர் வழிந்தோட கலைவாணி கெஞ்சிக் கெஞ்சிப் பாடுவாள். கோவிலும் கூடவே அழும். இவனுக்கும் அழுகை வரும்.

காலையில் பள்ளிக்கூடத்துக்குப் போகும்போதும் மாலையில் வரும் போதும் அல்லது வெள்ளிக்கிழமைகளின் மாலைகளில் மட்டுமே கலைவாணியை ஊரவர்கள் காணலாம். ஆனால் இவனுக்கு அப்படியல்ல. இவனின் வீட்டுக்கும் கலைவாணியின் வீட்டுக்கும் இடையில் உக்கிப் போன பனை ஓலை வேலி ஒன்று மட்டும்தான் இருந்தது.

கலைவாணியின் வீட்டில் ஆடு குட்டி போட்டால் இளங்கொடி எடுத்து ஆலமரத்தில் கட்ட அல்லது கிணற்றுக்குள் தண்ணீர் அள்ளும் வாளி விழுந்தால் சுழியோடி எடுக்க கலைவாணியின் அம்மா இவனைத்தான் கூப்பிடுவாள். கலைவாணியின் ஒரு வீடே ஒரு குட்டிக் கோயில் போலத்தான் இருக்கும். வீடு முழுவதும் சுவாமிப் படங்களாகவே இருக்கும். கலைவாணி சில நேரங்களில் தேநீர் கொடுத்திருக்கிறாள். ஆனால் அவள் 'பெரிய பிள்ளை' ஆன நாளிலிருந்து இவனோடு ஒரு வார்த்தையாவது பேசியதாக இவனுக்கு ஞாபகம் இல்லை.

அந்தக் கல்யாணியைக் கல்யாணம் செய்து கொண்டு வந்து இந்த எட்டடிக்குப் பத்தடி அறைக்குள் குடி வைத்தால் அவளின் குனிந்த தலை நிமிராத குணத்துக்கும், தெய்வ பக்திக்கும் கூடவே மகா லட்சுமியும் இந்த அறைக்குள் குடி வருவாள் என்று இவன் உறுதியாக நம்பினான்.


அவ்வளவுதான். அடுத்த மாதமே கலைவாணியும் கலைவாணியின் ஐயாவும் கொழும்புக்கு வந்து ஏற்கனவே கொழும்பில் முகாமிட்டிருந்த இவனின் ஐயா, அம்மாவோடு சேர்ந்து கொண்டனர். கலைவாணி பாங்கொக் வருவதாகவும் இவனும் பாங்கொக் போய் கல்யாணத்தை எழுதுவதாகவும் இரகசிய திட்டம் தீட்டப்பட்டது.

இவன் பாங்கொக் வந்து "சீலோம் வீதி"யில் அறை எடுத்து தங்கினான். ஹோட்டலில் பேர் பதியும் போது "மிஸ்டர் அன்ட் மிஸிஸ்' என்று சொல்லித்தான் பதிந்தான். "மிஸிஸ் நாளைக்கு வருவா" என்று ஹோட்டல்காரன் கேட்காமலேயே இவன் சொல்லி வைத்தான். அறைக்குள் போய்ப் படுத்துக் கொண்டு "மிஸிஸ் நாளைக்கு வருவா" என்று தனக்குள்ளே சொல்லிப் பார்த்தான். சரியான சந்தோஷமாக இருந்தது.

காலையில் எழுந்து கொழும்புக்குத் தொடர்புகொள்ள முயன்றான். இணைப்புக் கிடைக்கவில்லை. தாய்லாந்து தொலைத்தொடர்புத் துறையை ஒரு பாட்டம் திட்டிவிட்டு விமான நிலையத்துக்குப் போனான். "ஏயார் லங்கா" இறங்கிக் கொண்டிருப்பதாக அறிவித்தார்கள். இவனுக்குள் இரத்தம் ஏறி இறங்கிக் கொண்டிருந்தது. ஒரு சிகரட் பற்றவைத்தால் பதற்றம் குறையும் என நினைத்தான். இவனை சிகரட்டும் கையுமாக கண்டால் கலைவாணி என்ன நினைப்பாளோ தெரியவில்லை. எனவே இரண்டு கைகளையும் இறுகக் கட்டிக்கொண்டு 'அற்றேன்ஸ்'னில் நின்று கலைவாணியை வரவேற்கத் தயாரானான். ஆனால் கலைவாணி வரவில்லை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


விழுந்து கிடந்து கட்டும் மணல் கோட்டை
சிங்கப்பூரில் நடத்தப்பட்ட 10,000 அமெ. டொலர் கிடைக்கும் மணற் கோட்டை கட்டும் போட்டியில் ஒரு அமெரிக்கரின் கை வண்ணம் இது.

இவன் துடித்துப் போனான். ஓடிப்போய் கொழும்புக்கு தொடர்பு கொண்டான். இவனின் சின்னத் தங்கைதான் தொலைபேசியை எடுத்தாள். இவனின் குரலைக் கேட்டவுடனே அவள் அழத் தொடங்கினாள்.

"ஐயோ சின்னண்ணை கலைவாணியெல்லோ உங்க வரமாட்டன் எண்டு சொல்லிப் போட்டா. இரவு முழுக்க இஞ்சை ஒரே சண்டை...."

"ஏனடி என்ன நடந்தது?"

"கலைவாணியை உன்னட்ட அனுப்ப முன்னம் சீதனக் காசு ரெண்டு லச்சம் ருபாயையும் வைக்கவேணும் எண்டு எங்கிட ஐயா கலைவாணியின் ஐயாவோட சண்டை பிடிச்சவர்...."

"சீதனமோ? எடி நான் உங்களை சீதனம் வேண்டச் சொன்னனானோ?"

"அது எனக்கு தெரியாது சின்னண்ணை கலைவாணியின்ர அண்ணா கனடாவில இருந்து காசு அனுப்புவாராம். ஆனால் சொன்ன டேற்றுக்க காசு வரயில்ல எண்டு ஐயா கெம்பத் துவங்கிற்றார்...."

"மெயார்து.... எளிய மூதேசியள். எல்லாம் உங்கிட எண்ணத்துக்கு செய்யிறது. நானொரு விசரன் மினக்கெட்டு பாங்கொக்கில் வந்து நிக்கிறன். நீ கலைவாணியை கூப்பிடு. நான் கதைக்கிறன்."

"அவையள் காலம்பிறயே வவுனியாவுக்கு வெளிக்கிட்டுப் போயிற்றினம். பாவம் கலைவாணி என்னோட சொல்லி சரியாக் கவலைப்பட்டவ. அவவுக்கு சீதனப் பிரச்சினை ராத்திரிதான் தெரியுமாம்.... இப்பிடி சீதனம் குடுத்துத்தான் கல்யாணம் கட்டுறது எண்டு முன்னமே தெரிஞ்சிருந்தா தான் கொழும்புக்கே வந்திருக்க மாட்டாவாம். சின்னண்ணை, உன்னை எண்டு இல்ல ஆரை எண்டாலும் அவ சீதனம் குடுத்துச் செய்யமாட்டாவாம். இஞ்ச எல்லாம் மாறிப் போச்சு.... ஆனா ஐயாவுக்கு விளங்குதில்ல. நான் எங்களுக்கு ஏன் பிறத்தியாற்ற காசு எண்டு கேட்டு ஐயாவோட சண்டை பிடிச்சன். ஒரு நாளும் எனக்கு அடிக்காத ஐயா ராத்திரி எனக்கும் அடிச்சுப் போட்டேர்"

இவன் தொலைபேசியை அடித்து வைத்தான்.

மனுநீதிச் சோழன் செய்தது போல இவன் தனது மனதுக்குள் ஓர் தேர் செய்தான். அதன் உச்சியிலே கலைவாணியைக் கொண்டு போய் வைத்தான். ஐயாவை நடுச் சந்தியில் படுக்க வைத்து ஐயாவின் குரல்வளையை இரண்டு நெரி நெரித்தான்.

கலைவாணி வராமல் போனதும் நல்லதுக்குத்தான். கலைவாணி போனால் இன்னொரு நடனவாணியோ அல்லது ஒரு நாட்டிய வாணியோ நமக்குக் கிடைக்காமலா போய் விடுவாள். கலைவாணி ஒரு சீதனப் பழியிலிருந்து என்னைக் காப்பாற்றி விட்டாள் என்று தன்னைத்தானே தேற்றிக் கொண்டான்.

ஆனால் இதோ பார் நிலம் நோகாமல் நடந்த கலைவாணியை, கண்கள் இருப்பது பூமியைப் பார்ப்பதற்கே, கைகள் இருப்பது தேநீர் செய்வதற்கே, உதடுகள் இருப்பது முருகனைப் பாடவே என்று வாழ்ந்தவள் இன்று எங்களின் முகத்தில் அறைந்துவிட்டாளே... சின்னத் தங்கை சொன்னது மண்டையில் அறைந்தது. "இஞ்ச எல்லாம் மாறிப் போச்சு" மெய்தான். அங்கே ஒவ்வொரு குண்டுகளும் இவ்விரண்டு விலங்குகளாய் உடைத்துக் கொண்டிருக்கின்றன. நுகத்திலே கொழுவியிருந்த கலைவாணிகள் ஆயிரம் கைகளும் சூலமும் வேலுமாய் தேர்களில் ஏறிவிட்டார்கள். தேர்களின் சக்கரங்கள் ஐயாக்களின் தலைகளை சுக்குநூறாய் உடைக்கின்றன.

ஆனால் இங்கே ஒரு பெண் தேவதையாக்கப்பட்டு அரை நிர்வாணியாய் விறைத்துப் போய் இருக்கிறாள். ஆண்குறிகளும் மாத்திரைகளும் தின்னும் இவளின் இருட்டு நிமிடங்களில் ஒரு சின்ன 'கிரனைட்' வெடித்துப் பற்றாதா? தேவதையும் ஆயிரம் கைகளும் சூலமும் வேலுமாய் தேர்களில் ஏறாளோ? - நல்ல உவமான உவமேயங்களோட தான் யோசிக்கிறன். ஆனால் செய்யிறது முழுக்க முழுக்க கிலிசுகெட்ட வேலை என்று கையைப் பொத்திப் பிடித்து மறுபடியும் கட்டிலில் குத்தினான். இந்த முறை பலமான குத்து.

தேவதை திடுக்கிட்டவளாய் இவனை நிமிர்ந்து பார்த்தாள். வெள்ளைத் துண்டை மார்பு வரை ஏற்றிக் கட்டிக் கொண்டே இவனுக்கு அருகில் வந்து படுத்தாள். இவன் தேவதையின் தலை முடியை மெதுவாக வருடிவிட்டான். அப்பாடா... தேவதை முதல் முறையாக மெதுவாகச் சிரித்தாள். இவன் தனது 'உடைந்த' ஆங்கிலத்தில் கேட்டான்.

"நீ தாய்லாந்துக்காரி இல்லையா?"

அவள் தனது 'பொறுக்கி' ஆங்கிலத்தில் சொன்னாள். "இல்லை சேர்"

"எவ்வளவு நாளாய் இங்கிருக்கிறாய்?"

இருக்கும் நாட்களை எப்போதும் எண்ணிக் கொண்டே இருப்பவளைப் போல படாரென்று சொன்னாள், "இருபத்தியொரு நாட்கள்"

"இதற்குமுன்புஎங்கிருந்தாய்?"

தேவதை கொஞ்சநேரம் கண்களை மூடிக் கொண்டாள். தேவதையின் முகம் கோணிப் போக மார்புகள் ஏறி இறங்கின. இரண்டு சொட்டுக் கண்ணீர் தலையணையில் விழுந்தது. இவள் பொய் சொல்லிக் கொண்டிருக்கிறாளோ என்று இவன் சொஞ்சம் சந்தேகப்பட்டுக் கொண்டுதானிருந்தான். ஆனால் அவள் சொல்லிக் கொண்டிருப்பது பொய்யாக இருக்க முடியாது என்று இப்போது முடிவு செய்தான். தேவதை எழுந்து கட்டிலில் சம்மணம் கட்டி உட்கார்ந்தாள்.

"இதற்கு முன்பு எனது கிராமத்தில் இருந்தேன். அது ஒரு ஆண்மையில்லாத கிராமம். கிராமத்தின் முக்கால்வாசி நிலமும் டெங் கிழவனிடம் வந்துவிட்டது. உங்களுக்கு தெரியுமா சேர், எனது பதின்நான்கு வயதில் நான் பாடசாலையிலிருந்து தூக்கிச் செல்லப்பட்டு டெங் கிழவனால் கெடுக்கப்பட்டேன். கிராமத்தில் எல்லோரிடமும் சொல்லிப் புலம்பினேன். அதுதான் ஆண்மையில்லாத கிராமம் ஆயிற்றே.

பொலிஸ், கிராம நீதிமன்றத்தினர், சாதுக்கள் எல்லோருமே அவனின் கால்களில் நசுங்கிக் கிடந்தார்கள். இரண்டு பசு மாடுகளை எனது அம்மாவுக்குக் கொடுத்து என்னை டெங் கிழவன் வாங்கிவிட முயன்றான். அம்மா என்ன செய்வாள் பாவம்... என்னை கொண்டு போய் டெங் கிழவனின் தோட்ட வீட்டில் விட்டாள். இரண்டு வருடங்கள் சேர்.... இரண்டு வருடங்கள் நான் அந்த தோட்ட வீட்டுக்குள்ளேயே செத்துக் கொண்டிருந்தேன். கடவுள் கூட என்னுடன் இருக்கவில்லை. ஒரு இரவில் தப்பிவிட்டேன். முதல் நாளே டெங் கிழவனிடமிருந்து கொஞ்சம் பணம் திருடியிருந்தேன்.

தப்பியோடி லாவோசுக்கு வந்துவிட்டேன். தாய்லாந்தின் உயர கோபுரங்களும் கட்டடங்களும் தெரிந்தன. இடையில் நொங்காய் ஆறு மட்டும் ஓடிக் கொண்டிருந்தது. ஓர் இரவு அதையும் தாண்டிவிட்டேன். ஆனால் இந்த எந்த உயர்ந்த கட்டடங்களும் கோபுரங்களும் எனக்கு ஒரு வேலை போட்டுத் தரவில்லை. உங்களுக்குத் தெரியுமா சேர், லும்பினி பூங்காவில் ஒரு கிழமை பிச்சை கூட எடுத்தேன். பிறகுதான் 'சுத்திஸான் வீதி'க்கு வந்தேன்.

இவனுக்கு 'உச்சு' கொட்ட வேண்டும் போலயிருந்தது. ஆனால் இந்த 'உச்சு' தேவதைக்கு என்னத்தைச் செய்துவிடும் என்று யோசித்தான்.

"உனது கிராமம் எது?"

"ட்ராங்பாம் கிராமம். அது தென் வியட்நாமில் உள்ளது"

இவனுக்கு தனது தேர்க் கணக்கு எங்கேயோ சறுக்குவதாகப் பட்டது.

"உனது அம்மா ஒரு கேடுகெட்டவள். இரண்டு பசு மாடுகளுக்காகவா உன்னை விற்றாள்?"

"சேர் அம்மாவை ஏசாதீர்கள். அவள் பாவம். எங்கள் கிராமத்தில் எல்லா அம்மாக்களும் என் அம்மா போலவே ஆக்கப்பட்டிருக்கிறார்கள். எதுவும் எதிர்த்துப் பேச முடியாது. தவிர அவளுக்கு முழங்கைக்கு கீழே இரண்டு கைகளும் கிடையாது."

"நான் மிகவும் வருந்துகிறேன். அது எப்படி நடந்தது?"

"யுத்த காலத்தில் ட்ராங்பாங் கிராம எல்லையில் ஒரு அமெரிக்க இராணுவ வண்டித் தொடர் எங்கள் கெரில்லாக்களால் தாக்கி அழிக்கப்பட்டதாம். முதலில் வந்த வண்டிக்குள் இரண்டு கைகளிலும் வெடிகுண்டுகளோடு அம்மாதான் பாய்ந்தாளாம்."

நன்றி : இனியும் சூல் கொள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காலம் எழுதிய டயறி

**உயிர்ச் சுவடுகளே பல கோடி ஆண்டுகளுக்கு முன்னர் புவியின் சூழல் எப்படி இருந்ததெனத் தெரிவிக்கும் ஒரேயொரு மீதி. அவையே உயிரினங்கள் எவ்வாறு கூர்ப்படைந்தன என நாம் தேடிச்செல்லக் கூடிய பழைய பாதை.**

இப் பூமி பல கோடிக் கணக்கான வகை உயிரினங்களுக்கு வெவ்வேறு சூழல்களின் மடிகொடுத்த தாய்.

புதிய புதிய உயிர்வகைகள் தோற்றம் பெறுகின்றன. பழையவை மறைகின்றன. அடியோடு இப் புவியை விட்டு மறைந்துவிட்டாலும்.... அவற்றின் அடையாளங்களை இப் பூமியின் மடியில் புதைத்து விட்டுத்தான் போயுள்ளன.

ஆம்! உயிர்ச் சுவடுகள் தான் அந்தக் காலம் எழுதிய டயறிகள். உயிர்ச் சுவடுகளாகப் பாறைகளில் பொதிந்து தம்மை என்றும் மறந்துவிட வேண்டாம் என எம்மைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டு விடைபெற்றுச் சென்றுவிட்ட அந்தப் பல லட்சம் ஆண்டுகளுக்கு முற்பட்ட விலங்குகள், தாவரங்களின் உருவங்களை நாம் அண்மையில் காலமான ஒரு நெருங்கிய உறவினரின் ஆல்பத்தைப் பார்ப்பதுபோல் இன்றும் பார்க்க முடிகிறது.

உயிர்ச்சுவடுகள் மிக நீண்ட காலத்திற்கு முன் வாழ்ந்த உயிரினங்கள் பற்றி அழகழகான கதைகளைச் சொல்லுகின்றன.

இந்த உயிர்ச் சுவடுகள் பாறைகளுக்குள் தற்செயலாக உருவாக்கப்படும் பொருட்களே என ஆரம்பத்தில் மக்கள் நினைத்திருந்தார்கள். பழங்காலச் சீனர்கள் இதில் காணப்பட்ட பற்கள், என்புகள் போன்றவை அவர்களின் கற்பனை மிருகமான ட்ராகனுடையவை என நம்பினர்.

18ம் நூற்றாண்டிலேயே இவை முன்னர் வாழ்ந்த உயிரினங்களின் மீதிகள் என்பதை மனிதர் புரிந்து கொண்டனர்.

இந்த உயிர்ச் சுவடுகள் எப்படித் தோன்றுகின்றன? பல வகையில் தோன்றலாம். கடலில் பொருட்கள் அடைந்து இறுகி அடையற் பாறைகள் தோன்றும்போது இவ் உயிரினங்களின் வன்மையான பாகங்கள் அதற்குள் அகப்பட்டு அழியாதிருக்கலாம். அல்லது அடையாளங்களை ஏற்படுத்தி வைக்கலாம்.

எரிமலைகள் போன்றவை வெடித்து ஓடும்போது அதில் சிக்குண்ட உயிரினங்களும் அக் குழம்பு குளிர்ந்து பாறைகளாகும்போது பதிவுகளாகிப் போகலாம். துருவப் பனிக்குள் புதையுண்ட உயிரினங்கள் கூட அப்படியே தடயங்களாக இருக்கலாம். மரங்களில் இருந்து வடியும் பிசின்களில் சிக்குண்ட பூச்சிகள் போன்றவையும் இவ்வாறே நெடுங்காலம் அழியாது இருக்கலாம். 'யுராஸிஸ் பார்க்' என்ற பரபரப்பான திரைப்படத்தில் டைனோஸரை உருவாக்க இவ்வாறு பிசினில் சிக்கிய அக்கால நுளம்பொன்றின் சொண்டில் இருந்த டைனோஸர் குருதிக் கலமொன்றே பாவிக்கப்பட்டதாகக் காட்டப்படுகிறது.

4.6 பில்லியன் (460 கோடி) ஆண்டுகளுக்கு முன் பூமி தோன்றியது.

ஆரம்பத்தில் புவியின் மேற்பரப்பு எந்த உயிரினங்களும் வாழ முடியாத அளவு சூடாக இருந்தது. கோடிக்கணக்கான ஆண்டுகளாகப் பெய்த அடைமழையால் பூமி சூடாறி கடல்கள் தோன்றின. அவையே உயிரினங்களின் தோற்றத்துக்கு வழிவகுத்தன.

இற்றைவரை கண்டுபிடிக்கப்பட்ட அதி பழைமை வாய்ந்த உயிர்சுவடு 3.5 பில்லியன் (3500 கோடி) ஆண்டுகளுக்கு முன்னர் வாழ்ந்த ஒருவகை பக்டீரியா நுண்ணங்கிகளுடையது. நிச்சயமாக இவை நல்லதோர் ஞாபகச் சின்னங்கள் தான்.

ஆனால் பெரும்பாலான மக்களுக்கு அதிகம் அறிமுகமான உயிர்ச்சுவடுகள் வன்மையான ஓடுகளதும் என்புகளதுமாகவே உள்ளன.

இவ்வகை கடினமான ஓடுகள், என்புகளைக் கொண்ட உயிரினங்கள் 540 முதல் 245 மில்லியன் (54 - 24.5 கோடி) ஆண்டுகளுக்கு முன்னர் நிலவிய பலியோசோவிக் (*Palaeozoic*) காலத்தைச் சேர்ந்தவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எல்லாம் அழிவன. ஆனால் எல்லாமே அழிந்துவிடுவதில்லை!

அக்காலத்தில் தரையில் தாவரங்கள் தோன்றியிருக்கவில்லை. அதனால் அங்கு விலங்குகளும் இருக்கவில்லை. ஒரே வனாந்தரக் கோலம்தான்.

ஆனால் கடலினுள் பலவிதப்பட்ட விலங்குகளும் தாவரங்களும் பல்கிப் பெருகின. பின்னர் அவை மெதுவாகத் தரைக்குப் பெயரத் தலைப்பட்டன.

பலசோயிக் காலத்து மத்திய பகுதியில் - சுமார் 400 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் - புவியில் பெரும் மாற்றம் ஏற்பட்டது. தரையில் தாவரங்கள் தோன்றின. அடர் காடுகள் உருவாகின. கடலிலிருந்து விலங்குகள் பல தரைக்கு இடம்பெயர்ந்தன.

மிசோசோயிக் (*Mesozoic*) காலத்தில் (245-65 மில்லியன் வருடங்களுக்கு முன்) டயனோசரஸ் விலங்குகள் தோன்றி புவியை ஆட்சிசெய்தன. அவற்றின் பிரமாண்டமான என்புகளும் கால் பதிவுகளும் உயிர்ச் சுவடுகளாகப் பதிவாகியுள்ளன.

இக் காலத்தில்தான் முதன் முதலில் பூக்கும் தாவரங்கள் தோன்றின. ஆகவே காலவரிசைப்படி நோக்குமிடத்து பூக்கள் மிக இளமையானவைதான்! 100 மில்லியன் வருடங்களே பூக்கும் தாவரங்களின் வயது.


புவியைத் தன் ஆளுகைக்கு உட்படுத்தியிருந்த டயனோசரஸ் 65 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் இப்புவியிலிருந்து, இல்லாமல் அழிந்து போயின.

அதன் பின்னான சினோசோயிக் (*Cenozoic*) காலத்தில் (அதாவது 65மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னர் முதல் இன்றுவரை) புதிய சூழ்நிலைக்குத் தம்மைத் தகவமைத்துக் கொண்ட புதியவகை விலங்குகள் உருவாகின. முலையூட்டிகள் டயனோசரஸின் இடத்தைப் பிடித்துக் கொண்டன.

பின்னர் காலநிலை மிக குளிர்வடைந்து துருவத்து உறைபனிகள் தோன்றின. 4 மில்லியன் வருடங்களுக்கு முன் மனிதனின் மூதாதைகள் தோன்றினர். பின்னர் அவர்களே புவியின் எஜமானர்கள் ஆயினர்.

இன்று உலகை மனிதன் ஆண்டாலும் அவனும் சில நூறு மில்லியன் ஆண்டுகளுக்குப் பின் இப்படியான உயிர்ச் சுவடுகளாக நமக்குப் பின்வரும் உயிரினப் பரம்பரையால் மீட்கப்படலாம். அப்போது ஆட்சியிலிருக்கும் உயிரினம் அவ் உயிர்ச் சுவட்டைப் பார்த்து இப்படிக் கூறலாம். **"ஓ! இப்போது நாம் ஒருபடியாக இந்த மனிதன் என்னும் விலங்கின் கதைக்கான திறவுகோலைக் கண்டுபிடித்து விட்டோம். இந்த மனிதன்தான் உலகில் வாழ்ந்த விலங்குகளில் அதி கொடூரமான விலங்கு. அதுவே இயற்கையையும் அழித்து தன்னையும் அழித்த ஒரே விலங்கு!"**

**- லாவண்யா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை



# புயலான பூ

பாலா சங்குப்பிள்ளை

வெளியே மழை 'சோ'வெனப் பெய்துகொண்டிருந்தது. தெய்வானை காம்பறாவின் கதவை இறுக மூடி அதன் மேல் கயிற்றுச் சாக்கைப் போர்த்தினாள். மேலே கூரையிலிருந்து ஒழுகிய தண்ணீர் கீழே தரையை ஈரமாக்கிக் கொண்டிருந்தது. சற்றுத் தூரத்தில் வள்ளி அமைதியாகத் தூங்கிக் கொண்டிருந்தாள்.

வள்ளி தெய்வானையின் ஒரே மகள். டவுண் பாடசாலையில் க.பொ.த. உயர்தரம் வரை கல்வி பயின்றவள். ஏற்கனவே ஆசிரியத் தொழிலுக்கு விண்ணப்பித்திருந்தாள். தெய்வானையின் பெரும் முயற்சியினால்தான் அவள் இவ்வளவு தூரம் படித்திருந்தாள்.

மழை இன்னும் விடவில்லை. நேரம் பதினொன்றைத் தாண்டியது. மாரிக்கு இன்று சம்பள நாள். நேரம் சென்றுதான் வருவான்.

நேரம் பன்னிரெண்டாகியது.

காம்பறா கதவை யாரோ தட்டினார்கள். ஓடிச் சென்று கதவைத் திறந்தாள். வெளியே - மழையில் நனைந்தபடி மாரி நின்றிருந்தான்.

"ஏண்டி மனுசன் இங்கே நனைஞ்சிக்கிட்டிருக்கான். நீ இவ்வளவு நேரமும் உள்ளே என்னடி செஞ்சிகிட்டிருந்தே..."

அவள் எதுவும் பேசவில்லை. அவனை கைத்தாங்கலாக உள்ளே அழைத்துச் சென்றாள். உள்ளே வந்ததும், சட்டென அவளின் தலை மயிரைப் பிடித்தான்.

"ஏண்டி, நான் சம்பாதிப்பேன். என் காசுல குடிப்பேன். நீ யாருடி இதெல்லாம் போய் கண்டவங்க கிட்ட சொல்லுறதுக்கு..."

"நா... நான் ஒன்னும் தப்பா சொல்லலை. ஏய்யா... தோளுக்கு மேலே வளர்ந்த பொண்ணு இருக்கிறாள்னுறதையே மறந்துட்டு நீ இப்பிடிப் பொறுப்பில்லாம காசை குடிச்சி அழிக்கிறே - குடிகாரனோட பொண்ணுன்னு நாளைக்கி இவளோட வாழ்க்கையே நாசமாப் போச்சின்னா என்னய்யா செய்யிறது. நீ எதையும் பத்தி கவலைப்படாம எந்த நேரமும் தண்ணியிலேயே மிதக்கிறே...."

அவள் சொல்லிமுடிக்கவில்லை. அவன் "பளார்" என கன்னத்தில் அறைந்தான்.

"இங்க பாரு, எனக்குப் புத்தி சொல்லும் வேலையெல்லாம் வச்சிக்காதே. எதை எப்போ செய்யணும்னு எனக்குத் தெரியும். உன்னைக் கல்யாணம் கட்டிக்கிட்டது பொங்கிப் போடவும் எனக்குத் தேவையானதைச் செய்யிறதுக்கும் தான்.

அவளுக்குக் கோபம் பொங்கியது. கட்டுப்படுத்திக் கொண்டாள்.

"ஆமா உன்னைப் பத்தித்தான் இந்தத் தோட்டத்துல எல்லாருக்குமேதெரியுமே....என்னைக்கிஉன்னை கட்டிக்கிட்டேனோ அன்னையில இருந்து நரக வாழ்க்கைதான் வாழ்ந்துக்கிட்டிருக்கேன்..."

"ஏய்... எனக்குப் பசிக்குது சாப்பாடு போடு. விட்டா ரொம்பத்தான் பேசுவே..."

கண்களைத் துடைத்தவாறு தட்டை எடுத்து சோறு போட்டுக் கொடுத்தாள். ஒரு பிடி சோறை வாயில்வைத்தான்.அவ்வளவுதான் 'தூ'வென அவள் முகத்தில் துப்பினான்.

"ஏண்டி என்னது இது சாப்பாடு. வெறும் ரசமும் சோறும். இன்னைக்கித்தான் சம்பளம் போட்டிருப்பானே. கருவாடு, மீன் வாங்கல லியா?"

சோற்றுத் தட்டை தூக்கித் தரையில் அடித்துவிட்டு அப்படியே கீழே படுத்தான். சற்று நேரத்தில் குறட்டை விட்டான். தெய்வானை விதியை நொந்தவாறு இடத்தைச் சுத்தப்படுத்தினாள்.கல்லுப் பிள்ளையாரைக் கடித்தால் பல்தான் போகும்.

ஒரு வாரம் ஓடியது. வள்ளிக்கு ஆசிரிய நியமனம் சம்பந்தமாக நுவரெலியாவுக்கு நேர்முகப் பரீட்சையில் கலந்து கொள்ளுமாறு கடிதம் வந்திருந்தது.

அடுத்தநாள் நுவரெலியாவுக்குப் போக வேண்டும். தனியாக எப்படி மகளை அனுப்புவது? புருஷனோ குடிகாரன். ஆனால் வேறு வழியில்லை. அன்றிரவு கெஞ்சிக் கூத்தாடி ஒருவாறு சம்மதிக்க வைத்தாள். சொந்த மகளை வெளியே கூட்டிச் செல்ல கூலியாக பணம் பெற்றுக் கொண்ட தகப்பன் மாரியாகத்தான் இருப்பான்.

வள்ளி தகப்பனுடன் புறப்பட்டாள்.

இரவு வெகு நேரமாகியும் இருவரும் வரவில்லை. தெய்வானைக்குப் பயமாக இருந்தது. விபரீதமாக ஏதும் நடந்திருக்குமோ.. ஐயோ கடவுளே அப்படியேதும் நடந்திருக்கக் கூடாது. ஒருவேளை வருவதற்கு பஸ் கிடைக்காமல் அங்கேயே தங்கிவிட்டு காலையில்தான் வருவார்களா?

அவள் தூங்கவில்லை.

மறுநாள் பொழுது புலர்ந்தது. எட்டு மணியிருக்கும். தெய்வானை வேலைக்குப் போகவில்லை. காம்பறா வாசலிலேயே நின்றிருந்தாள். அப்போது - சற்று தூரத்தில் வள்ளி வருவது தெரிந்தது. அவளுடன் யாரோ பெரியவரும் வந்து கொண்டிருந்தார். தெய்வானைக்கு எதுவுமே விளங்கவில்லை.

அருகில் வந்ததும், வள்ளி ஓடி வந்து தாயைக் கட்டிக்கொண்டு குலுங்க குலுங்க அழுதாள்.

"என்னம்மா.. என்ன நடந்திச்சி... ஏன் அழறே...?"

அந்தப் பெரியவர் அருகில் வந்தார். "ஏம்மா இந்தப் பொண்ணோட வந்ததுதான் உங்க புருஷனா..." தெய்வானை எதுவும் புரியாமல் அவரை ஏறிட்டாள்.

"ஆமாங்க என்ன விஷயம்....?"

"நான் மட்டும் சரியான நேரத்தில அங்க இல்லாட்டி உன் மகளோட நிலைமை ரொம்ப மோசமாப் போயிருக்கும்.

நானும் என் மகளோட நுவரெலியாவுக்குப் போனேன். அதே பஸ்லதான் இவங்களும் வந்தாங்க. போகும் போதே சரியான குடி. சரின்னு வேலை முடிஞ்சி மறுபடியும் பஸ்ல வந்துக்கிட்டிருந்தோம். அந்த பஸ்ல நாலைஞ்சு ரவுடிப் பசங்களும் வந்தாங்க. வள்ளி கிட்டே வம்புப் பண்ணிக்கிட்டே வந்தாங்க. உன் புருஷன் இதெல்லாம் கண்டுக்க இல்ல. இடையில டீ குடிக்கிறதுக்காக பஸ் நின்ன இடத்தில அந்த ரவுடிங்க உன் புருஷனுக்கு நல்லா சாராயத்த வாங்கிக் குடுத்திட்டாங்க.

பஸ் புறப்பட்டிச்சி. இப்ப வள்ளி பக்கத்துல அடுத்தடுத்து அவனுங்க உட்கார்ந்துக்கிட்டாங்க. உன் புருஷன் மயக்கத்துல வேற எங்கேயோ போய் உட்கார்ந்துட்டான். இங்கே பஸ் வந்து சேர்ற வரைக்கும் உன் மகள் அனுபவிச்ச நரக வேதனை இருக்கே.... சொல்லி மாளாது.

இங்க வந்ததும் எல்லோரும் இறங்கினோம். வந்தவன்கள்ல இரண்டு பேர் உன் புருஷனை மறுபடியும் எங்கேயோ கூட்டிப் போக மத்த ரெண்டு பேரும் வள்ளியை சுத்தி வளைச்சானுங்க. நானும் பெண்ணைப் பெத்தவன். இதுக்கு மேலே என்னால பொறுக்க முடியலை. தூரத்தே போய்க் கொண்டிருந்த பொலிஸ்காரர் ஒருத்தர் கிட்ட விஷயத்தைச் சொல்லி கூட்டிக்கிட்டு வந்தேன். உடனே அவர்கள் ஓடிட்டானுங்க....

ஒன்னு மட்டும் சொல்றேன் கேளும்மா... தாலி கட்டினவன் சிங்கமா இல்லாட்டியும் பரவாயில்ல... ஆனா இவ்வளவு அசிங்கமா நடக்கக் கூடாது. இப்பிடி ஒரு புருசன் யாருக்கும் வேணாம். ஊன்றக் கொடுத்த தடி மண்டையப் பிளந்த மாதிரி நீ பூனையை கிளிக்கு காவலா அனுப்பினே... நல்ல வேளை நான் நல்ல சமயத்துல அங்கே இருந்ததால எதுவும் விபரீதம் நடக்கல்ல. நான் வாரேன்...."

அவர் போய்விட்டார். தெய்வானையின் மனதில் புயல் வீசியது. முதல் முறையாக அவள் மனதில ஒரு மாற்றம் உண்டாகியது. அடக்க முடியாத ஆத்திரம்...

அன்று இரவு வெகு நேரம் அவள் தூங்கவில்லை. இரவு மாரி வீட்டுக்கு வரவில்லை. பொழுது புலர்ந்தது. தெய்வானை தன் தூரத்து சொந்தக்காரர் வீட்டிற்கு மகளை அழைத்துச் சென்றாள். அவர் வள்ளியை அங்கேயே தங்கி வேலைக்குப் போகச் சொன்னார். வள்ளி முதலில் மறுத்தாலும் தாயின் பிடிவாதத்தினால் சம்மதித்தாள்.

இரண்டு நாட்களுக்குப் பிறகு இரவு மாரி வந்தான். நிறைய குடித்திருந்தான். வந்தவுடனேயே அவளையும் மகளையும் தாறுமாறாக ஏசினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏண்டி உன்னை மாதிரியே ஓடு காலியா ஒரு மகளையும் பெத்து வச்சிருக்கியே. வந்து பாத்தா ஆளையே காணம். இப்பவே இவளுக்கெல்லாம் ஆம்பிளை சுகம் கேட்குதோ... என்னடி நான் பாட்டுக்கு பேசிக்கிட்டிருக்கேன். நீ முறைச்சிக்கிட்டு நிக்கிறே..."

"பளார்"

தெய்வானை அப்படியே சோற்றுப் பானைக்கருகில் போய் விழுந்தாள். நெற்றியில் காயம் பட்டு இரத்தம் வடிந்தது. அப்போது அவள் கையில் அது கிடைத்தது. ஆவேசத்துடன் எழுந்தாள். அந்தத் தீட்டப்பட்ட கவ்வாத்துக் கத்தியுடன் மாரியை நெருங்கினாள். கையில் கத்தி மற்றும் கண்களில் கனல் பறக்க தன்னை நோக்கி வரும் மனைவியை முதல் முறையாக அச்சத்துடன் நோக்கினான் மாரி.

"ஏய்... என்னடி... எதுக்கடி கத்தியோட வர்ற... அதை கீழே போடு... நான் உன் புருஷன்..."

"தூ... நீயா... நீயா என் புருஷன்... என்னக்கி சாராயத்துக்காக பெத்த பொண்ணையே அம்போன்னு விட்டுட்டு ஓடினியோ அன்னைக்கே என் புருஷன் இறந்துட்டான். இதுவரைக்கும் என்னை நீ எப்புடியெல்லாமோ இம்சைப்படுத்தியிருக்கே... அப்போவெல்லாம் நான் கல்லாட்டம் இருந்திருக்கேன்.


ஆனா சொந்த மகளோட மானம் மரியாதையை விட மதுதான் உனக்கு முக்கியம்னு எப்போ நினைச்சியோ அப்போவே உனக்கு நான் தலை முழுகிட்டேன். நான் உனக்குத் தரப்போற தண்டனை மற்றவங்களுக்குப் பாடமா இருக்கணும். அன்னைக்கி வெள்ளையம்மாவை காதலிச்ச குற்றத்துக்காக மதுரை வீரனை மாறு கை மாறு கால் வாங்கினாங்க. இன்னைக்கு உன்னை கல்யாணம் செஞ்ச பாவத்துக்காக உனக்கு அதே தண்டனையைக் குடுக்கப் போறேன்...."

தெய்வானை சட்டென நெருங்கி மாரியின் வலது கையை வெட்டினாள். அவன் கை துண்டாகியது. அலறினான். இடது காலையும் வெட்டினாள். அவன் உயிரே போய் விட்ட அளவுக்கு அலறியவாறு கீழே சாய்ந்தான். காம்பறா முழுவதும் இரத்தமயமாகியது. மாரியின் பயங்கர அலறலைக் கேட்டு பக்கத்துக் காம்பறா மற்றும் லயன்களிலிருந்து தொழிலாளர்கள் என்னவோ ஏதோவென்று ஓடி வந்தார்கள். வந்தவர்கள் அதிர்ச்சியில் எதுவும் பேசமுடியாமல் அப்படியே நின்றார்கள்.

அன்று மதுரையை எரித்த கண்ணகியைப் போல கையில் கவ்வாத்துக் கத்தியுடன் கண்களில் நெருப்பு பொறி பறக்க இப்போது தெய்வானை நின்றிருந்தாள். ●



## வர்ணத்தில் திளைத்தாலும் வறுமையே!




இந்தியா எங்கும் பரந்து வாழும் பன்ஞ்சாரா ஆதிவாசிச் சமூகத்தைச் சேர்ந்த பெண்கள் அந்த வருட ஜனவரி மாதத்தில் ஒரு பெரும் ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தினார்கள்.

தமது சமூகத்திற்கும் பல்வேறு வகையான வசதி வாய்ப்புக்களை ஏற்படுத்தித் தரவேண்டும் என இந்திய அரசுக்கு எதிராகப் போர்க் கொடி தூக்கியிருந்தார்கள் இவர்கள்.

தாம் கூட்டமாக வாழும் பகுதிகளில் அரசாங்கப் பாடசாலைகள் கட்டப்பட வேண்டும், குடிநீர் வசதிகள் ஏற்படுத்தித் தரப்பட வேண்டும், தாழ்த்தப்பட்ட சமூகங்களுக்கு வழங்கப்படும் சகல சலுகைகளும் தமக்கும் வழங்கப்பட வேண்டும் என்பதே இவர்களின் கோரிக்கை.

இந்தியாவின் வர்ணத்தை தம் உடைகளில் வெளிப்படுத்தும் இவர்களைச் சூழ்ந்துள்ளதோ வறுமைதான்!



திருமணமான ஒருத்திக்கு அடுத்த வீட்டுக்காரனுடன் நட்பு. ஒருநாள் கணவன் திடீரென வீட்டுக்குள் வந்து விட்டான். காதலன் ஜன்னல் வழியாக எட்டிக் குதித்து ஓடிவிட்டான். ஆனால் அவனது செருப்பு ஒன்று மாட்டிக் கொண்டது. மனைவியைத் திட்டிக் கொண்டு செருப்பைத் தலையணைக்குள் வைத்து விட்டு கணவன் கறுவினான். "இருக்கட்டும், பொழுது விடிந்ததும் இந்தச் செருப்புக்குச் சொந்தக்காரனைக் கண்டுபிடித்து உனக்கும் கணக்குத் தீர்த்து விடுகிறேன்."

அவன் நன்றாகத் தூங்கும்வரை விழித்திருந்த மனைவி மெதுவாக அந்தச் செருப்பை எடுத்து ஒளித்து வைத்து விட்டு அதற்குப் பதிலாக அவனது செருப்பு ஒன்றைத் தலையணைக்கு அடியில் வைத்தாள்.

அடுத்தநாள் காலையில் எழுந்து, மனைவியைச் சபித்தவாறே தலையணையைத் தூக்கிப் பார்த்த கணவன் அங்கிருந்தது தனது செருப்புத்தான் என்பதைக் கண்டான். தவறாக நினைத்து விட்டதுக்கு வருந்தி, மனைவியிடம் கூறினான், "சேச்சே, அநியாயமாக உன்மீது சந்தேகப்பட்டேன். நேற்று யன்னல் வழியாக வெளியே குதித்தது நானாகத்தான் இருக்க வேண்டும்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீங்கள் தூவிய முத்துக்கள்

## ஆத்தீகன்!

தொற்றுநோய்
யுத்தம்
தொலைந்தாற் போலில்லை
சோதனைச் சாவடியில்
இறக்கி
நடந்து....
கோவிலைக் கண்டும்
இப்படி
கும்பிடு போட்டதில்லை
சாமியை பழித்ததுக்கு
ஆமியை வணங்கவைத்த
ஆண்டவன் விளையாட்டுக்காரன்!

**பழனி அன்னலிங்கம்**
**உன்னிச்சை.**

## கடிதங்கள்

உள்ளூர்த் தபாலும் வெளியூர்த் தபாலுமென
விதவிதமாய்க் கடிதங்கள்
எப்போதும் வருகின்றன...
வெயில் நாட்களில் சூடாகவும்
மழை நாட்களில் ஓரங்கள் கிழிந்தும்
பண்டிகை நாட்களில்
பலகார வாசத்துடனும்
அழகழகான கையெழுத்தில்
வண்ணக் காகிதங்களில் வழவழத்த
உறையிலிட்டு எப்போதும் வருகின்றன
பற்பல கடிதங்கள்...
ஆனால் இவற்றிலொன்று கூட
ஓரத்தில் எண்ணெய்க் கறையும்
நடுங்கும் எழுத்துக்களும்
சற்றே வெளித்தெரியும் சோற்றுப் பசையும்
சிறிய பெரிய எழுத்தெல்லாம்
முகவரியில் குலவி விளையாடும்
அவனுடைய அவசரக் கடிதத்தை
இன்னும் காணவில்லை....
எப்போதும் போல்
இப்போதும் வருகின்றன
விதவிதமாய்க் கடிதங்கள்....

**பாரதி, யாழ்ப்பாணம்.**

## பலம்

உள்ளம் ஒரு முறை
உரத்துச் சொன்னது
நீயே எந்தன்
நிலவென்று கண்டது
கனவில் உனது
காட்சி வந்தது
நினைவில் உந்தன்
நிழற்படமிருந்தது
தடைகள் எதற்கும்
தயங்க மாட்டேன்.
உன்னை அடையாமல்
ஓய மாட்டேன்.
காற்றைத் தடுக்க - உன்
வீட்டில் வேலியா
நெருப்பை அவர்கள்
பஞ்சு கொண்டணைப்பதா?
கடல் ஓரத்தில்
மணல் வீடு மதிலா?
சவரக்கத்தியால்
சிகரம் பிளப்பதா?
பாவமவர்கள்...
காதலின் பலம்
தெரியாதவர்கள்.

**விருதோடைக் கவிமதி**

## முத்துக் குளியல்

முத்துக் குளியல்
ஒரு
வீர விளையாட்டு
மச்சானின் கையில் இருப்பது
அவன்
மூச்சுக் கயிறு இல்லை,
அது
அக்காளின் தாலிக் கயிறு.

**வடலியூர் ராஜா**

## வெளியே வா!

எடுத்துவிடு நாடிக்குக்
கொடுத்த கைகளை!
துடைத்துவிடு கண்கள்
துப்பிய கண்ணீரை..!
நெற்றியில் சுருக்கங்கள்
அவற்றையும் திருத்திக்கொள்!
நங்கூரத்தைக் கழற்று
உள்மனதைச் சுழற்று
அதுவாய்ப் பறக்கட்டும்...!

வானத்தை அப்படியே
பிரதிபலிக்கும் கடல்....
ஆதவனின்
அடுத்தடுத்த புனர்ஜென்மம்....
பல்வேறு
பரிமாணங்களோடு பால்நிலா....
காதல் கற்பிக்கும் பூமழை....
காற்று மேடையில்
மரங்களின் அரங்கேற்றம்
பறவைகளின் அணிவகுப்பு...

... இவை இன்னமும்
உண்டு உனக்காக...!

புவியீர்ப்பிற்கு சவாலாக
ஒரு ரொக்கெட்....
மனித மூளைக்கு சவாலாக
ஒரு கணனி....
இறப்பைத் தவிர எல்லாவற்றையும்
கையிலெடுத்த விஞ்ஞானம்...

.... இன்னமும் உண்டு
உன்னவர் உழைப்பில்!

இனியாவதுஎடுத்துவிடு
நாடிக்குக் கொடுத்த கைகளை
தட்டிவிடு திறப்பதற்கு
திறக்காத கதவுகள்
உடைப்பதற்கே!

**கே. ராகுலன்,**
**பிரான்சிஸ் வீதி, வெள்ளவத்தை.**

## வதைக்கும் தேவதையே!

வருடும்
மெல்லிய இறகைக் கொண்டும்
மௌனமாயும்
கடும் வலிகளைத் தரலாமென்று
நிரூபித்தாய்

புன்னகைத்துக் கொன்றும்
பார்வையால் கவிழ்த்தும்
நீ நடந்ததாக உணர்ந்த
நாளிலும் கூட
உனக்காக காதலோடு ஏங்கிற்று இதயம்

உன் பாதைகளில்
நீ நிதானமாகச் சென்ற வேளைகளில்
நான் இடறி வீழ்ந்தேன்

மெலிதான தூறலைப் பார்த்துக் கொண்டே
அழுத கண்களும்,
இதயத்தில் நீ உழுத நினைவுகளுமாய்
இன்னும்....
உன்னால் உணர முடியாதவைகளை
என்னால் சொல்லவும் முடியவில்லை.

பெரும் துயரங்களைத் தர
தேவதைகளாலும் முடியும்
உன்னைப் போல.

**[illegible] ஸ்மினி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மா பெரும் விஞ்ஞான மேதை அல்பேர்ட் ஐன்ஸ்டைனை இந்த நூற்றாண்டின் தலைசிறந்த மனிதர் - *Person of the Century* எனக் கணித்து கௌரவித்துள்ளது.

இது மாமேதை ஐன்ஸ்டைனின் அபார விஞ்ஞான அறிவுக்கு மட்டும் கொடுக்கப்பட்ட கௌரமல்ல. அவரது மனித நேயத்துக்கும் சமாதான நாட்டத்துக்கும் பெருந்தன்மைக்கும் கொடுக்கப்பட்ட கௌரவமும் கூட.

இந்த நூற்றாண்டில் பல்வேறு சிறந்த மனிதர்கள் வாழ்ந்தார்கள். மகாத்மா காந்தி, மாட்டின் லூதர் கிங், அன்னை தெரேஸா என மதிப்புக்குரிய பல மா மனிதர்கள் இருக்கத்தான் செய்தார்கள்.

ஆனால் அவர்களையெல்லாம் விட்டுவிட்டு ஐன்ஸ்டைனைத் தேர்ந்தெடுத்ததில் என்ன முக்கியத்துவம் உள்ளது என்று அறிய பலரும் விரும்புவர்.

ஐன்ஸ்டைன் ஒரு மகா புருஷர் என்று எம் நெஞ்சைத் தொடுகின்ற விடயம் அவர் கண்டுபிடித்த அளப்பெரும் விஞ்ஞான விதிகளல்ல. மாறாக அவர் கண்டுபிடிக்க மறுத்த பாரியதோர் கண்டுபிடிப்புத்தான் அவரை மேலும் மாமேதை எனச் சொல்ல வைக்கிறது.

ஆம், அணுப் பிளவின் பாரிய சக்தி வெளிப்பாட்டைக் கண்டுபிடித்த அவர் அமெரிக்க அரசு கேட்டுக் கொண்ட அணுகுண்டைக் கண்டுபிடிக்க மறுத்துவிட்டார்.

தன்னால் உலக அழிவுக்கு வழிகோல முடியாது என அவர் பிடிவாதமாய் மறுத்து அந்தப் பெரும் கண்டுபிடிப்புக்கான பெயரைத் துச்சமாக ஒதுக்கினார்.

அதனால்தான் அவர் கண்டுபிடிக்க வேண்டியிருந்த அணுகுண்டை 'ருதபோட்' கண்டுபிடிக்க வேண்டி ஏற்பட்டது.

இத்தகைய மனித நேயம்கொண்ட அந்த மாமேதை, விஞ்ஞான அறிவை ஆக்கத்துக்குப் பயன்படுத்தவே விரும்பினார்.

அணுசக்தியைக்கூட ஆக்க சக்தியாகப் பயன்படுத்த பல ஆராய்ச்சிகள் செய்தார்.

ஹிரோஷிமாவில் போடப்பட்ட அணுகுண்டின் விளைவைக் கண்டு அவர் வேதனையால் துவண்டார். அந்த வேதனையுடனேயே அவர் 1955 ஏப்ரல் 18ம் திகதி உயிர் துறந்தார்.

ஜேர்மனியின் உல்ம் நகரில் பிறந்த ஐன்ஸ்டைனின் அறிவு அசாதாரணமானது. அவர் சூரிச் பல்கலைக் கழகத்தில் தன் முதுமாணிப் பட்டத்துக்காக 1905 ம் ஆண்டு சமர்ப்பித்த ஐந்து ஆய்வுக் கட்டுரைகள் அவரை ஒரே இரவில் உலகப் புகழ்பெற்ற விஞ்ஞான மேதையாக வெளிப்படுத்தின.

*Photo Electric Effect* (ஒளிமின் விளைவு பற்றிய கண்டுபிடிப்பைத் தந்த அவரது முதலாவது கட்டுரை, 1921ல் அவருக்கு நோபல் பரிசை ஈட்டிக் கொடுத்தது.


அவரது இரண்டாவது கட்டுரை *Brownian Motion* (பிறவுனியன் இயக்கம்) திரவங்களில் துணிக்கைகளின் இயக்க விதியைத் தந்தது.

மூன்றாவது ஆய்வுக் கட்டுரைதான் இவரது புகழ்பெற்ற சார்புத் தத்துவம் (*Theory of Relativity*). இது நேரம், நீளம், திணிவு ஆகிய பௌதீக அளவுகள் யாவும் வேகத்துடன் மாறுபடும் என்ற அதிசயிக்கத்தக்க உண்மையை நிறுவியது.

அன்று இருந்த விஞ்ஞானிகளிலும் ஒரு சிலராலேயே இக்கொள்கையைப் புரிந்துகொள்ள முடியுமாய் இருந்தது.

அவரது நான்காவது ஆய்வுக்கட்டுரை பௌதீக விஞ்ஞானத்தில் ஒரு புரட்சியையே ஏற்படுத்திய புதுமைச் சூத்திரத்ததைத் தந்தது.

**அதுதான் $E = Mc^2$**




(*E* - சக்தி, *M* - திணிவு, *c* - ஒளியின் வேகம்). சிறியதோர் திணிவிலிருந்து பிரமாண்டமான சக்தியைப் பிறப்பிக்கலாம் என இது காட்டியது.

அவரது கணிப்பின்படி ஒரு இறாத்தல் திணிவை சக்தியாக்கினால் 7 மில்லியன் தொன் டயனமைட் வெடிபொருளை வெடிக்கவைத்த சக்தி கிடைக்குமாம். இதனை அடிப்படையாகக் கொண்ட விஞ்ஞான முயற்சியே அணுகுண்டு.

(இவ் விதி சக்தியிலிருந்து சடப்பொருளையும் ஆக்கலாம் என்ற கருத்தை கொள்கையளவில் தருகிறது. அப்படி இதுவரை எதுவும் கைகூடவில்லை எதிர்காலத்தில்...)

ஐன்ஸ்டைனின் ஐந்தாவது ஆய்வுக்கட்டுரை பௌதீகத்தில் இன்னோர் திருப்பத்தைத் தந்தது. ஒளி பற்றி நிலவி வந்த அலைக் கொள்கைக்கு மாறாக ஒளியானது **போட்டன்கள்** என்று அழைக்கப்படும் துணிக்கைகளாகப் பயணம் செய்கிறது என நிறுவினார்.

இவைதவிர, அவர் புவியீர்ப்பு விசை எவ்வாறு தொழிற்படுகிறது என விளக்கினார். அவர் அவ்வப்போது தனது எண்ணக் குறிப்புகளைக் குறித்துவைத்த அவரது கையேட்டை ஆராய்ந்த ஆய்வாளர்கள் அதிலிருந்து பிரபஞ்சம் பற்றிய பல கேள்விகளுக்கான விடைகளைக் கண்டுகொண்டார்கள்.

ஐன்ஸ்டைன் பொதுவாழ்வோடு தொடர்பற்ற வெறும் விஞ்ஞானியாக இருக்கவில்லை. சமாதானத்துக்கான முன்னணிப் பிரசாரகராகவும் இயங்கினார்.

1933ல் ஜேர்மனியில் நிலவிய ஹிட்லர் ஆட்சியின் மிருகத்தனமான சர்வாதிகாரம் யூதர்களை நசுக்கியமைக்கு எதிராகக் குரல் கொடுத்தார். அதனால் ஹிட்லரின் கோபத்துக்கு உள்ளானார். இந்நிலையில் அமெரிக்காவிற்கு குடிபெயர்ந்து அங்கேயே தனது பிற்கால ஆராய்ச்சிகளை மேற்கொண்டார்.

ஐன்ஸ்டைனைக் கௌரவிக்கு முகமாக ஒரு மூலகத்திற்கு ஐன்ஸ்டைனியம் என்று பெயரிடப்பட்டது.

ஐன்ஸ்டைனின் அபார மூளை பிரித்தெடுக்கப்பட்டு பிரின்ஸ்டன் மருத்துவமனையில் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அந்த மூளையின் அதிசய வல்லமை பற்றி விஞ்ஞானிகள் ஆராய்ச்சிகள் நடத்தி வருகின்றனர்.


20ம் நூற்றாண்டின் அறிவுத் தளத்தின் உயர் திறனுக்கு அடித்தளமிட்ட இம் மாமேதை நவீன விஞ்ஞானத்தின் தந்தை எனப் போற்றப்படுகிறார். அவரிடம் இருந்த மனிதத்துவத்துக்கும் சேர்த்து அவரை இந் நூற்றாண்டின் தலைசிறந்த மனிதனாகக் கணித்த டைம்ஸ் சஞ்சிகையின் கணிப்பீட்டை எவரும் குறை காணுவதற்கில்லை. ●

**20ம் நூற்றாண்டின் அறிவுத்தளத்தின் உயர்திறனுக்கு அடித்தளமிட்ட இம் மாமேதை நவீன விஞ்ஞானத்தின் தந்தை எனப் போற்றப்படுகிறார். அவரிடம் இருந்த மனிதத்துவத்துக்கும் சேர்த்து அவரை இந் நூற்றாண்டின் தலைசிறந்த மனிதனாகக் கணித்த டைம்ஸ் சஞ்சிகையின் கணிப்பீட்டை எவரும் குறை காணுவதற்கில்லை.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடைபெறும் நூற்றாண்டின் வில்லன்

# AIDS எய்ட்ஸ்



எய்ட்ஸால் பாதிக்கப்பட்ட ரஷ்யக் குழந்தை

உலக எய்ட்ஸ் தினத்தன்று இந் நோயால் மரித்தவர்களை நினைவு கூருவதற்காக பாரிய சிவப்பு றிபன் ஒன்றை இப்படி ஓர் உருவமாக வைத்து விளக்கேற்றுகிறார்கள்.

**எய்ட்ஸ்**
**இந்த நூற்றாண்டிலே உருவாகிய மருத்துவ வில்லன்!**
**மருத்துவ விஞ்ஞானிகளை வியக்க வைத்த விந்தையான நோய்!**
**மில்லேனியத்தில் கால் பதிக்கும் நமக்கு மிகப் பெரிய சவால் !**

1940ஆம் ஆண்டு காலப்பகுதியில் கொங்கோவில் சிம்பன்சி குரங்கொன்றின் மூலம் மனிதருள் பரவி மிக மிக வேகமாக உலகின் மூலை முடுக்கெல்லாம் புகுந்து விட்டது இந்த எய்ட்ஸ்.

இப்படித்தான் எயிட்ஸின் வருகை பற்றி நம்பப்படுகின்றது.

பெரும் விஷக்கிருமிகளை எதிரி நாடுகளில் பரப்பி அவற்றைப் பல வீனமாக்குவது ஒரு யுத்தமுறை- அவ்வாறான ஒரு யுத்தத்துக்காக தயாரித்த கிருமி அதற்கான மாற்று மருந்தை உருவாக்குவதற்கு முன்னதாகவே ஏதோ ஒரு வழியில் தவறுதலாக வெளியே பரவிவிட்டது என்றும் கூறுகிறார்கள். உண்மை எதுவாக இருந்தாலும் 21ம் நூற்றாண்டில் மனித குலத்தின் அழிவுப்பாதையின் ஆரம்பமாகவும் இந்த எய்ட்ஸ் அமைந்து விட்டது என்பதை மட்டும் மனித குலம் உணரத் தலைப்பட்டுள்ளது.

மனித உடலின் நிர்ப்பீடனத் தொகுதியைத் தாக்கி உயிருக்கு ஆபத்தை ஏற்படுத்துகின்ற ஒரு பயங்கரமான நோயே எய்ட்ஸ். *Acquired Immune Deficiency Syndrome* என்னும் நான்கு ஆங்கிலச் சொற்களின் முதலெழுத்துக்களைக் கொண்டே இதை *AIDS* என்று கூறுகிறார்கள்.

அதாவது இதைத் 'தேடிப்பெற்ற நிர்ப்பீடனக் குறைபாட்டு நோய்' எனலாம். ஒருவரிடமிருந்து மற்றொருவர் பெற்றுக்கொண்ட இந் நோய்க் கிருமி உடலின் நோயெதிர்ப்புச் சக்தியை அற்றுப் போகச் செய்வதால் விளையும் பல நோய்களின் கூட்டுத் தொகுப்பே இந் நோயின் மரண ஆபத்தின் காரணமாகும்.

எய்ட்ஸ் ஒரு கேள்விக்குறியாய் இருந்த காலகட்டத்தில் அக் கேள்விக்கு விடை காண ஆராய்ச்சியில் இறங்கினர் விஞ்ஞானிகள்.

அதன் விளைவு 1984 ஆம் ஆண்டு இந் நோய்க்கு ஒரு வைரஸ் நுண்கிருமியே காரணம் என கண்டுபிடித்தனர்.

அவ்வைரஸ் HIV எனப் பெயரிடப்பட்டது. *Human Immuno - deficency virus* என்பதே அதன் ஆங்கில விரிவாக்கம்.

மனித உடலில் உள்ள இயற்கையான நோயெதிர்ப்புச் சக்தியைத் தாக்கவல்ல இவ் வைரஸானது மனித உடலில் காணப்படுகின்ற உயிருள்ள கலங்களுக்குள் புகுந்து கொள்கிறது.

உலகில் இதுவரை 1 கோடியே 70 இலட்சம் பேர் HIV வைரஸ் தொற்றுக்குள்ளாகி இருப்பதாகவும் இது அடுத்த நூற்றாண்டின் ஆரம்பகாலப் பகுதியில் இரட்டிப்பாக அதிகரிக்கும் எனவும் உலக சுகாதார ஸ்தாபனம் எச்சரித்துள்ளது.

வளர்ந்த செல்வந்த நாடுகளில் எய்ட்ஸின் வளர்ச்சி வேகம் கணிசமானளவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந் நாடுகளில் அதிக பணத்தைச் செலவு செய்து எய்ட்ஸ் பரவும் வேகத்தை குறைத்து... நோயாளிகள் எய்ட்ஸ் வைரஸைக் காவிக் கொண்டே நீண்ட நாள் வாழ்வதற்கு வழிவகை செய்திருக்கிறார்கள்.

ஆனால் வருடத்துக்கு 10,000 அமெ.டொலராவது வருமானமாகப் பெற முடியாத மூன்றாம் உலக நாடுகளில் இது காட்டுத்தீ போல் பரவி விட்டது.

மூன்றாம் உலக நாடுகளில் சுகாதாரத்துக்கும் பொருளாதாரத்திற்கும் பெருந்தடையாக உள்ள முதல் சக்தியாக இன்று எய்ட்ஸ் பரிணமித்திருக்கிறது.

அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் ஒரு நாளைக்கு சுமார் 16,000 பேர் எய்ட்ஸ் நோய்க்கு ஆளாகிறார்கள். 1985ல் மூன்றாம் உலக நாடுகளில் எய்ட்ஸ் பரவுவது 50% ஆக இருந்தது. 1990ல் இது 66%ஆக உயர்ந்து இன்று 80% ஐ எட்டிப் பிடித்திருக்கிறதென்றால் இது பரவும் வேகம் எவ்வளவு என்று புரியும். சென்ற ஆண்டு இந்நோயால் இறந்தவர்களின் எண்ணிக்கை 2.5 லட்சம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கம்பூச்சியாவில் எய்ட்ஸ் நோயால் பிடிக்கப்பட்டவர்கள் எனத் தெரிந்ததும் பெற்றோரினால் வீதியோரத்தில் தூக்கி விசப்பட்ட பச்சிளம் பாலகர்கள். இவர்களை அந் நாட்டின் எய்ட்ஸ் பராமரிப்பு நிலையம் எடுத்து வளர்க்கிறது.

# மரணத்தோடு பிறந்துவிட்ட மழலைகள்

1990ம் ஆண்டில் உலக சனத் தொகையில் 25% பெண்களுக்கு HIVவைரஸ தோன்றியது. இது 1993இல் 40%மாக அதிகரித்தது. இதில் 15 - 30 வயதிற்கு இடைப் பட்ட பெண்கள் 68% ஆகும்.

உலகிலேயே ஆகக்கூடுதலாக எய்ட்ஸ் நோயினால் பாதிக்கப்பட் டிருக்கும் நாடு ஆபிரிக்காவாகும். இங்கு இறப்பவர்களின் வீதத்தில் கூடுதலானவர்கள் எய்ட்ஸ் நோயா ளிகளே.

1998இல் ஆபிரிக்காவில் எடுக் கப்பட்ட புள்ளிவிபரமொன்றின்படி இறக்கும் 5 பேரில் ஒருவருக்கு கட்டாயமாக எய்ட்ஸ் இருந்தது.

அமெரிக்காவில் HIV வைரஸ் தொற்றியவர்களின் எண்ணிக்கை சுமார் 10 லட்சமாகும். இதேபோல் பாகிஸ்தானில் சுமார் 50,000 பேரும் பிலிப்பைன்ஸில் 50,000 பேரும், கென்யா, உகண்டா, மாலாவி, தன்ஸானியானியா, ஸாய்ரே ஆகிய ஆபிரிக்க நாடுகளில் சுமார் இரு பதாயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் HIV வைரஸ் தொற்றுக்கு இலக் காகியுள்ளார்கள்.

ஏனைய நாடுகளும் இதற்கு விதிவிலக்கல்ல. பொட்ஸ்வானா, நமீபியா, ஸிம்பாவே போன்ற நாடுகளின் 25%மானவர்களுக்கு HIVவைரஸ் தொற்றியுள்ளது. இந் தியாவில் எய்ட்ஸ நோயினால் வருடத்துக்கு 30,000 பேர் வரை யில் இறக்கின்றனர். தமிழ் நாட் டின் சனத்தொகையில் 2 வீதமான வர்களுக்கு (12 லட்சம் பேருக்கு) எய்ட்ஸ் தொற்றியிருக்கின்றது.

1986ஆம் ஆண்டு எமது நாட் டுக்கு வந்து போன ஒரு உல்லா சப் பயணியின் உபயத்தால் ஒரு வர் எயிட்ஸ் நோய்க்கு ஆளானார். அன்றிலிருந்து இன்றுவரை இங்கே எய்ட்ஸ் நோயாளர்களின் தொகை 300ஐ எட்டிவிட்டது. மட் டுமில்லாமல் இன்னும் எத்தனை யோ பேர் இனங்காணப்படாமல இருக்கிறார்கள்.

**1998இல் ஆபிரிக்காவில் எடுக்கப்பட்ட புள்ளி விபரமொன்றின்படி இறக்கும் 5 பேரில் ஒருவருக்கு கட்டாயமாக எய்ட்ஸ் இருந்தது. அமெரிக்காவில் HIV கிருமி தொற்றியவர்களின் எண்ணிக்கை சுமார் 10 லட்சமாகும். இதே போன்று பாகிஸ்தானில் சுமார் 50,000 பேரும், பிலிப்பைன்ஸில் 50,000 பேரும், கென்யா, உகண்டா, மாலாவி, தன்ஸானியானியா, ஸாய்ரே ஆகிய ஆபிரிக்க நாடுகளில் சுமார் இருபதாயிரத்திற்கும் மேற்பட்டவர்களும் HIV கிருமித் தொற்றுக்கு இலக்காகியுள்ளார்கள்.**

உல்லாசப் பிரயாணிகளின் வருகையினால் எமது நாட்டில் அநேகமான சிறுவர்கள் எய்ட்ஸ் நோய்க்கு ஆளாகியுள்ளார்கள். இதில் அநேகமானவர்கள் கரை யோரப் பகுதியினரே...

இது தவிர வயிற்றில் வளரும் குழந்தைக்கே எய்ட்ஸ் தொற்றி விடுகிறதே... குழந்தைகளுக்கும் எய்ட்ஸா?.... கேட்டாலே நெஞ்சு பதறுகிறது.

பிஞ்சுக் குழந்தைகளின் வாழ் வில் நஞ்சாய் வரும் இந்நோய்... அவர்களின் ஆல் போல் தழைக்க வேண்டிய வாழ்வை அஸ்தமிக்கச் செய்ய வந்த - கருவிலேயே மர ணத்தைப் பதித்த - காலனாகி விட்டது.

துள்ளித் திரியும் பிஞ்சுக் குழ ந்தைகளை அள்ளி அணைத்துக் கொஞ்சிக் குலாவவும் தடை ஏற் படுத்தி விடுகிறது இக்கொடிய நோய்.

ஒரு தாய்க்கு எய்ட்ஸ் நோய் இருப்பின் அந்நோய்க்கிருமிகள் கர்ப்பத்தில் இருக்கும் குழந்தைக் கும் தொற்றுவதற்கு வாய்ப்புக்கள் அதிகம் உள்ளது.


சில குழந்தைகளுக்கு இரத்தம் உறைவதில் ஏற்படும் கோளாறு களால் அடிக்கடி இரத்தம் செலு த்த வேண்டிவரும். ஹீமோபீலியா நோயுள்ள குழந்தைக்கு அடிக்கடி இரத்தம் செலுத்தும் போது அந்த இரத்தத்தில் எய்ட்ஸ் கிருமிகள் இருந்தால் குழந்தைக்கும் தொற் றிவிடும்.

**வயிற்றில் வளரும் குழந்தைக்கே எய்ட்ஸ் தொற்றி விடுகிறதே... குழந்தைகளுக்கும் எய்ட்ஸா?.... கேட்டாலே நெஞ்சு பதறுகிறது. பிஞ்சுக் குழந்தைகளின் வாழ்வில் நஞ்சாய் வரும் இந்நோய்... ஆல் போல் தழைக்க வேண்டிய அவர்களின் வாழ்வை அஸ்தமிக்கச் செய்ய வந்த - கருவிலேயே மரணத்தைப் பதித்த - காலனாகி விட்டது.**

கொஞ்சம் வயதுவந்த சிறுவர் கள் ஓரினச் சேர்க்கையில் ஈடு படுவதாலும், ஊசி மூலம் போதை மருந்துகளை ஏற்றிக் கொள்ளப் பழகுவதாலும் இந்நோய் வரலாம்.

எய்ட்ஸ் நோய் தொற்றிய ஒரு குழந்தைக்கு அந்நோய் அறிகுறி கள் வெளிப்பட 3 மாதங்கள் தொடக்கம் 5 வருடங்கள் வரை செல்லும். எய்ட்ஸ் நோயுள்ள குழ ந்தைகள் பிறவியிலேயே சிறிய சோனிக் குழந்தைகளாக இருப்ப தோடு உடல் மெலிந்தவர்களாக வும் காணப்படுவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எயிட்ஸ் தொற்றிவிட்ட கென்யா குழந்தை

போதிய உடல் வளர்ச்சியின்மை, நாள்பட்ட நிமோனியா, அடிக்கடி காதில் சீழ் வடிதல், நாள்பட்ட நுரையீரல் தொற்றுநோய் சளி, இருமல், காய்ச்சல் போன்றவை ஏற்படுவது இந்நோயின் அறிகுறியாகும். கல்லீரல், மண்ணீரல் பெருத்து வயிற்றுப்பகுதியில் வீக்கமும் ஏற்படலாம்.

எய்ட்ஸ் நோயுள்ள குழந்தைகளில் 80 இலிருந்து 90 சதவீத குழந்தைகள் மூன்று வருடங்களே உயிர் வாழும் சாத்தியக்கூறுகள் இருக்குமாம்.

எய்ட்ஸ் எவ்வாறு தொற்றுகிறது என்பது தொடர்பாக பலருக்குச் சரியான விளக்கமில்லை. இதனால் எல்லோர் மத்தியிலும் பல்லாயிரம் சந்தேகங்கள்.

எய்ட்ஸ் வைரஸ் உடலின் சாதாரண மேற்தோலுக்கு ஊடாக தொற்றமாட்டாது. எனவே ஒரு நோயாளியைத் தொடுவது, பழகுவதால் எய்ட்ஸ் தொற்றிவிடுகிறதென எண்ணுவது தவறு.

ஆனால் எய்ட்ஸ் வைரஸ் உடலின் மென்மையான - மெல்லிய தோல் கொண்ட பகுதிகளால் தொற்றிவிடலாம்.

ஆண் உறுப்பு, பெண் உறுப்பு, உதடுகள் போன்ற உடற் பகுதிகளில் மெல்லிய தோல் காணப்படுவதால் பெரும்பாலான தொற்றல் இனச் சேர்க்கை மூலமே ஏற்படுகிறது.

ஆனால் எல்லா எய்ட்ஸ் தொற்றுக்களும் இனச் சேர்க்கையால் மட்டுமே ஏற்படுகிறது என்று எண்ணுவதும் தவறானது. எய்ட்ஸ் நோயாளிகளை ஒழுக்கக் கேடானவர்கள் என்று கருதி ஒதுக்குவதும் தவறானது.

எயிட்ஸ் தொற்ற வேறு வழிகளும் உண்டு. இரத்தப் பரிமாற்றங்கள் மூலமாகவும் எய்ட்ஸ் தொற்றலாம். ஊசியேற்றுதல், சவர அலகுகள் மூலமும் எயிட்ஸ் கிருமி உட்புகலாம். ஊசி மூலம் போதை மருந்து ஏற்றிக்கொள்வோருக்கும் இவ்வகையாகவே எயிட்ஸ் பரவுகிறது.

எனவேதான் பல்வேறு தடுப்பு முறைகளை அறிவுறுத்துகிறார்கள். ஒருவருக்குப் பாவித்த ஊசியை இன்னொருவருக்குப் பாவிக்காதிருக்க *Disposable Syringe* அறிவுறுத்தப்படுகின்றது. சவர அலகுகளை அவரவரே பிரத்தியேகமாகப் பாவிப்பது நல்லது. உடலுறவைப் பொறுத்தவரை ஒரே உறவைப் பேணுவதே பாதுகாப்பானது. அல்லது பாதுகாப்பு உறைகளைப் பயன்படுத்துவது உகந்தது.

**ஆண் உறுப்பு, பெண் உறுப்பு, உதடுகள் போன்ற உடற் பகுதிகளில் மெல்லிய தோல் காணப்படுவதால் பெரும்பாலான தொற்றல் இனச் சேர்க்கை மூலமே ஏற்படுகிறது. எல்லா எய்ட்ஸ் தொற்றுக்களும் இனச் சேர்க்கையால் மட்டுமே ஏற்படுகிறது என்று எண்ணுவதும் தவறானது. எய்ட்ஸ் நோயாளிகளை ஒழுக்கக் கேடானவர்கள் என்று கருதி ஒதுக்குவதும் தவறானது. எய்ட்ஸ் தொற்ற வேறு வழிகளும் உண்டு.**

பலர் தமக்கு எய்ட்ஸ் தொற்றியுள்ளதே தெரியாமல் மற்றோருக்கும் அதைப் பரப்பிவிடுகிறார்கள். இதில் இன்னோர் ஆபத்தான போக்கும் ஏற்பட்டு வருகிறது.

அதாவது தம்மை யாரோ ஏமாற்றி எய்ட்ஸ் நோய்க்கு ஆளாக்கிவிட்ட ஆத்திரத்தில் சிலர் தமக்கு வந்துள்ள இந்நோயை, பழிவாங்கும் மனோபாவத்தில் ஏனையோருக்கும் பரப்பிவிட முனைகிறார்கள். சமூகம் எய்ட்ஸ் நோயாளிகளை ஏதோ, சமூக விரோதிகள் போல் பார்ப்பதும் இவ் ஆத்திர உணர்வுக்கு ஒரு காரணமாகி விடுகிறது.

எயிட்ஸ் நோயை மருந்துகளாலும், பாதுகாப்பு முறைகளாலும் கட்டுப்படுத்தினால் போதாது. ஒரு பக்குவமான சமூக அணுகுமுறையும் இதற்குத் தேவை என்பதையே இவை உணர்த்துகின்றன.

டிசம்பர் 1ம் திகதியை உலக சுகாதார ஸ்தாபனம் சர்வதேச எய்ட்ஸ் தினமாகப் பிரகடனப்படுத்தியுள்ளது. எய்ட்ஸ் தொடர்பான மனித உரிமைகள் சட்ட மொன்று 1989ம் ஆண்டு வரையப்பட்டது. எய்ட்ஸால் பீடிக்கப்பட்டவரை சிகிச்சை என்ற பெயரில் வைத்தியசாலையில் தடுத்து வைத்திருப்பது போன்ற இன்னோரன்ன நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு இச்சட்டத்தில் தடை விதிக்கப்பட்டுள்ளது.



எய்ட்ஸ் தொற்றிவிட்ட தாய்லாந்து குழந்தை


இளைய தலைமுறையினரே நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான அத்திவாரங்கள். அவர்களிடையே *HIV* வைரஸ் தொற்றுவது சம்பந்தமான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவது அனைவரினதும் கடமையாகும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வமாகும்.

**- எஸ். எப். ஷாமிலா**



உலக எய்ட்ஸ் தினத்தன்று பிலிப்பைன்ஸில் ஆணுறைகளை ஊதிக் காட்டி பிரச்சாரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஹே! ராம்

ஹே! ராம் கமலின் தயாரிப்பு, டைரக்ஷனில் தமிழிலும் இந்தியிலும் தனித்தனியே எடுக்கப்பட்டிருக்கும் படம். உண்மைச் சம்பவத்தின் நிழலில் அமைக்கப்பட்ட ஒரு கற்பனைக் கதை. டொமினிக் லாபியேர் எழுதிய *Freedom at Midnight* என்கிற புத்தகத்தில் மகாத்மா காந்தியைக் கொல்ல சதி செய்தவர்களில் மற்றொரு குழுவும் இருந்தது என்று போகிற போக்கில் குறிப்பிட்டுள்ள செய்தியின் அடிப்படையில் கமல் ஒரு கதை பின்னியிருக்கிறார்.

மொகஞ்சதாரோ, கராச்சி, கல்கத்தா, சென்னை - தமிழ்நாடு, கோலாலம்பூர், டெல்லி என்று நாடெங்கும் உலவும் கதை.

சாகேதராமன் என்கிற தென்னிந்திய பிராமணக் கதாநாயகன் கல்கத்தாவில் தன் பெங்காலி புது மனைவியுடன் சுகமாக வாழத் துவங்கும் சமயத்தில் இந்து முஸ்லிம் கலவரம் வந்து மனைவி பலாத்காரம் செய்யப்பட்டு கொல்லப்படுவதைக் கண் முன் பார்க்கிறான். மெல்ல மெல்ல அவன் மனைவி இறந்ததற்குக் காரணம் மகாத்மா காந்திதான் என்பது மனதில் பதிவாகிறது அல்லது பதியவைக்கப்படுகிறது.

மனைவியின் மரணத்தை மறக்க சொந்த ஊர் சென்று இரண்டாவது கல்யாணம் செய்து கொள்கிறான். அவன் மனதில் இருக்கும் முதல் மனைவியின் ஞாபகங்கள் துரத்த ஒரு நாள் எல்லாவற்றையும் காசிக்குப் போய்த் துறந்துவிட்டு டெல்லிக்கு வருகிறான், 'காந்தியைக் கொல்ல!' மிச்சத்தை வெள்ளித் திரையில் காணலாம்.

ஷாருக்கான் ஆடுகிறார். துப்பாக்கி தூக்குகிறார். பம்பாய் சினிமா பாணியில் அல்ல. வேறு விதமாக.

புதுமுகம் வசுந்தரா ஒன்றும் அறியாத இளம் மனைவியாக - ஆனால் ஒரு பெண்ணின் உள் உணர்வுடன் - கணவனின் மன ஆழத்தில் உள்ள சோகத்தைப் புரிந்து கொள்ளும் ஒரு அருமையான பாத்திரப் படைப்பு. சாகேதராமன் அவளைப் பெண் பார்க்க வருவது, அவள் செய்த எம்பிராய்டரியையும், பாட்டுத் திறமையையும் குடும்பத்தார் விளக்குவது போன்ற காட்சிகள் கமலின் டைரக்ஷன் பாணியை தனிப்பட்டு அடையாளம் காட்டுகின்றன.

உண்மைச் சம்பவத்தின் சாயலில் ஒரு கற்பனைக் கதையைப் பின்னுவதில் சங்கடங்கள் உள்ளன.

உண்மைச் சம்பவங்களை அதிகம் திரிக்க முடியாது. உதாரணமாக, காந்தியைக் கொன்றது கோட்சே என்பது உலகமே அறியும். சாகேதராமன் கொன்றான் என்று சொல்ல முடியாது. ஆனால், காந்தியைக் கொல்ல முயற்சித்தவன் சாகேதராமன் என்கிற அளவுக்கு உண்மைக்கு நெருக்கமாக விளையாடுகிறார் கமல்.



உண்மைச் சம்பவத்தைச் சார்ந்து படம் பண்ணுவதில் அனுகூலங்களும் உண்டு. படமா நிஜமா என்கிற பிரமிப்பை ஏற்படுத்தலாம். படத்தில் பல கட்டங்களில் இந்த பிரமிப்பு ஏற்படுத்தப்படுகிறது.

தேவைப்பட்ட அளவுக்கு authenticity க்காக மற்ற மொழி வசனங்களைப் பயன்படுத்தி உள்ளார். அந்த வசனங்களால் கதையின் புரிதலில் எந்தவித பாதிப்பும் இல்லாதபடி எடுத்திருக்கிறார். உதாரணமாக, காந்தி இந்தியில் பேசினார். படத்தில் தமிழில் பேசினால் சரிவராது. அதனால், இந்திப் பதிப்பில் இந்தியிலும், தமிழ்ப் பதிப்பில் ஆங்கிலத்திலும் காந்தி பேசமாறு அமைத்திருக்கிறார்.

நஸ்ருதீன் ஷா காந்தியாக வருகிறார். கமல் அகில இந்தியப் புகழ் நடிகராக இருப்பதால் அவருடைய முதல் டைரக்ஷன் முயற்சிக்குப் பல தென்னிந்திய, வட இந்திய நண்பர்கள் ஒத்துழைத்திருக்கிறார்கள். ஷாருக்கான், நஸ்ருதீன் ஷா, ஓம்பூரி, கிரீஷ் கர்னாட், ஹேமமாலினி என்று ஒரு நட்சத்திரக் குவியல் படத்தில் இருக்கிறது.

காந்தியின் பேரரான துஷார் காந்தியும் படத்தில் வருகிறார் - துஷார் காந்தியாகவே. (உண்மையையும் கற்பனையையும் இரண்டறக் கலக்கும் சாகசத்தில் இதுவும் ஒன்று). மற்ற நடிகர்களுக்கும் பொருத்தமான பாத்திரங்கள்!

ராணி முகர்ஜி, ஷாருக் கான் போன்றவர்கள் கதாநாயகன் சாகேதராமனுடன் நட்பாலும் பழக்கத்தாலும் கற்றுக்கொண்ட குறைந்தபட்ச வார்த்தைகளோடு தமிழில் பேசுகிறார்கள்.

இதனால் கமல், மொழிப் பிரச்சினை, யதார்த்தம், இரண்டையும் ஒரு கல்லில் இரண்டு மாங்காயாக சமாளித்திருக்கிறார். அவர்கள் பேசும் தமிழ் உச்சரிப்பினால் படத்தில் ஒரு விநோதம் இருந்தாலும், அது கதையில் ஒன்றிப் போவதால் இரண்டாம் பட்சமாகி அடிபட்டுப் போய்விடும் என்கிற நம்பிக்கை.

கமலின் ஹொலிவூட் பிரவேசத்திற்கு களம் அமைக்கப்போகும் படமான ஹே ராம், அவரை நடிகராகவா டைரக்டராகவா அனுப்பப் போகிறது என்பதைப் பொறுத்திருந்து பார்க்க வேண்டும். •

**ஹே ராம் இசையமைப்பாளர் மாறியதன் உண்மைக் கதை என்ன?**

ஆரம்பத்தில் 'ஹே ராம்' படத்திற்கு இசையமைக்க பிரபல வயலினிஸ்ட் எல். சுப்பிரமணியத்திடம் அணுகியபோது, நெகிழ்ந்து போய், "நீங்கள் இயக்குகிறீர்கள்... எவ்வளவு பெரிய வாய்ப்பு இது, பண்ணுகிறேன்" என்று சொல்ல கமலும் நெகிழ்ந்து "சம்பளம்" பற்றி கேட்டிருக்கிறார். 'நமக்குள் சம்பளம் எல்லாம் ஒரு விஷயமா' என்று அந்தப் பேச்சை ஒதுக்கிவிட்டு இசையமைக்க ஆரம்பித்து, டியூன்களும் போட்டு முடித்திருக்கிறார் எல். சுப்பிர மணியம்.

'சம்பளம்' பற்றி முடிவு செய்ய, பாடல்கள் ஒலிப்பதிவுக்குப் பின் கடைசியாக கமல் கேட்டபோது, எல். சுப்பிரமணியம், "நான் 75 வாங்கறதுதான் வழக்கம். உங்களுக்காக 60" என்றாராம். (அந்த இலக்கங்கள் லட்ச ரூபாய்க்குரியவை) நெகிழ்வு போய் மயக்கம் வந்த குறையாய் கமல் மறுபடியும் பேச, '60 இல்லையென்றால் நானில்லை' என்றாராம் சுப்பிரமணியம். 'ஹே ராமு'க்காக போடப்பட்ட ட்யூன்களை என்ன செய்யப் போகிறீர்கள்? அதையாவது கொடுங்கள்' என்று கேட்டதற்கு, 'அது பரவாயில்லை. பீரோவுக்குள் வைத்தால் எப்பவாவது உபயோகப்படப்போகிறது' என்று சொல்லிவிட்டுப் பறந்துவிட்டாராம் எல். எஸ்.

நொந்துபோன கமல், இளையராஜாவிடம் போக, 'அவர் செய்ததை நான் பறிச்சுட்டேன்னு பேர் வருமே' என்ற ஆரம்ப யோசனைக்குப் பிறகு சம்மதித்தாராம். இப்போது ஹே ராமில் இளையராஜாவின் இசைமுத்திரை பொறிக்கப்பட்டு வெளியாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Y2K** என்ற சொல் ஏற்படுத்தியிருக்கும் கிலி இந்த ஆயிரமாம் ஆண்டின் இறுதிப் பகுதியைக் கடக்கும் கால்களை நடுங்க வைத்துவிட்டது. ஒரு பாரிய பூமி நடுக்கத்தைப் பற்றிய கிலியைவிட இது உலகை அதிகம் ஆட்டுவித்து விட்டது.

20ம் நூற்றாண்டின் எஜமான் திருவாளர் கம்ப்யூட்டர் ஏற்படுத்தி விட்ட கிலி. அவரை நாம் வெறும் ஏவலாள் போல்தான் பாவிக்கிறோம் என்ற கோபமோ என்னவோ அவர் இப்படியொரு உலகப் பெரும் ஸ்ட்ரைக்கில் இறங்கப் போவதாக அச்சுறுத்துகிறார். அதுவும் நாம் மிகக் குதூகலமாக புத்தாயிரமாம் ஆண்டின் பிறப்பை கொண்டாட முனைந்திருக்கும் இத் தருணத்தில்.




ஆமாம்! இந்த Y2K என்றால் என்ன? Y என்பது வருடம். K என்பது கிலோ - கிலோ என்றால் ஆயிரம். எனவே Y2K என்றால் வருடம் 2000.

இந்த 2000ஆம் வருடத்தில் விளையும் கம்ப்யூட்டர் அனர்த்தம் என்னவென்றால்....

எங்கள் கம்ப்யூட்டர் கண்டுபிடிப்பாளர்களின் சிக்கனப் புத்திதான் இந்த மா பெரும் செலவுக்கு ஆரம்பக் காரணம். அதாவது கம்ப்யூட்டரில் உள்ள டிஜிட்டல் நாள் காட்டி இரு டிஜிட்டுகளில்தான் இயங்குகிறது. 1999ம் ஆண்டை 99 என்று இரு இலக்கத்தால் தான் கம்ப்யூட்டர் அடையாளம் காண்கிறது. 2000ம் ஆண்டு பிறந்ததும் அது 00 என்று மாறும். இந்த அடையாளத்தை கம்ப்யூட்டர் 1900ஆ 2000ஆ அல்லது வேறா என இனம்காணாது தடுமாறும்.

தடுமாறினால் என்ன நிகழும்? பல வேடிக்கைகள் நிகழும். திகதிகளையும் நேரத்தையும் அடிப்படையாய் கொண்டு கம்ப்யூட்டரால் கட்டுப்படுத்தப்படும் பல துறைகளில் குழப்பங்கள் நிகழும். வங்கிகளில் வட்டிக் கணக்கீடு, வைப்பு, பென்ஷன்... போன்ற பல விடயங்களின் கணக்குகள் தாறுமாறாகும். பங்குச் சந்தைப் புள்ளிவிபரங்களில் குழப்பமேற்பட்டால் உள்நாட்டு மற்றும் சர்வதேச வர்த்தகத்தில் அல்லோலகல்லோலம் ஏற்படலாம்.

கம்ப்யூட்டர் மயப்பட்ட விமான நிலையங்களின் விமானப் போக்குவரத்து ஒழுங்குகள் மாறியடித்து ஒரே தந்தரகோளமாகிவிடும்.

தொலைத் தொடர்புத் துறையிலும் நேரக் கணக்கீடுகள், கட்டண அறவீடுகளின் பில்கள் யாவும் மாறுபடும். சர்வதேச தொலைத்தொடர்பு வலைப் பின்னலிலும் குழப்பங்கள் நிகழும்.

இதில் சேர்ந்துள்ள ஒரு நாட்டின் தொலைத் தொடர்பில் ஏற்படக்கூடிய சிக்கல் மற்றையவற்றையும் பாதிக்கும். நிதித் துறையில் பல மாறாட்டங்கள் ஏற்படும். இன்னும் பல கொம்ப்யூட்டர் மயப்பட்ட துறைகளில் குளறுபடிகள் நிகழும்.



சிலவேளை உங்கள் சின்னஞ் சிறிய சேமிப்புக்கு நூறு வருட வட்டியோடு கூடிய ஒரு பெருந் தொகை கிடைக்கலாம். அல்லது தற்போது தான் வேலையில் சேர்ந்த உங்களைப் பென்ஷனும் தந்து வீட்டுக்கு அனுப்பிவிடலாம். கம்ப்யூட்டர் மயப்பட்ட நாடுகளில் ஒருவேளை பென்ஷன் எடுத்துவிட்ட ஒருவருக்கு ஆரம்பப் பாடசாலை அனுமதிப் பத்திரம் வரலாம்.

இப்படியான வேடிக்கைகளோடு இந்தப் பிரச்சினை முடிந்துவிடப் போவதில்லை. மின்சாரம், நீர்விநியோகம், பெற்றோல் விநியோகம் போன்றவற்றில் ஏற்படக்கூடிய குழப்பங்களால் யாவும் ஸ்தம்பிதப்படலாம்.

போக்குவரத்துத் துறையில் சிக்னல் லைட்டுகள் தாறுமாறாக இயங்கி விபத்துக்களும் வீதித் தடைகளும் ஏற்படலாம். இதனால் நிறுவனங்களில் மட்டுமன்றி அன்றாட வாழ்விலும் கொம்ப்யூட்டர் சிக்கல் எதிரொலிக்கலாம்....

பயப்படாதீர்கள். இவற்றில் பெரும்பாலான குழப்பங்கள் எமது நாட்டிற்கு இல்லை. எமது நாடு இப்போதுதான் கொம்ப்யூட்டர் துறையில் காலடி எடுத்து வைக்கிறது. உலகின் மிக நவீனமயப்பட்ட நகரங்களில்தான் இதன் தாக்கம் அதிகம் எதிர்பார்க்கப்படுகிறது.




இந்தப் பிரச்சினையை எப்படித் தீர்ப்பது என்று நீங்களும் விழி பிதுங்குகிறீர்களா? கவலை வேண்டாம். ஏற்கெனவே தீர்வு கண்டு விட்டார்கள்.

இரண்டு டிஜிட்டுகளிலிருந்து நான்கு டிஜிட்டுகளாக கம்யூட்டரின் கலண்டரை மாற்றியமைப்பதுதான் வழி. ஆனால் இதுவரை உற்பத்தி செய்யப்பட்டுவிட்ட எத்தனையோ பல்லாயிரக்கணக்கான கம்ப்யூட்டர்களை, அவற்றில் இயக்கப்படும் பல்வேறு புரோகிராம்களால் ஒழுங்கமைக்கப்பட்ட பாரிய துறைகள், நிறுவனங்கள் ஆகியவற்றின் வகை தொகையான விடயதானங்களை ஒவ்வொன்றாக இப் புதிய கம்ப்யூட்டர் முறைமைக்கு மாற்றி, சரிபார்த்து உறுதிப்படுத்திக் கொள்வதுதான்... ஒரு அலாவுதீனின் அற்புத விளக்குப் பூதத்துக்கும் சிரமமான பாரிய வேலை.

இந்த மறுசீரமைப்புக்காக உலம் செலவிட்டுள்ள தொகை 30,000 கோடி அமெரிக்க டொலர்கள்.

இப்படிப் பெரும் செலவு செய்தும் எங்காவது பிழை நடக்காது என்பதை உறுதிப்படுத்த முடியாது. கம்ப்யூட்டர் புகுந்துள்ள சிறு சிறு துறைகளின் மூலை முடுக்குகளிலெல்லாம் இத்தகைய நுணுக்கமான கவனம் செலுத்தப்பட்டிருக்கிறதா என்பது கேள்விக்குறி.

பல நிறுவனங்கள் நாம் Y2K க்குத் தயார் என்று அறிவித்தாலும் அவற்றை நாம் உறுதிசெய்யக்கூடிய வழிவகைகள் இல்லை. சொல்வதை நம்ப வேண்டியதுதான்.

ஆகவே 1999 டிசம்பர் 31ம் திகதியின் நடுச்சாமம் கம்ப்யூட்டர் ஆசாமிகளுக்கு நெஞ்சைப் பிடித்துக் கொண்டிருக்கும் நேரமாகவே அமைந்திருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதேவேளை இந்நேரத்தின் விமானப் பணம் மிகப் பதட்டமான அனுபவமாய் அமைந்திருக்கும்.

ஒரு நாட்டில் இரவு 12 மணியைத் தாண்டி 2000ம் ஆண்டுக்குள் நேர முள் நகரும்போது விமானம் பயணிக்கும் இன்னொரு நாட்டில் 1999ம் ஆண்டாக இருக்கலாம். அதனால் அங்கு புதிய நேரத்துள் பிரவேசித்த கம்பூட்டர்களின் சமிக்ஞைகளை பழைய நேரத்தில் இயங்கும் மற்றைய நாட்டு விமான நிலையங்கள் புரிந்துகொள்ளாமல் தடுமாறினால்.... பயணிகள் கதி....?

இவ்வாறு பதட்டத்துடன் எதிர்பார்க்கும் பிரச்சினை சிலவேளை ஒன்றுமில்லாததாகவும் போகலாம். ஆனால் எப்படி நம்பியிருப்பது? அதனால் எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கைகள் அனைத்தையும் எடுத்துத்தான் ஆகவேண்டும்.

Y2K பிரச்சினையில் அதிக சிக்கல் எதிர்பார்க்கப்படுவது ஆசிய நாடுகளில்தான். முன்னேறிய மேற்




கத்திய நாடுகளில் பெருமளவு முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு விட்டன. பின்தங்கிய ஆசியா பின்னால்தான் விழித்துக் கொண்டது. அதனால் அதன் சகல துறைகளிலும் Y2K முன்னேற்பாட்டு நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்குமா என்பதில் சந்தேகம் உள்ளது. அதனால் ஆசியாவை .Y2K யின் கூடை என்கிறார்கள்.

ஆசியாவின் பெரும் நகரங்களாகிய டேக்கியோ, சிங்கப்பூர், ஹொங்கொங் போன்றவற்றில் இத் தலையிடியையிட்டு பெரும் 'கவலை நிலவுகிறது.

டோக்கியோ போக்குவரத்தில் கம்ப்யூட்டர் மயப்பட்ட சிக்னல் லைட்கள் குளறுபாடடைந்தால் அதை நிவர்த்தி செய்வதற்கென டோக்கியோ மெட்ரோபொலிட்டன் பொலிஸ் போக்குவரத்து ஒழுங்கமைப்புப் பயிற்சியில் ஈடுபட்டு தயாராக உள்ளது.

மலேசியா, கம்ப்யூட்டர் சிக்கலை மறுசீரமைப்பதற்காக பெருந் தொகை பணத்தை உலக வங்கியிடமிருந்து பெற்றுள்ளது.

சீனாவின் Y2K தலைவர் ஸாங்குயி அந் நாட்டின் சக்திவளத் துறை, விமானத்துறை, தொலைத் தொடர்புத்துறை போன்றவற்றின் அதிகாரிகளை தமது துறைகளில் Y2K பிரச்சினையை முற்றாக நீக்கி விட்டதாக மக்களுக்கு உத்தரவாதம் வழங்க வேண்டுமெனவும் ஏதாவது தவறுதல்கள் இருப்பின் தண்டனைக்குள்ளாக வேண்டுமெனவும் பணித்துள்ளமை இச்சிக்கலை சீனா எவ்வளவு பாரதூரமாக எதிர் நோக்குகிறது என்பதை எடுத்துக் காட்டுவதாய் உள்ளது.

ஹொங்கொங், சிங்கப்பூர், வட கொரியா நாடுகள் தொலைத் தொடர்பு, நிதி, போக்குவரத்து, பொது வளத்துறை போன்ற முக்கிய துறைகளில் தாம் நூறு வீத Y2K பாதுகாப்பை உறுதிப்படுத்தியுள்ளதாகத் தெரிவித்துள்ளார்கள்.

வட கொரியாவில் தொலைபேசியில் ஏதாவது குழப்பங்கள் நேர்ந்தால் கைத் தொலைபேசி சேவையை உதவிக்குச் செல்லத் தயாராக இருக்கும்படி அரசாங்கம் உத்தரவிட்டுள்ளது. அதே வேளை மின்சார விநியோகத்தில் ஏற்படக்கூடிய சிக்கலை எதிர்நோக்க சாதாரண காலத்தை விட 4 மடங்கு மின்சாரம் (3.5 மில்லியன் கிலோ வாட் மின்சாரம்) சேமித்து வைக்கப்பட்டுள்ளது. எரிவாயுவும் அவ்வாறே 67 நாட்களுக்குப் போதுமான அளவு சேமித்து வைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு பல்வேறு நாடுகள் இப் பிரச்சினையை மிக முக்கியமான பிரச்சினையாக எடுத்து பெருந்தொகைப் பணத்தையும், பெருமளவு முன்னேற்பாடுகளையும் செய்திருக்க நாம் இதை அற்பமானதாக எடைபோடக்கூடாது.

ஆனால் அரசாங்கங்களும் வங்கிகள் போன்றவையும் இப் பிரச்சினையை அதிகம் வெளிப்படுத்துவதில்லை. பொதுமக்கள் பீதியடைந்து எதிர்மாறாகச் செயற்பட ஆரம்பித்துவிட்டால் நாட்டில் பெரும் நெருக்கடி ஏற்பட்டு விடும் என்பதே காரணம்.

உதாரணத்துக்கு ஒரு வங்கி Y2K பிரச்சினையால் முடமாகப் போகிறதென்று மக்கள் கருதினால் என்ன நடக்கும்? தமது வைப்புப் பணங்களுக்கு என்ன ஆகப் போகிறதோ என்ற பயத்துடன் மக்கள் வங்கிகளுக்குப் படையெடுக்க ஆரம்பிப்பார்கள். வங்கி திவாலாக வேண்டியதுதான்.

இதேபோல மிகப் பதட்டமான விடயங்கள் பாதுகாப்பு பகுதியில் உண்டு. வல்லரசு நாடுகளில் ஏவுகணைகள் யாவும் கம்ப்யூட்டர் மயப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் கோளாறு ஏற்பட்டு அவை தாறுமாறாக இயங்க நேரிட்டு விட்டால்....?

அமெரிக்கா ஸ்டார் வோர் திட்டமென செய்மதிகளிலிருந்து நடத்தும் ஏவுகணைத் தாக்குதல் திட்டமொன்றை வகுத்து வைத்துள்ளதாக கூறப்படுகிறது. கட்டளைகள் பிசகிய அப்படியொரு செய்மதியிருந்து திடீரென பூமி மேல் தாக்குதல்கள் நிகழ்ந்தால்...?

கம்ப்யூட்டர் கட்டுப்பாட்டிலியங்கும் இரசாயணத் தொழிற்சாலைகள், அணு உலைகள் போன்றவற்றில் பாரிய கசிவு ஏற்பட வழிவகுக்குமானால்....?

இப்படியான அபரிமிதக் கற்பனைகளையும் பலர் கிளப்பிவிட்டுள்ளனர். ஆனால் உண்மை நிலைமை இக் கதைகள் அச்சுறுத்துமளவுக்கு இருக்க மாட்டாதென்பதுதான் சர்வதேச Y2K கூட்டுத்தாபன மையத்தின் கணிப்பீடு. குழப்பங்கள் மிதமான அளவில்தான் இருக்குமென அது கூறுகின்றது.

Y2K பிரச்சினைக்காக உலகம் இத்தனை செலவழித்துத் தயாராக இருக்க... பலருக்கு இது ஒரு வருமானத்துக்கான வாய்க்காலாகவும் மாறியுள்ளது. குறிப்பாக கம்ப்யூட்டர் கம்பனிகளுக்கும், கம்ப்யூட்டர் நிபுணர்களுக்கும் பெரும் தொழில் லாபத்தை ஈட்டிக் கொடுத்துள்ளது. அதைவிட இந் நெருக்கடியையிட்டு சாதாரண வியாபார உத்தி கொண்டவர்களும் வருமானத்துக்கு வழி வகுத்துக் கொண்டுள்ளனர்.

ஹொங்கொங்கில் மின்சாரத் தடைகளை எதிர்நோக்கி பட்டரி கடைகள் தயார் நிலையில் திறந்திருக்கின்றன. தண்ணீர் விநியோகத் தடையை எதிர்பார்த்து தனியார் குளியல் இடங்கள் தண்ணீரை நிரப்பி வைத்துக்கொண்டு காத்திருக்கின்றன.

2000மாம் ஆண்டு பிறக்கும்போது மட்டும்தான் இப் பிரச்சினை ஏற்படும் என்பதல்ல. அது சில நாட்கள், வாரங்கள், மாதங்கள்கூடத் தொடரலாம். கணக்கு வழக்குகள், கட்டண பில்கள் போன்றவை மாத அடிப்படையில் இருப்பின் இப் பிரச்சினை சில மாதங்களுக்கும் நீடிக்கலாம்.

எவ்வாறாயினும் நாம் புத்தாயிரமாம் ஆண்டின் தேவதையை வரவேற்கும் அதே நேரத்தில் பின்னால் நுழைந்து கொள்ளும் இந்தப் பிசாசையும் வரவேற்றே ஆகவேண்டியிருக்கும். ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளார்ந்த குங்ஃபூ தத்துவம்

# தாவோ






தற்காப்புக் கலை பற்றிய புத்தகங்கள் ஆயிரக்கணக்கில் வெளிவந்துள்ளன. ஆனாலும் அவற்றில் குங் ∴பூ கலையில் தாவோ தத்துவத்தின் பிரதான பாத்திரம் பற்றி ஒருசில புத்தகங்கள் மட்டுமே பார்வை செலுத்தியுள்ளன. இது ஒரு துரதிர்ஷ்டவசமான நிலை.

தற்காப்புக் கலையென்பது இரு எதிராளிகளுக்கிடையான மோதலில் ஒருவர் தனது வல்லமையை மற்றவர் மீது காண்பிப்பது என்பதே பொதுவான விளக்கமாக உள்ளது.

ஆனால் இந்த உடல் ரீதியான வலு, ஆற்றல் என்பவற்றைவிட மிக அதிகமான தத்துவார்த்த விடயங்கள் இக் கலைகளில் அடங்கிக் கிடக்கின்றன என்பது அதிகம் வெளித்தெரியாத ஒன்று.

குங் ∴பூ கலையின் உயிரம்சமாக அமைந்திருக்கும் தாவோ தத்துவமும் அவ்வாறு பலராலும் தெளிவாகப் புரிந்து கொள்ளப்படாத ஒன்றே.

அனேகர் குங் ∴பூ கலையின் தாக்குதல் நுட்பங்களை மட்டுமே அறிந்து கொள்வதற்கு ஆசைப்படுகின்றனர். பின்னாலுள்ள தத்துவத்தைப் புரிந்து கொள்ள விழைவதில்லை. அத் தத்துவ வெளிச்சத்தைப் பெற்று அதன் வழி ஒழுகுபவர்கள் உண்மையில் அசாதாரண மனிதர்களாகத் திகழ்வர்.

ஒரு உண்மையான குங் ∴பூ குருவுக்கு இத் தற்காப்புக் கலை வெறும் உடல் ஆற்றலுக்கான வழி மட்டுமல்ல என்பது நன்கு தெரியும். அதற்கு மேலாக ஆன்மீகத் தாய்மை, மன அமைதி, ஆழமான தன்னம்பிக்கை ஆகியவற்றுக்கான பாதையாகவும் அவர்கள் இக் கலையைக் காண்கிறார்கள்.

ஒரு குங் ∴பூ பயிற்சிக் கூடத்தில் தன் மாணாக்கர்களுக்கு எப்போதாவது சில முறைதான் குரு, அவர்கள் கைவரப் பெறவேண்டிய வேறு சில பாடங்களும் உள்ளன என்பதைக் குறிப்பால் உணர்த்துவார். அவ்வாறான சந்தர்ப்பங்களில் தாம் கற்ற வித்தைகளுக்குப் பின்னால் மிக ஆழமான தத்துவங்கள் அடங்கிக் கிடப்பதை சில மாணவர்கள் உணர்ந்து கொள்வர்.

தமது உடற் பயிற்சிகளெல்லாம் ஒரு கட்டத்துக்கு அப்பால் தம்மை வளர்த்துச் செல்லும் தன்மையை இழந்து விடுகின்றன வென்றும் அதற்கு ஒரு தத்துவார்த்த அம்சம் அவசியமாகிறது என்றும் உணர்வர்.

பல காலப் பயிற்சியின் பின்னரே ஒருவர் இச்சீன தற்காப்பு கலையின் ஆழமான நோக்கத்தை உணர்வார். அப்போது இக்கலை தனிப்பட்ட ஆன்மீக வளர்ச்சிக்கான ஒரு வாகனமாக அமைந்துள்ளதைப் புரிந்து கொள்வார்.

குங்∴பூ கலையின் மூலப்பிறப்பிடமான சோலிங் டெம்பிள் முதன் முதலாக அழிக்கப்பட்ட 16ம் நூற்றாண்டில் இக்கலையில் சண்டையிடும் ஆற்றலை விட உள்ளார்ந்த ஆன்மீக வளர்ச்சிக்கான முக்கியத்துவம் இதில் வலுப்பெற்றது. தற்காப்புக் கலையானது மரணச் சண்டைக்கான கருவி என்ற நிலையில் இருந்து ஆன்ம வளர்ச்சிக்கான பயிற்சிக்காக மாறியது. அதன் அடையாளமாகத்தான் தாவோ என்ற தத்துவத்தின் பெயர் பல்வேறு தற்காப்புக் கலைகளிலும் பொதிந்து காணப்படுகிறது.

வாள்ச் சண்டைக் கலையான கென்ஜுட்ஸு (kenjutsu) என்ற கலை தாவோ தத்துவத்தை உள்வாங்கிகொண்டோ(Ken-do) என்பதாக பெயர் மாறியது. அதில் Do என்பது தாவோ (Tao) என்பதற்கான பிற மொழி உச்சரிப்பாகும். விரைவிலேயே மற்றும் பல தற்காப்புக் கலைகளிலும் தாவோ என்ற முடிவுச் சொல் இடம் பெற்று தத்துவார்த்த அம்சம் உள்வாங்கப் பட்டது. தாவோ - Tao(Do) என்பதின் மிகக் கிட்டிய அர்த்தம் "உள்வெளிச்சத்துக்கான மார்க்கம்". **தன்னைத்தான் உணர்ந்து கொள்வதும் புரிந்து கொள்வதும்** என்றும் இதற்குப் பொருள் கூறலாம்.

இத் தாவோ (Do) என்ற அம்சம் ஆய்கிடோ (Aikido) ஜுடோ (Judo) கராத்தே டோ (Karate - Do) தாய் க்வன் டோ (Tae - kwan Do) கப்கிடோ (Hapkido) போன்ற பிறநாட்டுக் கலைகளையும் வெவ்வேறு அளவுகளில் பிரதிபலிக்கிறது.

சீன தற்காப்புக் கலைகளில் தாவோ தத்துவத்தின் பங்கு இலகுவான ஒரு வரைவிலக்கணத்துக்குள் அடங்கிவிடாது. ஏனெனில் அது ஒரு உள் அறிதல் செயற்பாடு. தற்காப்புக் கலைகளின் தாவோ தத்துவம் ஆழ்ந்த அறிவின் சக்தியையும் உள்ளுணர்வு செயற்பாட்டையும் வலியுறுத்துகிறது. இதன் இறுதி இலக்கு தனி மனிதனிலிருந்து கோபத்தையும் மாயை கற்பனை பொய்மை மற்றும் தீவிர உணர்ச்சிகளையும் விடுவிப்பதாகும்.

அதேவேளை எல்லாத் தற்காப்புக் கலைகளிலும் இத்தாவோ தத்துவத்தின் அடிப்படை விளக்கம் ஒரே விதமானதுதான் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். இக்காரணத்தினால் தான் தற்காப்புக் கலைகளின் பயிற்சிக்கூடம் (DO-JO) டோயோ






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என ஜப்பானிய மொழியிலும் டோயங் (DO-JANG) என கொரிய மொழியிலும் கூண் (KWOON) என சீனமொழியிலும் பாரம்பரியமாக அழைக்கப்படுகிறது. இதன் அர்த்தம் **உள்வெளிச்சத்துக்கான இடம்** என்பதாகும்.

இப்பயிற்சிக் கூடத்தில்தான் நாம் எம்மை எம்முடனும், எமது பயங்களுடனும், மனக்கிலேசங்களுடனும் பிரதிபலிப்புக்களுடனும், பழக்கவழக்கங்களுடனும் தொடர்புபடுத்துகிறோம்.

இது முரண்பாடுகளை ஒழுங்கமைத்த இக்காலத்திலே நாம் மோதுகின்ற எதிராளியை எமக்கு எதிராளியாக அன்றி எம்மை எமக்கு முழுமையாகப் புரிந்துகொள்வதற்கு உதவும் ஒரு செயற்பாட்டில் இணைந்துகொண்ட கூட்டாளியாகவே உணர்த்துகிறது.

இதுவே நாம் யாரென்றும் நாம் இவ் உலகில் எவ்வாறு செயற்படுகிறோம் என்பதையும் பற்றிய பெரியதோர் அறிதலை குறுகிய காலத்தில் எமக்கு பெற்றுத்தருகின்ற இடமுமாகும்.

இப்பயிற்சிக் கூடத்துள் நிகழும் மோதலும் முரண்பாடும் வெளியே ஏற்படக்கூடிய முரண்பாடுகளைக் கையாள எமக்கு உதவுகிறது. தற்காப்புக் கலைகளைக் கற்பதற்கு இங்கே பயிற்றுவிக்கப்படும் கவனக்குறிப்பும் ஒழுக்கமும் நாளாந்த வாழ்வில் அவற்றைக் கடைப்பிடிக்க வகை செய்கிறது.

எந்த ஒரு இடமும் ஒரு பயிற்சிக்கூடமாக அமையலாம். அதற்கு ஒரு அழகான நவீனமான கட்டிடம்தான் அவசியம் என்றில்லை. புரூஸ்லீ தனது குங்ஃபூ பயிற்சியை தனது வீட்டின் ஓடு பாதையில்தான் நடத்தி வந்தார்.

ஒவ்வோர் பயிற்சிக் கூடமும் சிஃபூ (SIFU) என்று சீன மொழியில் அழைக்கப்படும் அல்லது சென்சீ (SENSEI) என்று யப்பானிய மொழியில் அழைக்கப்படும் குரு ஒருவரின் தலைமையில் இயங்கும்.

குரு ஆரம்பத்திலேயே தற்காப்புக் கலைப் பயிற்சிகளின் உள் விளக்கங்களைத் தெரிவிப்பதில்லை. அவர் வெறும் பயிற்சி நுட்பங்களை மட்டுமே பயிற்றுவித்துச் செல்வார். அதேவேளை மாணவன் தானாகவே இவற்றின் உள்விளக்கங்களைப் புரிய முற்படும் வரை பொறுத்திருப்பார்.

மாணவனுக்கு இத்தேவை தானாக ஏற்பட்டு போதிய அர்ப்பண உணர்வு பிறக்கும் போது குரு தகுந்த ஆன்மப் புத்துணர்வை வழங்கி தற்காப்பு கலையின் அர்த்தமும் சாராம்சமும் அவனுக்கு துலங்கிட உதவுவார். இங்கே குரு தனது திறமைகளை மாணவனுக்கு ஏற்படுத்த முயல்வதில்லை. மாணவனின் திறமைகளையும் பலஹீனங்களையும் அவனே உணரச் செய்து அவனுள் இருக்கும் விளக்கத்தையே வெளிக்கொணர உதவுகிறார்.

ஒருவரால் குங்ஃபூவில் உள்ளடங்கியுள்ள தாவோ தத்துவத்தை கற்று அறிய முனைந்தாலும் அதுபற்றிய உண்மையான அறிவு அவருக்கு அனுபவபூர்வமாகவே ஏற்படக்கூடியது. தேனின் சுவையைப் பற்றி, எவ்வாறு அதைச் சுவைக்கக் கொடுக்காமல் ஒருவருக்கு விளங்கப்படுத்தி புரிய வைக்க முடியும்? வாய்மொழி விவரணம் எமக்கு ஒன்றைப் புரிந்து கொள்வதற்கான உணர்வை ஏற்படுத்திவிடாது.

சுவையை அறிய வேண்டுமானால் ஒருவர் அதை தானே அனுபவிக்க வேண்டும். இக்கலையின் தத்துவம் தியானத்தினூடாகவோ அல்லது அறிவாற்றலினூடாகவோ அன்றி பருவ காலங்களில் பூக்கள் புஷ்பிப்பதை போல மனதிலிருந்து உள்ளார்ந்த ரீதியான ஒரு அனுபவமாக புஷ்பிக்க வேண்டும்.

ஆதலால் வசனங்கள் யாவும் தவிர்க்க முடியாமல் உயிரற்ற அர்த்தங்களின் சடலங்களாகவே ஆகிவிடுகின்றன. உண்மைத் தத்துவம் செயற்பாட்டோடு சேர்ந்தே மலர்கிறது. தத்துவத்திலிருந்து பிரிந்த செயற்பாடு குருடாகிறது. செயற்பாட்டிலிருந்து பிரிந்த தத்துவம் மலடாகிறது.

தத்துவமே செயற்பாடாயும் செயற்பாடே தத்துவமாயும் ஒன்றிலிருந்து ஒன்றுக்கு எந்நேரமும் மாறியபடியும் ஒன்றுகலந்தும் இருக்கும் நிலையில்தான் இக்கலையோ தத்துவமோ முழுமையான அவற்றின் அர்த்தத்தை வெளிப்படுத்துகின்றன.

**- பில்லி வொங்**
**தமிழில் : பாஸ்கரன்**

**தாவோ தத்துவத் துளிகள்:**

**கட்டுப்பாடில்லாதவனிடம் அறிவுக்கு இடமில்லை.**

**காரணமேதுமின்றி உன்னால் ஒருவனின் உடலைத் தோற்கடிக்க முடியும். ஆனால் காரணத்துடன் மட்டுமே ஒரு மனதைத் தோற்கடிக்க முடியும்.**

## தாவோ தத்துவத்தின் இரட்டை மீன் சின்னத்தைக் குறிக்கும் குங் ஃபூ செயல்முறை













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் சினிமாவில் நகைச்சுவை - II



கலைவாணர் கால நகைச்சுவைக்குப் பிறகு மறக்க முடியாத நகைச்சுவை நடிகராகக் கொடிகட்டிப் பறந்தவர் T. R. ராமச்சந்திரன். அசட்டுத்தனமான முகமும் "ஙே" என்று பிதுங்கி நிற்கும் முழியுமாக வந்து கலகலப்பூட்டியவர்.

'சபாபதி' படத்தின் மூலம் கதாநாயக அந்தஸ்திற்கும் உயர்ந்து, நகைச்சுவை நடிகர் கதாநாயகனுமாகலாம் என்ற சகாப்தத்தைத் தொடக்கி வைத்தார். இவரது வருகைக்குப்பின்னரே தமிழில் முழு நீள நகைச்சுவைப் படங்கள் தயாரிக்கும் துணிவும் வந்தது எனலாம்.

பொன்வயல், கோமதியின் காதலன், வாழ்க்கை, மேதாவிகள், கதாநாயகி, கல்யாணம் பண்ணியும் பிரம்மச்சாரி, அடுத்த வீட்டுப் பெண் போன்றன ராமச்சந்திரன் நடித்த நகைச்சுவைத் திரைப்படங்கள். இவரது 'ஸ்ரீவள்ளி' படக்காட்சியும் சிரித்து மகிழவைப்பது.

T. R. ராமச்சந்திரனைத் தொடர்ந்து பல நகைச்சுவை நடிகர்களும் ஓரிரண்டு படங்களாவது கதாநாயகனாக நடித்துப் பார்த்திருக்கிறார்கள். சந்திரபாபு, நாகேஷ் போன்றவர்கள் குறிப்பிட்டுச் சொல்லக் கூடியவர்கள். சுருளிராஜன், கவுண்டமணி போன்றவர்கள் கதாநாயகனாக நடிக்க முயற்சித்துத் தோல்வி கண்டதில் சில காலம் இறங்குமுகத்திலிருந்து பின்னர் ஆசுவாசப்படுத்திக் கொண்டு நகைச்சுவைப் பாத்திரங்களில் கொடி கட்டினார்கள்.



சி
னி
மா

நகைச்சுவை நடிகராக அறிமுகமாகிப் பின்னர் பிரபல வில்லன் நடிகரானவர் எம். என். நம்பியார்.

கதாநாயகனாக, வில்லனாக நடித்துப் பின் நகைச்சுவைக்குத் தாவியவர் மறைந்த பிரபல நடிகர் எஸ். ஏ. அசோகன்.

அதேபோல முதலில் வில்லனாகப் புகழ்பெற்று, பிந்திய திரைப்படங்களில் சிறந்த குணச்சித்திர, நகைச்சுவை நடிகராக பரிணமித்தவர் T. S. பாலையா. அலட்டிக்கொள்ளாத பாவனையில் அளவான நகைச்சுவை, சிறப்பான கணீர்க் குரல் இவற்றோடு முத்திரை பதித்தவர் பாலையா.

பார்த்திபன் கனவில் மாரப்ப பூபதியாக வந்து வில்லத்தனம் பண்ணியதற்கும், தில்லானா மோகனாம்பாள், காதலிக்கநேரமில்லை போன்ற பிற்காலப் படங்களில் அப்பாவித்தனமாக நகைச்சுவை வெடிகளை அள்ளி வீசியதற்குமிடையே பாலையாவின் நடிப்பில் பலத்த வேறுபாட்டை நாம் காணமுடியும்.

இதுபோல் மற்றுமொருவர், மிக நீண்ட காலமாக வில்லனாக, குணசித்திர நடிகராக, அதிகம் அலட்டிக்கொள்ளாத நகைச்சுவையாளராக இன்றும் பல படங்களில் நடித்து வருகிறார், அவர் வி. கே. ராமசாமி. மிக அமைதியாகவும், அசுவரசியமாகவும் பேசியே சிரிப்பு மூட்டி விடுபவர் இவர்.

சிரிப்பு நடிகர்களாக வந்து கதாநாயகர்களாகவும் மாறியவர்கள் ஒரு புறமென்றால்......



"இவரைத் தருவதாக இருந்தால் அதற்குப் பதிலாக பாகிஸ்தானையே இந்தியாவுக்கு எழுதித் தந்துவிடச் சம்மதம்" என்று பாகிஸ்தான் எம்.பி. ஒருவரை ஜொள்ளில் வழிய வைத்த மும்பை அழகுப் புயல் மாதுரி டிக்ஸிற்றுக்கு திருமணமாகி விட்டது. படத்தில் கணவரோடு காணப்படுகிறார்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

**'ஜேம்ஸ் பாண்ட்'** படத்தில் பிரபுதேவாவும் பார்த்திபனும் இணைகிறார்கள். முழுக்க முழுக்க வயிறு குலுங்கச் சிரிக்க வைப்பதற்காகவே வருகிற படம். "மை நேம் இஸ் பாண்ட். வீட்டில எல்லோரும் என்னைச் செல்லமா பாண்டுரங்கான்னு கூப்பிடுவாங்க..." என்று சொதப்புகிற பாத்திரம் பிரபுதேவாவுக்கு. "எனக்கு ஒரே தலைவலி..." என்று யாராவது சொன்னால், "ஒரே ஒரு தலை இருந்தா தலைவலியும் ஒண்ணுதான் இருக்கும்..." என்று டபாய்க்கிற பாத்திரம் பார்த்திபனுக்கு. தியேட்டரையே குலுங்க வைக்க பொங்கலுக்கு வரப் போகிறார் ஜேம்ஸ் பாண்ட்.

மீனா ஹீரோயினா நடித்த முதல் தமிழ்ப் படம் 'ஒரு புதிய கதை'. மொழு மொழு கன்னங்களும் குறுகுறுத்த கண்களும் குழந்தைப் பேச்சுமாக ஒரு தசாப்த காலத்திற்கு மேலாக தமிழ் ரசிக இதயங்களைக் கலக்கிய மீனா சற்று ஓய்ந்து போயிருக்கிறார். காரணத்தைச் சொன்னால் கோபப்படுவார். அஜீத், விஜய், சூர்யா வகையறாக்களுக்கு அக்காவாகத் தோற்றமளிப்பவர் நடையுடை பேச்சு பாவனையில் குழந்தைத்தனத்தைக் காட்ட முயற்சித்தால் பார்க்கிறவர்களுக்கும் எரிச்சல் வரத்தானே செய்யும். மகள் திரும்பவும் ஒரு ரவுண்ட் வரவேண்டும் என்ற விருப்பத்தில் மீனாவின் தாய்க்குலம் தனது கெடுபிடிகளைத் தளர்த்தியிருக்கிறது. இருந்தாலும் பட வாய்ப்புகள் குறைவுதான். ரஜினியுடன் நடித்த முத்து படத்தைப் பார்த்துவிட்டு ஜப்பானியர்கள்தான் இப்போது ஜொள்ளு விட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

கதாநாயகிகளுக்கு வயதாகிவிட்டால்தான் பாவம். கதாநாயகர்களுக்கு அந்தக் கவலையில்லை. கன்னச் சதை தொங்கி தூக்கி நடக்க முடியாதபடி தொந்தி வைத்து விட்டாலும் பதினெட்டு வயது நடிகையைக் கட்டிப் பிடித்துக் காதல் பண்ணி டூயட் பாடிக் கொண்டிருப்பார்கள். ரசிகர்களைத் தாஜா பண்ணுவதற்காக தந்தையாகவும் மகனாகவும் இரு வேடங்களில் வயதுக்கு டிமிக்கி கொடுத்துக் கொண்டிருப்பார்கள். 'கண்ணுபடப் போகுதையா'வில் இரு வேடங்களில் வந்து சிம்ரனோடு டூயட் பாடி சரிந்த மார்க்கெட்டை சற்று நிமிர்த்திக் கொண்ட விஜயகாந்த், அடுத்து மூன்று வேடங்களில் ஐந்து கதாநாயகிகளோடு வருகிறார். மூன்றும் மூன்று விதமான தனித்தனிக் கரெக்டர்களாம். படம் **சிம்மாசனம்.**

இங்கே மீனாவும், பிரபுதேவாவும், விஜயகாந்தும் இணைந்திருப்பது **'வானத்தைப் போல'** படத்திற்காக.



கதாநாயக நடிகர்களாகப் புகழ்பெற்ற பலரும் முழு நீள நகைச்சுவைப் படங்களில் நடித்திருக்கிறார்கள்.

பாலசந்தரின் 'தில்லு முல்லு' படத்திலிருந்து முழு நீள நகைச்சுவைப் பாத்திரத்தையும் ஏற்றுக் கலக்க ஆரம்பித்தார் ரஜினிகாந்த்.

புன்னகை மன்னனில் சார்லி செல்லப்பாவாக வந்த கமல் ஹாசன், பிறகு மைக்கேல் மதன காமராஜன், சதிலீலாவதி, காதலா காதலா என்று பல படங்களில் முழு நகைச்சுவைப் பாத்திரமாகத் தூள்பரத்தினார்.

சத்தியராஜ் வில்லத்தனத்தை மெல்ல நகைச்சுவையாக்கி கதாநாயகனாக நிலைபெற்றவர். தான் உண்மையில் ஒரு ஹீரோ இல்லை என்கிற உறுத்தல் அவருக்குள்ளே இருந்து கொண்டிருப்பதால், நகைச்சுவையால் சமாளிக்க முனைவதை அவதானிக்கலாம். குறிப்பாக டூயட் பாட வேண்டி வரும் காட்சிகளில் எம். ஜி. ஆரின் அங்க சேட்டைகளை ஞாபகப் படுத்தி சிரிப்புமூட்டித் தப்பித்து கொள்வார் சத்தியராஜ்.

உள்ளத்தை அள்ளித்தா, உதவிக்கு வரலாமா, உனக்காக எல்லாம் உனக்காக, உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன் என்று வரிசையாகப் பல படங்களில் கார்த்திக்கும் இப்போதெல்லாம் நகைச்சுவைக்கே முக்கியமளிப்பதைப் பார்க்க முடிகிறது.

டைரக்டராக வந்து நடிகர்களானவர்களில் பாக்யராஜ், பார்த்திபன், பாண்டியராஜன் போன்றோர் சிரிப்பையே பிரதான மூலதனமாய்க் கொண்டிருப்பவர்கள்.

மணிவண்ணன் இப்போது முழு நேர நகைச்சுவை நடிகராகிவிட்டார். முதலில் பாரதிராஜாவின் கொடி பறக்குது படத்தில் இவர் வில்லனாகத்தான் வந்தார். அது அவ்வளவாக எடுபடவில்லை. வில்லத்தனம் கலந்த கொமெடியை இவர் வரித்துக்கொண்ட போது, கொடி கட்டிப் பறக்கிறார். நடிகவேள் எம். ஆர். ராதாவை சற்றே ஞாபகப்படுத்திச் சிரிக்க வைக்கிறார் மணிவண்ணன்.

புதிதாக வருகின்ற பல டைரக்டர்களும் நகைச்சுவைக் காட்சிகளில் கூடிய கவனத்தைச் செலுத்துகின்றனர். எதையும் நகைச்சுவையோடு சொல்லத் தெரிந்தவர்களே வெற்றியும் பெறுகின்றனர். தாங்களே நடிக்கவும் செய்கின்றனர். கே. எஸ். ரவிகுமார், ரமேஷ் கண்ணா, லிவிங்ஸ்டன், ஆர். சுந்தரராஜன், மனோபாலா என்று பலர் இப்போது நடிக்கிறார்கள்.



"தாஜ்மஹால் எதுக்குக் கட்டினாங்க?"

"அது சாஜஹான் என்ற மன்னன் இறந்துபோன தன் மனைவிக்காக கட்டினது"

"நான் இறந்துட்டா, நீங்க என்ன கட்டுவீங்க?"

"உன் தங்கையை..."

நாடகத் துறையிலிருந்து வந்த பலரும் சினிமாவிலும் சிரிப்பு மூட்டையை அவிழ்த்து உதறியிருக்கிறார்கள். எம். ஆர். ராதா சினிமாவில் புகழ்பெற்றிருந்த போதே நாடக மேடையிலும் பிரபலமாக இருந்தவர். ஒரே சமயத்தில் வில்லனாகவும் சிரிக்க வைப்பவராகவும் இரட்டைக் குரலில் அரசியல் சாட்டையும் சீர்திருத்தக் கருத்துக்களுமாக தன் வீச்சைக் காட்டியவர். "வெள்ளைக்காரன் நீராவியில ட்ரெயினை ஓட்டவும் கப்பலை ஓட்டவும் கண்டுபிடிக்கிறான், நம்மவன் இட்லி அவிக்கத்தானே தெரிஞ்சு வைச்சிருக்கிறான்... இவன் எப்டி முன்னேறுவான்?" என்கிற ராதாவின் பாணியில் மணிவண்ணன் இப்போது முயன்று வருகிறார்.

நாடக மேடையிலும் புகழ்பெற்று சினிமாவிலும் பிரபலமான மற்றொரு நகைச்சுவை நடிகர் சோ. அரசியல் கிண்டலில் தனி முத்திரை பதித்தவர். தங்கப் பதக்கம் படத்தில் அரசியல்வாதியாகத் தோன்றி திராவிட அரசியல் தலைவர்களின் போக்கை வெளுத்து வாங்கியவர். தேன்மழை இவரது படம். நாகேஷுடன் சேர்ந்து இவர் அடிக்கும் லூட்டி எத்தனை தடவைகள் பார்த்தாலும் சிரித்துச் சிரித்து வயிறு புண்ணாக வைப்பது.



சி
னி
மா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"இன்று எங்கள் கல்லூரியில் விவாதப் போர் ஒன்று நடக்க இருக்கு.... நானும் கலந்து கொள்ளப் போகிறேன். களத்தில் எல்லோருக்கும் அவரவர் மூளைதான் ஆயுதம்...."

"நீ அபார தைரியசாலிதான்... நிராயுதபாணியாகவே களத்தில் குதிக்கப் போகிறாயே...!

தனது பிரபலமான நாடகங்களான முகமது பின் துக்ளக், உண்மையே உன் விலை என்ன? யாருக்கும் வெட்கமில்லை போன்றவற்றையும் படங்களாக எடுத்தார்.

நாடக மேடையிலிருந்து வந்து படங்களிலும் நகைச்சுவையை வாரியிறைத்துக் கொண்டிருப்பவர்களாக விசு, எஸ். வி. சேகர், வை. ஜி. மகேந்திரன், கிரேஸி மோகன், காத்தாடி ராமமூர்த்தி போன்றவர்களையும் சொல்ல வேண்டும்.

டி.கே.எஸ்.சகோதரர்களால் நாடகத்திலிருந்து திரைக்கு அறிமுகப்படுத்தப்பட்ட T. N. சிவதாசன், குண்டு கருப்பையா, ஃபிரெண்ட் ராமசாமிபோன்றவர்களையும் குறிப்பிட வேண்டும்.

ஆரம்பத்தில் நகைச்சுவைப் பெண் பாத்திரங்களிலும் நாடகங்களில் வந்தது போல ஆண்களே நடித்தனர். பின்னர் படிப்படியாக நடிகைகளும் பலர் நம்மை வயிறு குலுங்கச் சிரிக்க வைத்தார்கள்.

என். எஸ். கிருஷ்ணனுக்கு ஜோடியாக வந்த T. A. மதுரம், காளி என். ரத்தினத்திற்கு ஜோடியாக வந்த சி. டி. ராஜகாந்தம், ஏ. கருணாநிதிக்கு ஜோடியாக வந்த முத்துலட்சுமி, தங்கவேலுக்கு வாழ்க்கையிலும் ஜோடியாக இணைந்த எம். சரோஜா, அங்கமுத்து, ஈ. வி. சரோஜா, சுந்தரிபாய், சச்சு, மனோரமா, அச்சச்சோ சித்ரா, கோவை சரளா என்று நகைச்சுவை நடிகர்களின் பட்டியல் சின்னதாக இருந்தாலும் சிரிக்க வைப்பதில் சளைத்தவர்களில்லை.



குறிப்பாக மனோரமா மிக நீண்ட காலமாக தொடர்ந்து சாதனை படைத்து இன்றும் சிரிக்க வைக்கும் நடிகையாக ஜமாய்த்து வருகிறார்.

தவிரவும், கதாநாயகி நடிகைகளிலேயே நகைச்சுவைப் பாத்திரங்களிலும் சோபிக்கிறவர்களாக சாவித்திரி, சௌகார் ஜானகி, ஸ்ரீதேவி, ஊர்வசி, ரோஜா போன்றவர்களைக் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும்.

நகைச்சுவை நடிகர்களில் கலைவாணருக்குப் பின்னான வெற்றிடத்தை நிரப்பியவர்களில் சிறப்பிடம் டணால் தங்கவேலுவுக்கு. இவரோடு நாடக மேடையிலும் பின் திரையிலும் துணை நின்று வாழ்க்கைத் துணைவியுமானவர் எம். சரோஜா.

பேசும் முறையிலேயே நம்மைச் சிரிப்பிலாழ்த்திவிடுபவர் தங்கவேலு. தெய்வப் பிறவி, முதலாளி, கல்யாணப் பரிசு, அடுத்த வீட்டுப் பெண் போன்ற பல படங்களில் வரும் தங்கவேலுவின் நகைச்சுவை நம் வானொலியில் இன்று கேட்டாலும் கூட வயிறு குலுங்க சிரிக்க வைப்பவை.

பாடியும் ஆடியும் பேசியும் சிரிக்க வைத்து சரித்திரம் படைத்த நடிகர் சந்திரபாபு. சொந்த வாழ்க்கையில் நல்ல குணத்தாலும் தவறான பழக்க வழக்கங்களாலும் அவர் **கவலையுள்ள மனித**னாக நேரிட்டது என்றாலும், திரையில் எல்லோரையும் சிரிக்க வைத்தார். அவரது மணவாழ்க்கை தோல்வியாக அமைந்தது அனைவரும் அறிந்ததே.

"நெஞ்சிலோர் ஆலயம்" படத்துடன் திரையுலகில் நுழைந்த நாகேஷ் வெகு காலம் ஜொலித்தவர். வயது முதிர்ந்த இப்போதும் அவ்வப்போது படங்களில் தோன்றுபவர். வெறும் நடிகர் மட்டுமல்ல, நகைச்சுவையாகவும், தத்துவார்த்தமாகவும் பேசத் தெரிந்த சற்று தீவிர சிந்தனையாளரும் கூட. நல்ல குணசித்திர நடிகராக, கதாநாயகராகத் தோன்றி வெற்றி பெற்றவர்.



செம்பருத்தி மூலம் தமிழில் மலர்ந்த பூ ரோஜா. மூன்றாவது படத்திலேயே ரஜினிக்கு ஜோடியாக நடிக்கும் வாய்ப்பைப் பெற்றவர். வசீகரமாய் புன்னகைக்கும் முகம். நீண்ட காலமாக செல்வமணியோடு காதல் என்று கிசுகிசுக்கப்படுவதை மறுக்காமலும், அதே சமயம் மார்க்கெட்டை இழந்து விடாமலும் தாக்குப்பிடித்து வருபவர். கமல்ஹாசனைப் பிடிக்காது என்று தடாலடியாகச் சொல்லும் ரோஜாவுக்கு பிடித்த நடிகர்கள் கார்த்திக்கும் பிரபுவும்.

எய்ட்ஸ் வதந்திக்கு ஆளான போதும் தனது துணிச்சலால் சமாளித்தவர். "ஒரு பெரிய ஹீரோ எங்கிட்ட, 'இப்படி எய்ட்ஸ்னு போட்டிருக்காங்களே, ஃபீல் பண்ணலையா?'ன்னு கேட்டார். எனக்கு உள்ள அழுகையா வருது. ஆனா வெளியில காட்டிக்க முடியலை. 'இல்ல சார், இந்த வதந்தியால எனக்குப் பாதுகாப்புத்தான். யாராவது ஒரு ஹீரோவுக்கு 'மூடு' வந்து என்னைக் கேக்கணும்னு நினைச்சாக் கூட, 'எய்ட்ஸ்'னு விட்டுடுவாங்க'ன்னு சொன்னேன். கேட்ட அந்த ஹீரோ கண்ணுல கண்ணீர்..." என்று சிரித்தபடியே சொல்ல முடிகிறது ரோஜாவுக்கு.

"வாழ்க்கையில எப்பவும் சிரிச்சுக்கிட்டே இருக்கணும். சந்தோஷமா இருக்கணும். அதுதான் என்னோட பாலிஸி" என்று சொல்லும் ரோஜாவிடம் கைவசம் ஏராளம் 'கடி ஜோக்'குகள். இதோ உதாரணத்திற்கு சில:

**"தொண்டை கட்டியிருந்தா என்ன பண்ணணும்?"**

"அவிழ்த்து விட்டுடணும்."

**"ஒரு கப்பல் வாங்கணும்னா முதல்ல என்ன செய்யணும்?"**

"பல் டாக்டர்கிட்டே ஒரு 'கப்'பை கொடுத்து வைக்கணும்."

**"மயிலே மயிலே இறகு போடுன்னா மயில் இறகு போடுமா?"**

"போடாது... ஏன்னா அதுக்கு நம்ம பாஷை புரியாது...!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிஸ்கோ ஆட்டத்தைத் திரையில் புகுத்தி, டைமிங் எனப்படும் காலமறிந்து வீசும் நகைச்சுவைப் பொறிகளாலும் வெகு காலம் பேசப்பட்டவர். நீர்க்குமிழி, எதிர்நீச்சல், காதலிக்க நேரமில்லை, தில்லானா மோகனாம்பாள், அன்பே வா, சர்வர் சுந்தரம், பணமா பாசமா, தேன் மழை என்று பல படங்களில் அவரது மறக்க முடியாத பல பாத்திரங்கள் பலருக்கும் சட்டென்று நினைவுக்கு வரும்.

"பத்திரிகை மட்டுமில்லை.... சினிமாவை எடுத்துக் கொள்ளுங்கள்.... ஏதோ நாலு பேர் இடத்தைப் பிடித்துக்கொண்டு, தங்களுக்குத் தெரிஞ்சதை, 'மக்கள் இதைத்தான் ஏத்துக்குவாங்க' என்று கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.... அந்த நாலு பேருக்கு என்ன தெரியுமோ அதுதான் வெகு ஜன ரசனையாக காட்டப்படுகிறது."
- சா. கந்தசாமி

சுருளிராஜன் கொஞ்ச காலமே உயிர் வாழ்ந்து அதற்குள் தனது நகைச்சுவை நடிப்பால் அனைவர் உள்ளங்களையும் அள்ளிக்கொண்டு போனவர். அந்தக் குரலும், சட்டென நெளியும் அந்த உடல்வாகும் அவர் திரையில் தோன்றியவுடனேயே சிரிப்பை ஏற்படுத்தி விடுபவை. 'ஹிட்லர் உமாநாத்'தில் அந்த வில்லுப் பாட்டு இப்போது கேட்டாலும் புல்லரிக்க வைப்பது. "போர்வையைப் போர்த்திக்க கன்னுக்குட்டி மேய்ஞ்சிடப் போவுது" என்பார்.

தேய்காய் சீனிவாசன், வெண்ணிற ஆடை மூர்த்தி போன்றோரும் சிரிப்பு நடிப்பில் தங்கள் முத்திரைகளைப் பொறித்தவர்கள்.

வெண்ணிற ஆடையில் கதாநாயகனாக அறிமுகமான பிற்காலவில்லன் நடிகர் ஸ்ரீகாந்தும் ஆரம்பத்தில் நகைச்சுவை நடிப்பிலேயே முயற்சித்தார்.

இவர்களோடு ஏ. வீரப்பன், நீலு, ஐ. எஸ். ஆர்., சதன், பிரபாகர், மாலி, டைப்பிஸ்ட் கோபு, 'ஐயா தெரியாதையா' ராமராவ், என்னெத்த கன்னையா, பக்கோடா காதர், ஐசரி வேலன், தயிர்வடை தேசிகன், ஓமக்குச்சி நரசிம்மன், மதன்பாப், குமரிமுத்து, லூஸ் மோகன், கல்லாப்பெட்டி சிங்காரம் போன்றோரும் சிரிப்பு நடிகர்களாகத் திகழ்ந்தனர்.

வாரிசு நடிகர்களாக ராதாவின் மகன் எம். ஆர். ஆர். வாசுவும், பாலையாவின் மகன் ஜூனியர் பாலையாவும் நகைச்சுவை நடிகர்களாகவே தந்தை வழியில் திரையில் தோன்றினர்.

இன்று சிரிக்க வைத்துக் கொண்டிருக்கும் நடிகர்களாக கவுண்டமணி, செந்தில், மணிவண்ணன் போன்றோருடன் சார்ளி, சின்னி ஜெயந்த், விவேக், வடிவேலு, வையாபுரி, பாலாஜி, தாமு, பாரி வெங்கட் (சமீபத்தில் அமரரானவர்), சாப்ளின் பாபு ஆகியோரையும் குறிப்பிடலாம்.

நகைச்சுவை என்பது காலத்திற்கேற்றபடி மாறி வருகிறது. இன்றைய இளைஞர்களுக்கு சீரியஸான பழைய படங்களைப் பார்த்தால் கூட சிரிப்பு வருகிறது. அது பழைய ராஜாவின் உடையை இக்காலத்தில் ஒருவர் தெருவில் அணிந்து சென்றால் நமக்கு ஏற்படும் சிரிப்பைப் போன்றது.

சிவாஜி கணேசன் கைகளை விரித்து உயரே தூக்கி, "என்னை விட்டுட்டுப் போயிட்டியே அம்மா..." என்று கடைசி 'மா...' வை சற்று இழுத்து நீட்டி ஆலாபனையாக அழுவதெல்லாம் இன்றைய இளைஞர்களுக்கு பயங்கரச் சிரிப்புக்குரியதாகிறது.

சிரிக்கத் தெரிந்தவர்களுக்கு உலகம் ஒளிமயமானது. சிரிக்கத் தெரியாதவர்களுக்கு உலகம் பகலில்கூட இருட்டாகத்தான் இருக்கும் என்கிறார் வள்ளுவர்.

**நகர்வல்லார் அல்லார்க்கு**
**மாயிரு ஞாலம்**
**பகலும்பாற் பட்டன் றிருள்.**

---



"நான் ஷாம்பு போட்டுக் குளிக்கிறதே இல்லை. பயத்தம் மா, எலுமிச்சை தோல், கருவேப்பிலை, பூந்திக் கொட்டை நான்கையும் அரைத்து என் அம்மா தருவார்கள். அதைத் தேய்த்துக் குளித்தால் உடம்பு சூடு தணிந்துவிடும்..." என்று தன் வாளிப்பான கூந்தலுக்கும், மேனிக்கும் காரணம் சொல்கிற ரவளி எதற்கும் துணிந்தவள் என்று பேரெடுத்தவர். பெரிய திரையில் அட்டகாசமாய் வந்து கலக்குகிற இவரது அக்கா ஹரிதா சின்னத் திரையில் அடக்கமான நடிப்புக்குப் பேர் போனவர்.





"சிகரெட்டும் காதலும் ஒண்ணுதாண்டா. ரெண்டும் உதட்டோட உறவாடி உள்ளத்தைப் புண்ணாக்கும்..... எஸ்கேப்!"

"என்னடா பன்னித் தலையா, கைநெறய ஸ்வீட்டோட வர்றாய்..?"

"அண்ணே, எனக்கு ஆம்பளக் குழந்தை பிறந்திருக்குண்ணே... அப்டியே அச்சு அசல் என்னய மாதிரியே இருக்கிறதா எல்லாரும் பேசிக்கிறாங்க..."

"அட, ஒண்டக்க மக்கா, நீ ஒண்ணும் வருத்தப் பட்டுக்காதே... ஆம்பளப் பிள்ளை அழகாயில்லாட்டித்தான் இப்ப என்ன.... ஃபீல் பண்ணாத வுடு..."

சினிமா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோயற்ற

# அவசரக் கருத்தடை

டொக்டர் எம். கே. முருகானந்தன் எம்.பி.பி.எஸ்.

கருத்தடை என்றாலே அத்தியாவசியமானது. எல்லோருக்குமே வாழ்நாளில் நீண்ட காலத்திற்கு நிச்சயம் தேவைப்படுவது தான்.

அதில் அவசரமான கருத்தடை முறைகள், சாதாரண கருத்தடை முறைகள் என்ற வித்தியாசம் என்னவென்று நீங்கள் கேட்கக் கூடும். இவை தேவைப்படும் சந்தர்ப்பங்களிலும் பாவிக்கப்படும் முறைகளிலும் பெரிய வித்தியாசம் இருக்கவே செய்கிறது.

**வழமையான கருத்தடை முறைகள்:**

வழமையான கருத்தடை முறைகள் என்பது நாம் சாதாரணமாகக் கைக்கொள்வது. எமக்குக் குழந்தை இப்போதைக்கு வேண்டாம் எனும்போதும், நீண்ட காலத்திற்கு வேண்டாம் எனும்போதும், இனி வேண்டவே வேண்டாம் எனும் போதும் நாம் திட்டமிட்ட முறையில் செய்வதுதான் வழமையான கருத்தடை முறைகள்.

இதில் கூட இரண்டு வகைகள் உண்டு.

இனிகுழந்தைகளேவேண்டாம் உள்ளது போதும் எனத் திடமான முடிவு எடுத்தபின் கணவன் அல்லது மனைவி கருத்தடைச் சத்திர சிகிச்சை செய்து கொள்வது நிரந்தர முறை.



குழந்தை கிடைப்பதை சற்றுக் காலத்துக்குத் தள்ளிப் போடும் முறைகளான ஆணுறை, பெண்ணுறை, கருத்தடை மாத்திரைகள், கருத்தடை ஊசி மருந்து, லூப் என்று பொதுவாகச் சொல்லப்படும் கருப்பையினுள் வைக்கப்படும் Copper T எனப் படும் வளையம் போன்றவை நீங்கள் அறிந்தவையே. இவை தற்காலிக முறைகள்.

இவைதவிர மாதவிடாய் சக்கரத்தில் பாதுகாப்பான நாட்களில் மாத்திரம் கூடுவது, ஆண் விந்து பெண்ணுறுப்புக்குள் செல்லாத வாறு வெளியே குறியை எடுப்பது போன்றவை இயற்கை முறைகள். ஆனால், இது அவ்வளவு பாதுகாப்பான முறை அல்ல.

சரி, இந்த அவசர கருத்தடை முறை என்பது என்ன எனக் கேட்கிறீர்களா? *Emergency contraception* என்று மருத்துவத்தில் குறிப்பிடுவார்கள்.

நீங்கள் எந்தவித கருத்தடை முறைகளையும் உபயோகிக்கக் காமல் இருக்கும்போது அல்லது நீங்கள் திருமணமாகாமல் இருக்கும் போது திடீரென எதிர்பாராத விதமாக பாதுகாப்பற்ற முறையில் உடலுறவு கொள்ள நேரிட்டால் கர்ப்பம் தங்காமல் தடுக்கும் முறை தான் இந்த அவசர கருத்தடை முறை.

சில உதாரணங்களைப் பார்ப்போமா?

உங்கள் கணவர் வெளிநாட்டில் நீண்ட நாட்களாக இருக்கிறார். இதனால் நீங்கள் எந்தக் கருத்தடை முறைகளையும் உபயோகிக்க வேண்டியிருக்கவில்லை. திடீரென எந்த அறிவிப்புமின்றி வந்து இறங்குகிறார். உங்கள் சந்தோஷமோ சொல்ல முடியாது. அவருக்கும்தான். நீண்ட நாட்களின் பின்னான சந்திப்பில் நடந்ததைச் சொல்லவும் வேண்டுமோ?

மறுநாள் காலை பிறக்கிறது. கூடவேபயமும் வருகிறது. கர்ப்பம் தங்கிவிடுமோ?

பயப்படாதீர்கள். இருக்கவே இருக்கிறது அவசர கருத்தடை முறைகள்.

சில தருணங்களில் பாதுகாப்பு எடுத்தால் கூட தவறு நேர்ந்து விடலாம். ஆயாசத்தோடு களைத்துப் படுத்திருந்த உங்களை கணவர் உலுப்புகிறார். "கொண்டோம்' வெடிச்சுப் போச்சப்பா..." தூக்கிவாரிப் போடுகிறது உங்களுக்கு. அசதி கலைகிறது. கர்ப்பம் தங்கி விடுமோ என்ற கவலை பிறக்கிறது....

தூள் அடித்து மதி மயங்கிக் கெடுக்கத் திரிபவர்கள் ஒருபுறம், ஆயுதத்தின் பலத்தால் அடக்கிக் கிடத்த முனைபவர்கள் மறுபுறம். மறைக்க வேண்டியதை விளம்பரமாக வெளிப்படுத்தி ஆபத்தை தாமே விலைக்கு வாங்கும் பெண்கள் இன்னொரு புறம். பாலியல் வல்லுறவுகள் எந்த நேரத்திலும் பெண்களை எதிர்பாராதவிதமாக விரும்பாத வேண்டாத கருவிற்குத் தாயாகச் செய்யும் ஆபத்திற்கு இன்று குறையே இல்லை.

இத்தகைய தருணங்களில் எல்லாம் உதவக் கூடியதுதான் இந்த அவசரக் கருத்தடை முறை.

**நீங்கள் செய்ய வேண்டியது என்ன?**

இப்படியான எதிர்பாராத முறையில் உறவுகொள்ள நேர்ந்தால் கூடிய விரைவில் உங்கள் வைத்தியரை அல்லது மருந்தாளரைச் சந்தியுங்கள்.

உதாரணமாக இரவில் சம்பவம் நடந்திருந்தால் மறுநாள் காலையிலேயே சந்தியுங்கள். அவர்கள் உங்களுக்கு Postioner என்ற மாத்திரையைத் தரக்கூடும். உண்மையில் இரண்டு மாத்திரைகளைத் தருவார். உடனடியாக ஒன்றையும் 12 மணி நேரத்தின் பின் இரண்டாவதையும் விழுங்க வேண்டும். இது பாதுகாப்பானதும் நம்பிக்கையுமான கருத்தடை முறையாகும். 3 வீதம் மட்டுமே தவறக்கூடும்.

உலகத்தில் வருடாந்தம் 59 மில்லியன் கருச்சிதைவுகள் நடப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் மூன்றில் இரண்டு பங்கு பயிற்சி அற்றவர்களாலும் சுகாதாரமற்ற முறையிலும் செய்யப்படுகிறது. பரிதாபமான விடயம் என்னவெனில் இவர்களில் 78000 பேர் மரணமாகிறார்கள். இன்னும் பல்லாயிரக் கணக்கானோர் சுகாதாரமற்ற சட்டவிரோத கருச்சிதைவுகளால் நிரந்தர உடல்நலக் கேடுகளுக்கு ஆளாகிறார்கள். பூத்துக் குலுங்க வேண்டிய வயதில் கருகி உதிர்வது எத்துணை துயரமானது.



இவற்றைத் தடுக்க இந்த அவசர கருத்தடை முறை நிறையவே உதவும் என நம்பலாம்.

வழமையான கருத்தடை முறைகள் உடலுறவிற்கு முன்னரே பாதுகாப்பாகச் செய்யப்படுகின்றன. ஆனால் இது உடலுறவின் பின் அவசரமாகச் செய்யப்படுவது.

ஆனால் இது கரு அழிப்போ கருச் சிதைவோ அல்ல என்பதை தெளிவாகப் புரிந்து கொள்ள வேண்டும். ஏனென்றால் கரு பெண்ணின் கர்ப்பப் பையில் ஊன்றுவதற்கு முன்னரே அது தங்காமல் தடுப்பதே இம்முறைகள்.

**மாற்று முறைகள்**

இவற்றைத் தவிர அவசர கருத்தடை முறைகளாக வேறு இரு முறைகளும் உபயோகிக்கப்படுவதுண்டு.

1. செறிவு கூடிய கருத்தடை மாத்திரைகளில் இரண்டை உடனடியாகவும், 12 மணி நேரத்தின் பின் இரண்டையும் உபயோகிப்பது இன்னொரு முறையாகும். இதுவழமையாகப்பாவிக்கப்படும் சாதாரண கருத்தடை மாத்திரையல்ல.

2. அடுத்தது கருப்பையில் வைக்கப்படும் கருத்தடைச் சாதனமாகிய (IUCD) யை பாதுகாப்பற்ற உடலுறவு நடந்த ஐந்து நாட்களுக்குள் கர்ப்பப் பைக்குள் வைப்பதாகும். இது மிகவும் பாதுகாப்பான முறை. 1 சதவீதம் மட்டுமே தவறக் கூடியது.

ஆயினும் இது வைத்தியர்களால் அல்லது நன்கு பயிற்றுவிக்கப்பட்ட சுகாதார சேவையாளரால் மட்டுமே செய்யக்கூடியது என்பதால் சுலபமாக நடைமுறைப் படுத்த முடியாது.

அத்துடன் கருத் தங்கிய பின்னர் பெண்ணின் கருப் பையினுள் வேண்டுமென்றோ அல்லது தவறுதலாகவோ வைக்கப்பட்டால் இரத்தப் பெருக்கு, கிருமித் தொற்று போன்ற பல பக்க விளைவுகளை ஏற்படுத்தலாம் என்பதால் பெருமளவுக்கு இது ஊக்குவிக்கப்படுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முன்னர் கம்யூனிஸ்ட்ட நாடாக இருந்த கிழக்கு ஜேர்மனியில் பாவிக்கப்பட்ட பிரபல்யமான கார் **ராபன்**. நியூருப்பின் என்னும் நகரில் அமைந்துள்ள இக் கார்க் கம்பனியின் முகப்பில் அமைக்கப்பட்ட ஒரு தூணில் இம் மாடல் கார் ஒன்று நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது. அதில் இப் பாரிய கூட்டைக் கட்டி சுதந்திரமாக நின்று பூமியைப் பார்க்கிறது இந்த நாரை. முல்லைக்குத் தேர் தந்தான் பாரி. இங்கு நாரைக்குக் கார் கொடுத்தான் ஜேர்மன்காரன்! என்றால் பொருந்துமா?




என்னடா, பாறாங்கல்லை நிறுக்கிறார்கள் என்று பார்க்கிறீர்களா? இல்லை, இது ஒரு பெரிய மாணிக்கக் கல். திகைக்காதீர்கள். இந்த ச..பையர் ரக மாணிக்கக் கல்தான் உலகில் இதுவரை கண்டெடுக்கப்பட்டவற்றில் மிகப் பெரியது. நிறை என்ன தெரியுமா? 7 கிலோ. அம்மாடியோவ்!

இது பாங்கொக்கில் கஞ்சாம்பூரி என்னும் இடத்தில் உள்ளூர் வாசிகளால் கண்டெடுக்கப் பட்டு இந்த மாணிக்க வியாபாரிக்கு விற்கப்பட்டதாம். எவ்வளவு விலை கொடுத்து இதை வாங்கினார் என்று அவர் மூச்சு விடுகிறார் இல்லை. விரைவிலேயே கின்னஸ் புத்தகத்தில் இடம்பெறப்போகிறது இது.



உலகத்திலேயே அதி உயரமான மனிதன் நஸீர் அகமட் சூரோ என்னும் பாகிஸ்தானியர். இவரது உயரம் 7அடி 8.9அங்குலம். தாய்வானில் உள்ள உலக கின்னஸ் சாதனைகளுக்கான மியூஸியத்தில் வரவேற்கப் படுகிறார்.



தங்கம்போல் ஜொலிக்கும் இச் சிலைகளைப் பார்த்தீர்களா? இவை உண்மையில் தங்கத்தால் ஆனவையல்ல. வெறும் ஐஸ் கட்டியால் ஆனவையே. அந்தி சாயும் நேரத்தில் சூரியனின் மஞ்சள் கிரணங்கள் பட்டு தங்கம்போல் ஜொலிக்கின்றன. சிலை வடிக்கும் சிற்பி மொஸ்கோவைச் சேர்ந்தவர். மொஸ்கோவில் வருடாவருடம் நிகழும் புதுவருடத்துக்கு முந்திய ஐஸ் சிலைப் பண்டிகைக்காகத் தயாராகிறார் இவர்.

## மொறு மொறு சிப்ஸ்



நன்றாகப் பாருங்கள். கூடுகளுக்குள் இருப்பவை நாய்கள். எங்கே கொண்டு போகிறார்கள்? இறைச்சிக் கடைக்குத் தான்! வியட்நாமில் குளிர் காலத்தில் அதிகம் உண்ணும் மக்களுக்காக ஆயிரக்கணக்கான கிலோ நாய் இறைச்சி தினமும் விற்பனையாகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகத்தார் வீட்டுப் பொங்கல்

நூலாசிரியர் : எஸ். ஜேசுரட்ணம்
மணிமேகலைப் பிரசுரம்
4, தணிகாசலம் சாலை, தி. நகர், சென்னை.
விலை : இந்திய ரூபா 39/- பக்கம் : 208




"முகத்தார் வீடு" என்ற நேயர்களால் வெகுவாக ரசிக்கப்பட்ட விவசாயக் கருத்துக்களை வழங்கும் வானொலித் தொடர் நாடகமொன்றை சுமார் ஐந்து வருடங்கள் நடத்தியதால் "முகத்தார்" யேசுரட்ணம் என்ற அடையாளப் பெயரில் நிலையூன்றிவிட்ட முன்னாள் பிரபல இலங்கை வானொலிக் கலைஞர் எஸ். யேசுரட்ணம் தன் 12 நாடகங்களைத் தொகுத்து வழங்கியுள்ள நூல் "முகத்தார் வீட்டுப் பொங்கல்".

தற்போது புலம்பெயர்ந்து பரீஸில் வாழும் நாடக ஆசிரியர் தனது படைப்புகளை நூலுருவாக்க வேண்டுமெனக் கொண்டிருந்த ஆதங்கத்திற்குக் களமமைத்து இந்நூலை அச்சிட்டு வெளியிட்டுள்ளனர் சென்னை மணிமேகலைப் பிரசுரத்தினர்.

ஜனாதிபதி விருது பெற்ற கலைஞர் திரு. யேசுரட்ணம் பிரபலமான பல மேடை நாடகங்கள், வானொலி நாடகங்களை எழுதி, நெறியாள்கை செய்திருப்பதுடன் வாடைக்காற்று, கோமாளிகள், ஏமாளிகள், பொன்மணி ஆகிய இலங்கைத் திரைப்படங்களில் நடித்தும் குரல் கொடுத்தும் உள்ளார். பிரான்ஸில் மேடை நாடகங்கள், குறுந் திரைப்படங்கள் போன்றவற்றில் பங்களித்து வருகிறார்.

யாழ்ப்பாணப் பேச்சுவழக்கை மிக அற்புதமாகப் பேசுவதன் மூலம் பல வருடங்கள் இலங்கை வானொலி நேயர்கள் மத்தியில் ஒரு ஹீரோவாகவே மதிக்கப்பட்டவர். கரகரத்த குரலும், எதுகை மோனையில் விளையாடும் அடுக்கு வசனப் பிரயோகமும், கிராமிய நகைச்சுவையும் ஜேசுறட்ணத்தை வெகுஜனப் புகழ்பெற்ற கலைஞனாக நிலை நிறுத்தியது.
எம்மத்தியில் ஒரு காலத்தில் ஜனரஞ்சகச் செல்வாக்குப் பெற்றிருந்த இத்தகைய படைப்புக்களைப் எழுத்தில் பதிவு செய்து தற்போதைய சந்ததியினருக்கு வழங்கும் முயற்சிகள் அர்த்தமுள்ளதும் பாராட்டுதற்குரிய கலைச் சேவையாகவும் நோக்கப்பட வேண்டியவையே.

## அரைகுறை அடிமைகள்

ஆசிரியர் : ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம்
மணிமேகலைப் பிரசுரம்
4, தணிகாசலம் சாலை, தி. நகர், சென்னை.
விலை : இந்திய ரூபா 38/- பக்கம் : 200




இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து லண்டனில் குடியேறி வசிக்கும் பெண் எழுத்தாளர் ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் 14 சிறுகதைகள் அடங்கிய சிறுகதைத் தொகுதி "அரைகுறை அடிமைகள்"

சென்னை மணிமேகலைப் பிரசுரத்தார் இச்சிறுகதைகளை நூலுருவில் வெளியிட்டுக் கொடுத்துள்ளார்கள்.

இதுவரை ஆறு நாவல்களையும் சுமார் 70 சிறுகதைகளையும் தந்துள்ள நூலாசிரியரின் படைப்புக்கள் இந்தியா, இலங்கை, கனடா, பிரான்ஸ், அவுஸ்திரேலியா, ஜேர்மனி, நோர்வே, நெதர்லாந்து, இங்கிலாந்து ஆகிய நாடுகளின் ஏடுகள் பலவற்றில் வெளிவந்துள்ளன.
நீண்டகாலத்துக்கு முன்பு குடிபெயர்ந்துவிட்ட போதும் இவரது சிறுகதைகளில் இலங்கை நிகழ்வுகளும், மண்ணைப் பிரிந்த ஏக்கமும் ஆக்கிரமித்துக் கொண்டிருப்பதை காணமுடிகிறது.
அத்தோடு பெண் உரிமை, தொடர்பான இவரது கருத்துருவங்களும் இக்கதைகளில் காணக் கிடக்கின்றன.
**'இலங்கைத் தமிழ்ப் போராட்டத்தில் தங்கள் உயிர்களை எங்களுக்காகத் தியாகம் செய்த தமிழர்களுக்கு இந்நூல் அர்ப்பணம்'** என்று நூல் முகப்பில் குறிப்பிட்டிருக்கிறார் ஆசிரியர்.
தங்களுக்காகப் போராடுவதை விரும்பியபடி வெளிநாடுகளில் எழுதிக்கொண்டிருப்பவர்கள் பற்றி போராடிக் கொண்டிருப்பவர்கள் என்ன கருதுகிறார்கள் என்பதையும் புலம்பெயர் எழுத்தாளர்கள் தெரிந்து கொள்வது அவர்கள் புல்லரிப்புகள் குறைய உதவுவதாயிருக்கும்.

## கலையாத மேகங்கள்

நூலாசிரியர் : ஒலுவில் அமுதன்
முஸ்லீம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளனம்,
அம்பாறை மாவட்டம்.
விலை : ரூபா 70/- பக்கம் : 105




'மனக்கோலம்', 'மரணம் வரும் வரைக்கும்' என்னும் இரு கவிதைத் தொகுதிகளை ஏற்கனவே வெளியிட்டிருக்கும் ஒலுவில் அமுதன் தந்திருக்கும் சிறுகதைத் தொகுதி **'கலையாத மேகங்கள்'**.
இச்சிறுகதைத் தொகுதியில் 15 சிறுகதைகள் அடங்கியுள்ளன. தான் வாழும் சமூகத்தை தன்னுடைய எழுத்தாற்றல் மூலம் படம்பிடித்து எம்மையெல்லாம் சிந்திக்கவும் வைத்துள்ளாரென இச்சிறுகதைத் தொகுதி குறித்து தனது குறிப்பில் எழுதியுள்ளார் கலாபூஷணம் எஸ். முத்து மீரான்.
பிரபல எழுத்தாளர் ஒருவரிடம் அணிந்துரை கேட்டுப் போனதாகவும், அவர் கதைகளில் கருத்துப் பிழை என்று மறுத்ததாகவும் எனவே, 'வாசகர்களே உங்களிடம் என் கதைகளை மதிப்புரைக்கு விட்டிருக்கிறேன்' என்று தன்னுரையில் குறிப்பிட்டிருக்கிறார் ஒலுவில் அமுதன்.

## தாய்நாட்டு அகதிகள்

நூலாசிரியர் : மாரிமுத்து யோகராஜன்
வெளியீடு : 'விழுதுகள்'
சாகம வீதி, அக்கரைப்பற்று 08.
விலை : ரூபா 50/- பக்கங்கள் : 50




அக்கரைப்பற்றைச் சேர்ந்த திரு. மாரிமுத்து யோகராஜன் தனது கன்னி முயற்சியாக வெளியிட்டிருக்கும் கவிதைத் தொகுதி 'தாய்நாட்டு அகதிகள்'. இன்றையசமகாலப் பிரச்சினைகள், இயற்கை, காதல் ஆகிய விடயங்களைப் பேசும் இக்கவிதைத் தொகுதியில் தாய்நாட்டு அகதிகள் பற்றிய விடயம் அதிக அக்கறைக்குள்ளாக்கப்பட்டுள்ளமை சற்று வேறுபட்ட தன்மையை வெளிப்படுத்துகிறது.
இத்தகைய அறிமுக எழுத்தாளர்களின் ஆர்வமிகு முயற்சிகளுக்கு எப்படி அணிந்துரை தரப்பட வேண்டும் என்பதை எடுத்துக்காட்டும் செ. யோகராசா அவர்களின் அவதானக் குறிப்புகள் பாராட்டப்பட வேண்டியது.
'சிட்டுக்குருவிக்கு ஒரு வரைபடத்தைக் கீறிக் காட்டி அதற்கொப்ப பறக்க வேண்டுமென உத்தரவு போட யாருக்கும் உரிமையில்லை. புதிதாகப் பாட வந்திருக்கும் இந்தக் குயிலுக்கு நாம் வாழ்த்துப் பாடுவோம்' என்று வழிமொழிகிறார் கவிஞர் சோலைக்கிளி.
இக்கவிதைத் தொகுதியை அக்கரைப்பற்று 'விழுதுகள்' கலை இலக்கிய வட்டத்தினர் வெளியிட்டுக் கொடுத்துள்ளனர்.

நூலாய்வு : மாணிக்கவாசகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹற்றன் நஷனல் வங்கியிடமிருந்து
பாதுகாப்பையும் உயர்ந்த வருவாயையும் வழங்கும்

# நீண்ட கால வைப்புச் சான்றிதழ்கள்

**4 வருடகால** வைப்பிற்கு வருடாந்தம் **15%**

**5 வருடகால** வைப்பிற்கு வருடாந்தம் **16%**

(வருடாந்த வட்டி வீதம் 12.5%)

**பெறும் நன்மைகள்:**

- நிறுத்தி வைக்கும் வரி இல்லை.
- முத்திரை வரி இல்லை.
- உயர்ந்த வட்டி வீதம்
- படிவங்கள் நிரப்புவதற்கில்லை. எனவே முற்றிலும் இரகசியமானது.
- முதலீட்டுக் கடன்களுக்குப் பிணையாகப் பயன்படுத்தலாம்.

| காலம் | 4 வருடங்கள் | 5 வருடங்கள் |
|---|---|---|
| வட்டி வீதம் | 15% வருடாந்த வட்டி | 16% வருடாந்த வட்டி |
| தொகை | ரூ. 62,500/- | ரூ. 55,555/- |

**முதிர்வு நிலையில் பெறுமானம் : ரூபாய் 100,000/-**

இவை அனைத்தும், இன்னும் நூறு வருட வரலாற்றுறுதியும் பாரம்பரியமும் மிக்க ஹற்றன் நஷனல் வங்கியின் வாடிக்கையாளர் சேவையும் உங்களுக்காக காத்திருக்கின்றன.

மேலதிக விபரங்களுக்கு முகாமையாளருடன்
இன்றே தொடர்பு கொள்ளுங்கள்.

ஹற்றன் நஷனல் வங்கி
உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

தலைமை அலுவலகம் : 10, ஆர்.ஏ.டி மெல் மாவத்தை, கொழும்பு 03.
தொலைபேசி: 421885-7, 337501-5 பக்ஸ்: 320745

SOMA AHANGAMA ASSOCIATES (PVT) LTD.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பூத்துச் சிரித்திடும் ரண்கெகுளு அதிர்ஷ்டம்

உங்களது ரண்கெகுளு
சேமிப்புக் கணக்கின் மூலம்
பெறுமதியான ஏராளம்
பரிசுகளை வெல்ல
இப்பொழுது
அரியதொரு வாய்ப்பு.

**முதலாம் பரிசு**
10 மல்டி மீடியா கொம்பியூட்டர்கள்

**இரண்டாம் பரிசு**
100 மௌண்டன் பைசிக்கிள்கள்

**மூன்றாம் பரிசு**
10,000 ரண்கெகுளு பாடசாலைப் பைகள்





ரண்கெகுளு கணக்கொன்றை ஆரம்பிப்பதன் மூலமோ அல்லது தற்போதுள்ள ரண்கெகுளு கணக்கில் 1999 ஜூன் மாதம் 30ந் திகதியன்று ஆகக்குறைந்த கணக்கு மீதியாக 3,000 ரூபாவை பேணுங்கள். நீங்களும் ரண்கெகுளு அதிர்ஷ்டச் சீட்டிழுப்பிற்குத் தகுதி பெறுவீர்கள்.

FIRST & FORWARD

இனியுமென்ன தாமதம். உங்கள் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு இன்றே நீங்களும் இலங்கை வங்கியில் ரண்கெகுளு கணக்கொன்றை ஆரம்பித்து சேமிக்கக் கற்றுக் கொள்ளுங்கள்.

ஏற்கெனவே ரண்கெகுளு கணக்கொன்று உங்களிடமிருந்தால் மேலும் மேலும் சேமியுங்கள்.

**ஞாபகமிருக்கட்டும். சேமிப்பதால் உங்களுக்கும் வெற்றி. நாட்டுக்கும் வெற்றி.**

இலங்கை வங்கி
ලංකා බැංකුව Bank of Ceylon
புதிய நூற்றாண்டின் - தேசத்தின் ஒளிவிளக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org